www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 11 | பெப்ரவரி 2004 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 66

- பண்டா- செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டமை. டட்லி-செல்வா ஒப்பந்தம் கைவிடப்பட்டமை. மாகாணசபை சட்டத்தின் கீழ் உறுதி செய்யப்பட்ட உரிமைகளை மாகாணங்களுக்கு வழங்க மறுத்தமை அவற்றின் சில அதிகாரங்களை சட்டத்திருத்தத்தின் மூலம் பறித்தமை என்பன இலங்கை முதலாளித்துவ. ஏகாதிபத்திய சார்பு. பேரினவாத அரசு தமிழ் மக்களுடன் அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளுவதற்கு தெரிவித்த மறுப்புகளாகும்.
- தமிழ் மக்களின் உரிமைக்கோரிக்கைகளை மறுத்து அவர்களை அடக்கியும் ஒடுக்கியும் வந்ததுடன் அவர்கள் மீது யுத்தத்தை நடத்தியமை பேரினவாதத்தின் மேலாதிக்கத்தை நிலைநாட்ட எடுத்த பயங்கரவாத நடவடிக்கைகளாகும்.
- பிரதமர் ரணில் தலைமையிலான ஐ.தே.மு. அரசாங்கம் சமாதான பேச்சுவார்த்தைகளை தொடராததும் வடக்கு -கிழக்குப் பிரதேச இடைக்கால நிர்வாகத்திற்கான விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யோசனைகளை பரிசீலிக்காமையும் பௌத்த சிங்கள பேரின மேலாதிக்கத்தின் தயக்கங்களின் வெளிப்பாடாகும்.
- ஐ.தே.மு. யினது சமாதான நடவடிக்கைகளை ஆதரிக்காத ஜனாதிபதி சந்திரிக்காவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் சாதாரண அதிகார பரவலாக்கலைக் கூட ஏற்காத ஜே.வி.பி.க்குமிடையிலான கூட்டு உடன்படிக்கை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான அரசியல் தீர்வு காண்பதற்கு எதிரான பௌத்த சிங்கள பேரினவாதத்தின் இன்னொரு உரிய எதிர்ப்பு நடவடிக்கை ஆகும்.

# சமாதான சூழ்நிலையிலும் தொடரும் பேரின மேலாதிக்க நடவடிக்கைகள்

கடந்த ஏப்ரல் மாதத்துடன் பேச்சுவார்த்தையை தொடர்ந்து முன்னெடுக்கவும் பிரதமர் ரணில் நடவடிக்கை எடுக்கவில்லை. இடைக்கால நிர்வாகம் தொடர்பாக புலிகளின் யோசனைகளுக்கு பதிலளிக்கவும் இல்லை. ஆனால் நவம்பர் மாதம் 4ம் திகதி ஜனாதிபதி ஐ.தே.முவிடம் இருந்து பாதுகாப்பு, ஊடகம், உற்றுறை ஆகிய அமைச்சுக்களை எடுத்துக் கொண்டதால் சமாதான நடவடிக்கை களை முன்னெடுக்க முடியவில்லை என்று கூறி வருகின்றார்.

சுதந்திரக்கட்சியும் ஜே.வி. பி.யும் ஜனவரி 20 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை செய்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாகியுள்ளன. வெளிநாட்டு முதலீடுகளை எதிர்க்காத தேசிய பொருளாதாரம் பற்றி அவர்களின் உடன்படிக்கை கூறுவதுடன் ஆட்சிக்கு வந்தால் புலிகள் இயக்கத்துடனும் சம்மந்தப்பட்ட எல்லா தரப்பினருடனும் நிபந்தனைகளுடன் வெளிப்படையாக பேச்சுவார்த்தை நடத்தப்படும். இனப்பிரச்சினைக்கு தீர்வு என காணப்படும் தீர்வு யோசனைகள் மக்களின் தீர்ப்பிற்காக விடப்படும் என்று கூறுகிறது. சுதந்திரக்கட்சி இனப் பிரச்சினைக்கு அதிகாரப் பங்கீட்டின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று நம்புவதால் அதற்காகப்பாடுபடுமாம். ஜே.வி.பி. அதிகாரப் பங்கீட்டை ஏற்காதபடியால் அதற்கு எதிராக செயற்படுமாம்; பிரச்சாரம் செய்யுமாம்.

ஜனாதிபதி சந்திரிகா ஐ.தே.மு. புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு, யுத்த நிறுத்த உடன்படிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கப்போவதாகவும், பேசப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சி ஜே.வி.பி கூட்டு உடன்படிக்கை காரணமாக யுத்த நிறுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரவோ, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முடிவிற்கு கொண்டுவரவோ போவதில்லை என புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது. ஆனால் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை ஏற்றுக் கொண்டு ஐக்கிய இலங்கைக்குள் அவர்களின் தேசிய அபிலாஷைகளை உறுதிசெய்யும் அடிப்படைகளை ஏற்றுக் கொள்ளும் அரசாங்கத்துடனேயே பேச்சுவார்த்தையை நடத்த முடியும் என்றும் கூறியுள்ளது.

எனவே இலங்கையில் அரசாங்கத்தில் இருப்பவர்கள் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை உறுதி செய்யும் தீர்வு அடிப்படைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். இனி அரசாங்கத்தை அமைக்கப் போகிறவர்கள் அரசாங்கத்தை அமைத்தவுடனாவது அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வும் இல்லை. நிரந்தர யுத்த நிறுத்தமும் இல்லை என்பது தெளிவாகிறது.

நிறுவனப்படுத்தப்பட்டிருக்கும் பேரின வாதம் யுத்தத்தினால் மட்டுமன்றி சமாதான சூழலிலும் ஏனைய தேசிய இனங்களின் மீது அதனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்திக்

தொடர்ச்சி 11ம் பக்கம்



# பேரினவாதத்திற்கு எதிரான ஐக்கியம் காலத்தின் அவசியம்



வடக்கு கிழக்கையும், மலையகத்தையும் சேர்ந்த அனைத்து தமிழ் கட்சிகளும் பேரினவாதத்திற்கு எதிரான பொது வேலைத்திட்டத்தின் கீழ் பொது இணக்கப்பாட்டுடன் கூட்டிணைந்து செயற்பட வேண்டும் என்பது வரவேற்கக் கூடியதாகும். கூட்டிணையும் கட்சிகள், பொது அமைப்புக்களிடையே சமத்துவம், ஜனநாயகம், ஐக்கியம் என்ற அடிப்படையில் அக்கூட்டிணைவு அமைய வேண்டியது அதற்கான மிகவும் அடிப்படையான நிபந்தனையாக இருக்க வேண்டும்.

பௌத்த சிங்கள பேரினவாதத்தினால் அடக்கப்படுகின்ற தமிழ், முஸ்லிம், மலையகத்தமிழ் மக்களின் பேரினவாதத்திற்கு எதிரான போரட்டங்களிலும், அவர்களின் தேசிய அபிலாஷைகளை உறுதி செய்து கொள்வதற்கான தீர்வு திட்டங்களிலும் வித்தியாசங்கள் இருக்கும் என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு. பேரினவாத அடக்குமுறை என்ற ரீதியில் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களின் பிரதான எதிரியான பேரினவாதத்திற்கு எதிரான ஜனநாயக பூர்வமான வேலைத்திட்டத்துடன், ஜனநாயக ரீதியான பொது இணக்கத்துடன் கூடிய பொறிமுறையுட னான. கூட்டிணைவே ஆரோக்கியமான அணுகு முறை ஆகும்.

வடக்கு கிழக்கு மலையகத்தமிழ் கட்சிகள் ஒன்றாக தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்தில் ஆசனங்களின் எண்ணிக்கையை கூட்டிக் கொள்வது என்பதை விட பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக அக்கட்சிகள் ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பொது இணக்கத்துடன் அரசியல் போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே மிகவும் முக்கியமானதாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வடக்கு கிழக்கு மலையகத் தமிழ் கட்சிகள் ஐக்கியப் படுவதன் அவசியம் பற்றியும் எதிர்வரும் தேர்தல்களில் அவை ஐக்கியப்பட்டு போட்டியிடுவதன். அவசியம் பற்றியும் வலியுறுத்தியுள்ளார். அதற்கான விருப்பத்தை

தொடர்ச்சி 11ம் பக்கம்.

# இலங்கை இந்தியாவின் காலனியாகும் அபாயம்

இவ்வருட இறுதியில் நடைபெற விருக்கும் இந்திய பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பதாக இலங்கை இந்தியாவுடன் பாதுகாப்பு உடன் படிக்கை யொன்றை செய்து கொள்ள வேண்டும் என்பதில் இந்திய பாரதீய கட்சியின் இந்துத்துவ அரசாங்கம் மிகவும் ஆர்வமாக இருக்கிறது.

கடந்த இரண்டு வருட கால சமாதான சூழ்நிலையில் இலங்கையிலிருந்து பிடுங்கியது ஆதாயம் என்ற நோக்கில் வெளிநாடுகள் அதிகமாகவே நன்மையடைந்துள்ளன குறிப்பாக இந்தியாவே அதிகமான நன்மையடைந்துள்ளது. இலங்கையின் வர்த்தகத்தில் அதிகமான இடத்தை இந்தியா பெற்றுக் கொண்டுள்ளது. சமாதான சூழ்நிலையை பயன்படுத்தி விடுதலைப் புலிகள் இயக்கம் அதிகமாக நன்மை யடைந்துள்ளதாக இந்தியா குற்றம் சாட்டிவந்தாலும் இந்தியாவே அதிகம் நன்மையடைந்துள்ளது.

1987ம் ஆண்டு இலங்கை இந்திய உடன்படிக்கை இன்னும் செல்லுபடியானதாகவே இருக்கிறது. அதில் இலங்கைக்கு இராணுவ பயிற்சி இராணுவ உதவிகள் இந்தியா வழங்கும் என்ற ஏற்பாடும் இலங்கையின் இராணுவ பிரச்சினைகளை - பாதுகாப்பு பிரச்சினைகளை தீர்ப்பதில் வேறெந்த நாட்டையும் அணுகுவதற்கு முன்பு இந்தியாவையே அணுக வேண்டிய உட்கிடையான நிர்ப்பந்தமும் இருக்கிறது. இது இவ்வாறிருந்த போதும் பாதுகாப்பு உடன்படிக்கையை செய்து கொள்ளும்படி இந்தியா இலங்கைய்யை நிர்ப்பந்தித்து வருகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவின் ஐ.தே.மு அரசாங்கம் அதிகமாகவே அமெரிக்க ஐரோப்பிய சார்பு நிலைப்பாட்டை எடுத்ததுடன் அவற்றின் தலமையிலான சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலுடன் இலங்கையை இணைப்பதிலும் அக்கறை

தொடர்ச்சி 12ம் பக்கம்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# விரும்பத்தகாத மலையக கல்வி அதிகாரி

ஆசிரியர்களை தகாத வார்த்தைகளால் பேசுவதும், அவர்களை தரக்குறைவாக நடத்துவதும் நிந்திப்பதும் பற்றி மத்திய மாகாண கல்வி அதிகாரி எஸ்.ஜோசப் மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படு கின்றன. அவருக்கு எதிராக சில ஆசிரியர்கள் வழக்குகளையும் தொடுத்துள்ளனர். கல்வி அமைச்சுக்கு சில ஆசிரியர் சங்கங்களும் முறைப்பாடு செய்துள்ளன.

புதிய பூமியும் அவரின் அத்துமீறிய செயல்கள் பற்றி செய்திகளை வெளி யீட்டுவந்துள்ளது. எனினும் இன்னும் இன்னும் அவர் பற்றிய செய்திகள் புதிய பூமிக்கு கிடைத்த வண்ணம் இருக் கின்றன. பல செய்திகளை புதியபூமி வெளியிடாது தவிர்த்துள்ளது. எமது ஆய்வின்படி எமக்கு கிடைக்கும் செய்திகளில் உண்மை இல்லாமல் இல்லை.

தனிப்பட பெயர்குறித்து எவருக்கும் எதிராக செயற்பட வேண்டிய அவசிய மில்லை. ஆனால் அதிகார துஷ்பிர யோகம், அத்துமீறல்கள், அநாகரிகமான நடவடிக்கைகள் என்பனபற்றி முறைப் பாடு செய்யப்படும் போது அவற்றை அம்பலப்படுத்தும் பொறுப்பிலிருந்து நாம் விலகி நிற்கமுடியாது.

ஜனவரி 21ம் திகதி ஒரு ஆசிரியர் அவரது தகுதி அடிப்படையிலான சட்டபூர்வமான இடமாற்றத்தை பற்றி கதைப்பதற்கு மத்திய மாகாண கல்வி அமைச்சுக்கு சென்று மேற்குறிப்பிட்ட கல்வி அதிகாரி ஜோசப்பை சந்தித் துள்ளார். அவ்வாசிரியர் புதிய ஜனநாயக கட்சிக்கு ஆதரவாக இருப்பதாக கூறி அதனால் அவருக்கு இடமாற்றம் கிடையாது என்று மறுப்பு தெரிவித்த துடன் தகாத வார்த்தைகளாலும் நிந்தித்துள்ளார் அக்கல்வி அதிகாரி.

ஆசிரியர்கள் அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாளர்களாக மட்டுமல்ல, அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்களாகவும் தலைவர்களாகவும் கூட இருக்க முடியும் என்பது அந்த மெத்தப்படித்த அதிகாரிக்கு தெரியாமல் இருக்க முடியாது. ஆசிரியர்களுக்கு செய்து கொடுக்க வேண்டியவற்றை செய்து கொடுப்பதற்காகதான் அவர் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். என்பதையும் அவர் அறியாதவர் அல்லர்.

அவரிடம் செல்லும் ஆசிரியர்களின், ஆசிரியைகளின் ஆசிரியர் சங்கம், அரசியல் கட்சி, குலம் கோத்திரம், சாதி சமயம் பற்றியெல்லாம் ஆராய்ந்து அதற்கு ஏற்றபடி நடந்தால் அதற்கு பெயர் நிர்வாகமல்ல; நிர்வாக முறைக் கேடும், பாரபட்சமான நிர்வாகமும் ஆகும்.

அவருடைய அத்தகைய செயல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருவதுடன் மேலதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டு வருகிறது. அவர் அவரின் அவ்வாறான நடவடிக்கை களை நிறுத்தாவிட்டால் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களின் விரும்பத்தகாத அதிகாரியாவார். அதனால் ஏற்படப் போகும் அமைதி யீனங் களால் மாணவர்களின் கல்வியும், பாடசாலைகளின் அபிவிருத்தியும் பாதிக்கப்படும்.

# புகையிரத ஊழியர்களின் வேலை நிறுத்தம்

புகையிரதங்கள் ஓடவும் இல்லை. புகையிரத நிலையங்கள் இயங்கவும் இல்லை. புகையிரத சேவையிலுள்ள சிற்றூழியர்களிலிருந்து உயர் அதிகாரிகள் வரை அனைவரும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் கோரிக்கையை அரசாங்கம் கணக்கில் எடுப்பதாக இல்லை. புகையிரத பயணிகள்- குறிப்பாக வேலைக்கு செல்வோர் மிகவும் சிரமப்படுகின்றனர்.

அரசாங்கம் திணைக்களத்தின் கீழ் இயக்கப்படும் புகையிரத சேவையை அதிகாரசபை ஒன்றிற்கு கீழ்கொண்டு வர தீர்மானித்துள்ளது. அந்தத் தீர்மானத்திற்கு எதிராக புகையிரத சேவையிலுள்ள அனைத்து ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். புகையிரத சேவையை அதிகாரசபை ஒன்றின் கீழ் கொண்டுவரும் போது ஆட்குறைப்பு, புதிய வேலை நிபந்தனைகள் போன்றவற்றால் ஊழியர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி புகையிரத சேவை ஊழியர்களின் சங்கங்கள் அரசாங்கத்திடம் எடுத்துக்கூறியுள்ள துடன் அத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தவுள்ள உத்தேச புகையிரத அதிகார சபை முறையை கைவிடும்படி கேட்டும் வந்தன.

அதிகாரசபையின் கீழ் கொண்டுவரும் நடவடிக்கை புகையிரத சேவையை தனியார் மயமாக்குவதற்கான முதல் நடவடிக்கை யாகும். இலங்கை புகையிரத சேவையை இந்திய புகையிரத கம்பெனிக்கு விற்பதற்கு பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. ஒரேயடியாக தனியார் மயமாக்கும்போது மக்களினதும் ஊழியர்களினதும் எதிர்ப்பை சமாளிக்க முடியாது போய்விடலாம் என்பதாலேயே மெல்ல மெல்ல தனியார் மயமாக்கும் தந்திரோபாயமான நடவடிக்கை களை எடுக்க அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை களால் புகையிரத சேவையிலுள்ள ஆயிரக்கணக் கான ஊழியர்களின் தொழிலுக்கு பாதுகாப்பில்லாமல் போவது மட்டுமல்ல சாதாரண பயணிகளும் பாதிக்கப்படுவர்.

ஒப்பீட்டு அளவில் புகையிரத சேவை மட்டுமே குறைந்த கட்டணத்துடன் இலங்கையின் சாதாரண மக்கள் பயணம் செய்யக்கூடிய போக்கு வரத்துச் சேவையாக இருக்கிறது. அச்சேவை அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்படும்போது கட்டணங்களும் உயர்த்தப்படலாம். அதனால் சாதாரண மக்கள் குறிப்பாக வேலைக்கு செல்லு கின்ற கஷ்டப்பட்ட தொழிலாளர்களே பாதிக்கப்படுவர்.

ஏற்கனவே பஸ் போக்குவரத்து தனியார் மயமாக்கப்பட்டதால் நமது நாட்டு பஸ் பயணிகள் படுகின்ற அவலம் தெரிந்ததே. பஸ் பயணிகள் தனியார் பஸ் சொந்தக்காரர்கள் என்ற மாபியாவிடம் சிக்கிக்கொண்டிருப்பது தெரிந்ததே. அதே நிலைமை புகையிரத சேவைக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது.

எனவே புகையிரத சேவை ஊழியர்களின் 30 தொழிற்சங்கங்கள் ஐக்கியப்பட்டு நடத்தும் வேலை நிறுத்தம் வெற்றி பெற வேண்டும்.

# கல்வி படிப்படியாகத் தனியாரிடம் பாட நூல் வெளியீடு செய்லும் திசை

கணிதம், தமிழ், சிங்களம், ஆகிய பாடங்களுக்கு மூன்று வகையான புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 6ம் ஆண்டிற்கான கணிதபாடத்திற்கு மூன்று வகையான புத்தகங்கள் வெளியாகியுள்ளன. அதே போலவே தமிழ், சிங்களத்திற்கும் இந்தத் திட்டம் வெற்றியளித்தால் ஏனைய பாடங்களுக் கும் அது விஸ்தரிக்கப்படும்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் கணிதம், தமிழ், சிங்களம், ஆகிய பாடங்களுக்கு மூன்று வகையான புத்தகங்கள் அனுப்பப் பட்டுள்ளன. ஆறாம் தரத்து கணித ஆசிரியை ஒரு குறித்த கணிதப் புத்தகத்தைத் தேர்தெடுத்தால் சம்பந்தப் பட்ட பாடசாலைக்கு அந்த வகையான கணிதப் புத்தகங்கள் வழங்கப்படும். கணிதத்தில் மற்ற இரண்டு வகையான புத்தகங்கள் நூலகத்திலும் கடைகளிலும் வைக்கப்படுமாம்.

அதே சமயம் மற்றொரு பாடசாலையில் வேறு ஒரு கணித ஆசிரியர் வேறு ஒரு புத்தகத்தைத் தேர்தெடுக்காலம் இந்தத் தடவை 6ம் ஆண்டிற் பயன்படுத்தப்படும் கணிதப் புத்தகம் அதே பாடசாலையில் அடுத்த ஆண்டு பயன் படுத்தப்படும் என்பதற்கு உத்தரவாதமில்லை. அடுத்த வருடம் வேறு ஒருபாடசாலையிலிருந்து மாற்றமாகி வரும் கணித ஆசிரியர் முன்பு பயன்படுத்திய கணிதப் புத்தகத் தை விடுத்து வேறு புத்தகத்தை தேர்ந் தெடுக்கும் சாத்தியம் ஏற்படலாம்.

இந்தத் திருவிளையாடல்கள் பற்றி முதலில் அதிபர்களுக்கே அறிவிக்கப் பட்டது. சில பாடசாலை ஆசிரியர் களுக்கு இப்போதுதான் விசயம் தெரிய வந்துள்ளது. அது மட்டுமல்ல ஒவ்வொரு வகையான புத்தகங்களையும் பதிப்பித்த அச்சகங்கள் பாடசாலை அதிபர்களை அணுகித் தமது புத்தகங்களையே சிபார்சு செய்யுமாறு கேட்டுள்ளனர். பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர் களுக்குப் பதிலாக அதிபர்களே பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் அதிகம் என்பது சொல்லா மலே புரியும். 6ம் ஆண்டிற்கான சம்பந்தப் பட்ட பாடநூல்கள் மாணவர்களைச் சேர இந்த ஆண்டு முடிவடைந்து விடும். இதனால் அச்சகங்களும் நூல் ஆசிரியர்களும் மட்டும் பயன் பெறுவர். இது படிப்படியாக கல்வி தனியாரிடம் போய்ச் சேரவுள்ளதையே முன்னறிவுப் புச் செய்வதாக உள்ளது.

இந்த பாடநூல்களை தயாரிப்பவர் களுக்கு தயாரிப்பு உரிமை வழங்கப்பட வுள்ளது. இது வரை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட புத்தகங்களின் ஆக்க

தொடர்ச்சி 4ம் பக்கம்.

புதிய பூமி
வட புலத்தில்
ஏக விநியோகம் விற்பனை
வசந்தம் புத்தக நிலையம்
405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

புதிய பூமியின் வளர்ச்சிக்கு
- நிதி உதவுங்கள்
- சந்தா அனுப்புங்கள்
- விற்பனைப் பணத்தை அனுப்பிவையுங்கள்
- கட்டுரைகள் - செய்திகள் - கருத்துக்கள் அனுப்புங்கள்

ஆசிரிய பீடம் / நிர்வாக பீடம் :
S-47, 3வது தளம், கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
(C.C.S.M. Complex) கொழும்பு - 11, இலங்கை.
Tel: 2435117, 2335844 Fax : 01-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

பணம் அனுப்பும் வங்கி விபரம் : சோ. தேவராஜா
கணக்கு இலக்கம் : 0672-21-2002634-6
Bank of Ceylon, Central Super Market, Colombo 11.

# நாலு நடக்கும் நற்குணம் உலகிலே

## நல்ல இடத்து சம்பந்தம்?

இம் முறை, நவசமசமாஜக்கட்சி தனது மாநாட்டுக்கு அழைந்த பிரதம விருந்தினர் யாரென்றால் அசந்து போவீர்களா? இல்லை! புதிய இடதுசாரி முன்னணி என்ற திருட்டுப் பேரில் அரசியல் வியாபாரம் நடத்துகிற இவர்கள் என்னவும் செய்வார்கள் என்று உங்களுக்கு விளங்கும். இரா சம்பந்தனுக்கும் இடதுசாரிச் சிந்தனைக்கும் உள்ள உறவு அமாவாசைக்கும் பெளர்ணமி நிலவுக்கும் மாதிரி என்று சொல்லலாம். அவரைப் போய் ஒரு ட்ரொட்ஸ்கியக் கட்சி அழைப்பதென்றால்? சோழியன் குடுமி சும்மா ஆடுமா என்பார்கள். மாகாணசபைத் தேர்தல் வரப் போகிறதல்லவா. த.வி.கூட்டணிக்கு ஐஸ் வைத்தால் உதவுமல்லவா. பாவம் கூட்டணியே பிளவுபட்டுக் கிடக்கிறது. ஆனந்த சங்கரியாருக்கு சமசமாஜக் கட்சி மகா வரவேற்பு மட்டுமில்லாமல் முஸ்லிம் தேசியவாதி அரசியல்வாதிகட்கும் நல்ல வாரப்பாடு. என்றாலும் கொழும்பில் வோட்டுச் சேர்க்க உதவுவாரோ தெரியாது.

இதற்கு முன்பு குமார் பொன்னம்பலத்தின் ஆட்களுடன் ந.ச.ச.கட்சித் தலைவருக்கு இருந்த நெருக்கம் இப்போது விட்டுப் போய்விட்டது. விரலுக்கு ஏற்ற வீக்கம் என்று சம்பந்தனைப் பிடித்தாரா? கழுதை கெட்டால் குட்டிச் சுவர் என்ற மாதிரிக் போய் ஒட்டிக் கொண்டாரா?

## ரகசியம் பரம ரகசியம்

அமைச்சர் ரவூஃப் ஹக்கீம் இடைக்கால நிருவாகம் பற்றிய தனது கட்சியின் ஆலோசனைகளை யாருக்கும் இப்போதைக்குக் காட்டமாட்டாராம். உரிய நேரம் வரும் போது தான் வெளிப்படுத்துவாராம். அவரது ஆலோசனைகள் என்ன க.பொ.த. வினாத்தாளா இரகசியமாக வைக்க? பயனுள்ள ஆலோசனைகளானால் மக்கள் எல்லாரும் முன் கூட்டியே அறிவது நல்லதல்லவா அல்லது அரசியல் என்பது அரசியல் வாதிகள் காதுக்குள் குசு குசுக்கிற விடயமா?

## தூற்றலும் தூவானமும்

தன் மீதான விமர்சனங்களுக்கு மறுமொழி சொல்ல முடியாது போனால் . மற்றவர்கள் மீது அபாண்டமான பழிசுமத்தி உண்மைகளைத்திரித்து எழுதுவதில் தேர்ச்சி பெற்ற ஒரு முன்னாள் இலக்கியவாதி, இப்போது நோட்டிஸ் அடித்து விநியோகிக்கிறார். புலிகளுக்குத் தான் நெருக்கமானவர் என்று தன்னைக் காட்டிக் கொள்ளும் இக் கோள் மூட்டியார் பற்றிய ஒரு சிறு தகவல் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தமிழர் விரோத, குறிப்பாக விடுதலைப் புலிகள் விரோத, பிரசாரத்தில்,மும்முரமாகக் களம் இறங்கியுள்ள ஒரு முஸ்லிம் பதிப்பாளர், நம்முடைய கோள்மூட்டியாருடைய பழைய பத்திகளைத் திரட்டிப் புத்தகமாக வெளியிடக் கைகொடுத்துள்ளார். போதாமல், கோள்மூட்டியாருடைய நேர்காணல் ஒன்றையும் பெற்றுப் பிரசுரித்திருக்கிறார். இது வணிகக் கூட்டா வஞ்சகக் கூட்டா?

## பின்வாங்கலா, மிரட்டலா?

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து பின்வாங்குதாகப் ரணில் விக்கிரமசிங்} அறிவித்ததன் நோக்கம் என்ன? விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்குவதற்கு அவரால் இயலாது போனதற்குச் சனாதிபதி ஒரு நல்ல சாட்டு எடுத்துச் கொடுத்தார். ரணிலின் அரசாங்கம் அமைதி பற்றிய தனது ஆர்வத்தை வற்புறுத்தும் விதமாக எதுவுமே செய்யாமல் மேலும் மேலும் தன் இயலாமையை வற்புறுத்துகிற காரியங்களையே முன்னெடுத்து வந்துள்ளது. கடைசியாக வந்த இந்த அறிவித்தலை நோக்கினால் இனி வடக்கு கிழக்கில் மோதல் நடந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல என்பதற்கு மேலாகப் பிரதமர் எதையும் சொல்வதாகத் தெரியவில்லை.

இரண்டு ஆண்டுகளாக அமைதிப் பேச்சு வார்த்தைகள் மூலம் போர் நிறுத்தத்தை விடப் பெரிதாக எதுவுமே சாதிக்கப்படவில்லை. இந்த இயலாமைக்கு என்ன காரணம்? சனாதிபதியின் நோக்கம் என்னவானாலும் சமாதானத்துக்கு ஆதரவான சக்திகளைத் திரட்ட இந்த அரசாங்கம் செய்ததென்ன? இன்றைய மிரட்டல் பறிக்கப்பட்ட அமைச்சுக்களை மீட்கும் நோக்குடையதா அல்லது இந்த அரசாங்கத்தின் ஒரே பயனுள்ள சாதனையையும் தூக்கி எறிவதா? இந்த மிரட்டல் தமிழ் மக்களுக்கு எதிரானதும் ஆகுமா?

அதே வேளை பிரதமர் தனது அதிகாரத்தை நிலைநாட்ட என்ன செய்யலாம் என்பதற்கான ஆலோசனைகள் அவரது கட்சிக்கு வெளியே இருந்து தான் வருகின்றன.

த.வி.கூட்டணியின் புதிய தலைவராக அறிவிக்கப்பட்டு நீதிமன்றத் தடையுத்தரவு காரணமாக அதை ஏற்க இயலாதுள்ள ஜோசப் பரராஜசிங்கம் அரசாங்கமும் சனாதிபதியும் ஒத்துழைக்கும் தேவையை வற்புறுத்தியுள்ளது வரவேற்கத்தக்கது. ஆனால் சனாதிபதி தான் பறித்த அமைச்சுக்களை மீளத்தந்து ஒத்துழைக்க வேண்டு மென்று வற்புறுத்துவது இப்போதைக்கு அவசியமா? முதலில் பிரதமர் விடுதலைப்புலிகளின் ஆலோசனைகள் பற்றிச்சுயமாக ஒரு முடிவுக்கு வரட்டும்!

## கூழ்முட்டையால் தான் பாழ்பட்டதாம் !

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1963க்கும் பிறகு கண்ட சரிவுச்கான காரணம் ஏதென்று நாற்பது ஆண்டுகளின் பின்பு பேராசிரியர் சிவத்தம்பி கண்டறிந்து ஞானம் ஏட்டில் சொல்லியுள்ளார். நம்பினால் நம்புங்கள்.

யாழ்ப்பாணத்தில் நடந்த சாகித்திய மண்டலக் கூட்டத்தில் சாதியநோக்கில் இழிசனர் வழக்கு என்ற கருத்தை ஒருவர் முன்வைத்ததன் தொடர்ச்சியாக நடந்த கூழ்முட்டை அடிப்புக் காரணமாக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துக்கு ஆதாரவாக இருந்தவர்கள் ஒதுங்கிவிட்டார்களாம். அதன்பின்பு மு.போ.எ.ச. படுத்தபடுக்கை ஆகிவிட்டது போலும் . ஒதுங்கினோர் எங்கே போனார்கள்? 1963க்குப் பிறகு மு.போ.எ.ச. திரிபுவாதிகளது ஆதிக்கத்துக்குட்பட்டதற்கும் அதன் சரிவுக்கும் உறவில்லையா? பேரினவாதிகளை எதிர்க்கத் திராணியற்ற மு.போ.எ.ச, சாதியத்துக்கு எதிராகக் குரல் கொடுத்துப் போராடினோரை ஆதரித்து நின்றதா? சுண்ணாம்பில் இருக்கிறது சூட்சுமம் என்கிறமாதிரிச் சுலபமான விளக்கங்களைத் தருவது எளிது. சுயவிமர்சனத்துக்கு அதிலுங்கூடிய நேர்மையான சிந்தனை தேவைப்படுகிறது.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்




# யார் கையில் திறப்பு?

யாழ் பொதுசன நூலகத்தின் துயரமிகு வரலாறு யாவரும் அறிந்ததேயாகும். அத்தனை இழப்பிற்குப் பின்பும் புனரமைக்கப்பட்டு திறப்பு விழாவிற்கு தயாரன நேரத்திலேயே திறக்க விடாது தடுக்கப்பட்டது. அதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டன. இருப்பினும் அவ்வேளை நூலகத்தின் 95 சத வீதமான வேலைகள் பூர்த்தியடைந் திருந்தன என்றே சொல்லப்பட்டது. அது உண்மையும் கூட.

அன்று யாழ் நகர முதல்வராக இருந்த செல்லன் கந்தையனும் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் கூட்டணியின் சிரேஷ்ட தலைவருமான வீ.ஆனந்தசங்கரியும் நூலகத்தைத் திறக்க இருந்த தருணத்திலேயே அது தடுத்து நிறுத்தப்பட்டது. இது பழைய கதை இதைக் கிளறினால் சிலருக்குப் பிடிக்காது.

சரி இப்போது யாழ் நூலகத்தைத் திறப்பதில் என்ன தடைதாமதம். யாழ் மாநகர சபை ஆணையாளரின் கீழ் இயங்கி வருகிறது. பல பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அல்லது சாதாரண ஒரு நகரத்தின் மூத்த பிரஜையினால் திறந்து வைக்கலாமே. நூலகம் அழகாகக் காட்சி தருகிறது. நூல்களும் பல ஆயிரம் கணக்கில் கிடந்து தூசு பிடிக்கிறது. வெளிநாடுகளில் வாழும் நம்மவர்கள் இது வரை யாழ் நூல் நிலையத்திற் கென நிறைய நூல்கள் அன்பளிப்புச் செய்துள்ளனர்.



வெளிநாடுகளின் தூதரகங்களும் வாரி வழங்கியுள்ளன.

அப்படி இருந்தும் மக்களின் மாணவர்களின் பாவனைக்கு யாழ் பொதுசன நூலகம் மறுக்கப்படுவது ஏன்? இதன் பின்னால் யார் யார் இருக்கிறார்கள், அத்தகையவர்கள் நூலகத்தைப் பூட்டி வைப்பதால் அடையும் நன்மைதான் என்ன?

இன்றைய உலகமயமாதலின் நச்சுச் சூழல் ஒவ்வொரு வரினதும் வாசிப்புத் திறனை மழுங்கடித்து சிந்தனையைத் திசை திருப்பி வருகின்றது. இந்நிலையில் நூல்கள் படிப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் நூலகங்கள் செயற்பட வேண்டும் என்றே சமூக அக்கறையாளர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். அப்படிஇருக்க ஒரு முக்கியத்துவம் வாய்ந்த யாழ் பொதுசன நூலகம் பாவனைக்கு விடப்படாது பூட்டி வைத்திருப்பதில் என்ன நியாயம் இருக்கிறது. யாருடைய கைகளில் அதன் திறப்புகள் உள்ளனவோ அவர்கள் நூலகத்தைத் திறந்து மக்களுக்கு மாணவர்களுக்கு படிப்பதற்கும் பயன் பல பெறுவதற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்ய வேண்டும்.

# தொழிலாளர் வேலை நீக்க அறிவித்தல்

ஐக்கிய தேசியக் கட்சியும் அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தொழிலளார் விரோதக் கட்சிகளும் இணைந்துள்ள அரசாங்கம் தனது கேடுகெட்ட தொழில்ளார் விரோதச் சட்டங்களை கொண்டு வருவதில் முன்னின்று வருகின்றது. கடந்த டிசம்பர் மாதம் 31ம் திகதி (31-12-2003)அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலில் முதலீட்டு நிறுவனங்கள் தமது ஊழியர்கள் தொழிலளர்களை சிறிய தொகை நட்ட ஈட்டுடன் தொழில் ஆணையாளரின் அநுமதியுடன் வேலை நீக்கம் செய்யலாம் எனப் பிரகடனப் படுத்தியுள்ளது. இவ்வர்த்தமானி அறிவித்தல் உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டார்களுக்கு மிகப் பெரும் வரப்பிரசாதமாகும். இதன் மூலம் யூஎன்.பி.யின் வக்கிரமான வர்க்கப் புத்தி எத்தகையது என்பதை வெளிக்காட்டி யுள்ளது. இதனால் பல லட்சம் தொழிலாளர்கள் அற்ப நஷ்டஈட்டுடன் நடுத் தெருவுக்கு கலைக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

இதன் விளைவாகத் தாமதமின்றியே சில நிறுவனங்கள் தமது ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பத் தொடங்கியுள்ளன. இரத்மலானையில் உள்ள அஸ்பெஸ்ரேஸ் சீமெந்து லிமிட்டெட் நிறுவனம் 225 ஊழியர்களை வேலை நீக்கம் செய்வதாக தொழில் ஆணையாளருக்கு அறிவித்துள்ளது. அவ்வாறே மலேபேயில் இயங்கும் யப்பானிய நிறுவனமான சாட்டோ கெம்பா 250 ஊழியர்களை வேலை நீக்கம் செய்வதற்காக நிரந்தர ஊழியர்கள் அனைவரையும் வேலைக்கு வராதபடி தடுத்துள்ளது.

அவ்வாறே வத்தளையில் இயங்கி வந்த மஸ்கன் லிமிட்டெட் முற்றாகவே மூடி ஊழியர்களை வீதியில் நிறுத்த தொழில் ஆணையாளருக்கு அறிவித்தல் செய்துள்ளது. மேற்படி வர்த்தமானி அறிவித்தல் செய்த பத்து நாட்களில் 500க்கு மேற்பட்ட ஊழியர்கள் தொழிளார்கள் வேலையை விட்டுத் துரத்தப்பட்டுள்ளனர்.

பதின்எண்ணாயிரம் ஊழியர்களைக் கொண்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அண்மைக்காலத்தில் தான் தனியார் கைகளுக்கு தாரை வார்க்கப்பட்டது. இப்போது அதன் நிர்வாகம் எண்ணாயிரம் ஊழியர்களை அப்புறப்படுத்த முடிவு செய்துள்ளது.

அரசாங்கம் கொண்டுவந்துள்ள சட்ட நடைமுறையால் முதலீட்டாளர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஆனால் வேலை நீக்கம் பெற்ற ஊழியர்கள் தொழிளாளர் களுக்கு எதிர்காலம் இருண்டதாகவே உள்ளது. தனியார் துறையில் ஊழியர்கள் தொழிளார்கள் அறுபது லட்சம் பேர் உள்ளனர். அவர்கள் ஒவ் வொருவரும் இச்சட்டத்தால் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டே வேலை செய்து வரவேண்டியுள்ளது. தனியார் மயத்தை எதிர்ப்பதன் அர்த்தம் இப்போது பலருக்கு வெளிச்சமாகும் என்றே நம்புகின்றோம். இவை மட்டுமன்றி இன்னும் மோசமான நிலைகள் ஏற்படவே போகின்றன. இவற்றை எதிர்த்து வீதியில் இறங்குவதைத் தவிர ஊழியர் தொழிலாளர்களுக்கு வேறு வழியே இல்லை.

# சுகாதார சேவை ஊழியர்களின் போராட்டம்

சுகாதார சேவை ஊழியர்களின் சம்பளத்திட்டம் சீர்செய்யப்பட்டு சம்பள உயர்வு உறுதிசெய்யப்பட வேண்டும் என்று பல அடையாளப் போராட்டங் களும் நடத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவை ஊழியர்களின் தொழிற் சங்கங்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தன. அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தின சுகாதார ஊழியர்களின் சம்பள உயர்வு பற்றி ஆராய்ந்த குழுவினரின் சிபாரிசுபடி சம்பள உயர்வை வழங்க அரசாங்கம் தொடர்ந்து மறுத்துவிடு கிறது.

அதனால் சுகாதார சேவை ஊழியர் களை பிரதிநிதித்துவம் செய்யும் 53 தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து சுகாதார சேவை ஊழியர் சங்க கூட்டணியை அமைத்து போராடி வருகின்றன. அடையாள வேலை நிறுத்தங்களை மேற்கொண்டன.

சுகாதார சேவையை சேர்ந்த 80 ஆயிரம் ஊழியர்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்து கொண்டு கடமையில் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களின் தொடர்ச்சியான போராட்டங்களை அரசாங்கம் கவனத்தில் எடுக்கா விட்டால் 100 ஊழியர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

இலவச சுகாதார சேவைக்கு பதிலாக தனியார் வைத்தியம் இலங்கையில் நன்கு வேரூன்றி விட்டது. தனியார் வைத்திய சாலைகளும் சிகிச்சை நிலையங்களும் பல்கிப் பெருகிவிட்டன. இதனால் ஏறக்குறைய 50 வீதம் இலவச சுகாதார சேவை சீர்குலைக்கப் பட்டுவிட்டது. அரசாங்கம் சுகாதார சேவை ஊழியர்களுக்கு உரிய சம்பளத்தை வழங்காமலும் இலவச சுகாதார சேவைக்கு போதிய பணத்தை ஒதுக்காமலும் பாராமுகமாக இருந்து வருவதால் இலவச சுகாதார சேவை பூரணமாக சீர்குலைக்கப்பட்டு விடும்.

அதனால் இந்நாட்டின் தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு இதுவரை இலவச மாக கிடைத்து வரும் ஆரம்ப சுகாதார சேவையும் கிடைக்காமல் போய் விடலாம்.

சுகாதார சேவை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு மறுக்கப்படுவதும் இலவச சுகாதார சேவையை இல்லாமல் செய்வதற்கான திட்டமிட்ட நடவடிக்கையே ஆகும்.

எனவே சுகாதார சேவை ஊழியர்களின் போராட்டம் வெற்றிபெற வேண்டும். அவர்களுக்கு உரிய சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். இலவச சுகாதார சேவை பாதுகாக்கப்பட வேண்டும்.

# அறுபது வருட தமிழ்க் காங்கிரசும் இருபது வருட விடுதலைப் போராட்டமும்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஒரு மூத்த தமிழ்க் கட்சியாகும். ஆண்டபரம்பரையினரின் அபிலாஷை களைப் பிரதிநிதித்துவம் செய்வதில் தொடர்ச்சியாக அரசியல் செய்து வந்தது அக் கட்சி. சட்டமேதை என்றும் தலைவணங்காத் தமிழன் என்றும் பட்டு வேட்டியும் வெண்டயச் சங்கிலியும் சந்தனப் பொட்டும் சால்வைக் கட்டும் கொண்டு தமிழ்ச் சாதி தலை நிமிர்ந்து நிற்க தமிழ்க் காங்கிரசுக்கு வாக்களிக்க வேண்டும் என்ற பேச்சும் பழமை வாதத்தமிழரிடையே ஜீ.ஜீ.பொன்னம்பலத் திற்கு ஒரு இடத்தைப் பெற்றுக் கொடுத்தது. சேர்.பொன்.இராம நாதனுக்குப் பின் தானே தமிழரின் தனிப் பெரும் தலைவன் எனவும் மார்தட்டிக் கொண்டார். ஏதோ சேர் பட்டம் மட்டும் கிடைக்கவில்லை.



உண்மையில் ஜீ.ஜீ.யும் அவரது தமிழ்க் காங்கிரசும் வடபுலத்தின் தமிழ்ச் சைவ வேளாள மேட்டுக் குடியினரின் தலைவராகவும் கட்சியாகவுமே இருந்து வந்தது. சாதாரன மக்கள் இத்தகைய தமிழ் ஏமாற்று அடையாளங்களால் ஏமாற்றப்பட்டனர். 1920துகளிலிருந்து முப்பதுகளின் முற் கூறுவரை வடபுலத்தில் ஒரு முற்போக்கான தமிழ்த் தேசிய ஜனநாயக அரசியல் நீரோராட்டம் ஊற்றெடுத்திருந்தது. அதுவே யாழ்ப்பாண மாணவர்- வாலிபர் காங்கிரசாகும். அதில் இனவாதமற்ற தேசியக் கோரிக்கைகளும் நடைமுறை களும் மட்டுமன்றி தமிழர் மத்தியில் நிலைத்து வந்த சாதிய -தீண்டாமையை எதிர்க்கும் ஜனநாயக கோரிக்கையும் தெளிவாகவும் திடமாகவும் காணப் பட்டன. இவை மட்டுமன்றி பூரண சுதந்திரம் முழு இலங்கைக்கும் கிடைப் பதை யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் வற்புறுத்தி நின்றது. அதன் உச்ச அரசியல் செயல்பாடே 1931 ஆண்டு டொனமூர் ஆனைக்குழுவின் சிபார் சுக்கமைய நடைபெற்ற முதலாவது சட்டசபைத் தேர்தலை முற்றாக வடபு லத்தில் வெற்றிகரமாகப் பகிஷ்கரித்தமை யாகும். இதனால் முதலாவது சட்டசபையில் நான்கு ஆசனங்கள் வெறுமை யாகவே இருந்தும் வந்தன. இந்த பகிஷ்கரிப்பின் பின்பு தான் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அந்நடவடிக்கையை முட்டாள்தனமானது எனக் கூறி சைவவேளாள ஆதிக்க அரசியலைத் தொடக்கிவைத்தார். அதன் வழியாக 1943ல் ஆரம்பிக்கப்பட்டதே அகில இலங்கை தமிழ்க் காங்கிரசாகும்.

அந்தப் பழமைவாத பிற்போக்கு வாதத் தமிழ்க்கட்சி தான் அண்மையில் தனது 60வது ஆண்டுக் கூட்டத்தை நடாத்தி தலைமைத்துவத்தை புதுப்பித்துக் கொண்டது. ஜீ.ஜீ.பொன்னம்பலம் அதன் பின் அவரது மைந்தன் குமார் பொன்னம்பலம் இப்போது அவரது மைந்தன் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தலைமை தொடர்கிறது. அ.விநாயகமூர்த்தி, ந.குமரகுருபரன் போன்றோர் பக்கப்பாட்டிற்கேயாகும். பிரதானஇடம் வாரிசுரிமையும் ஆண்ட பரம்பரை மேட்டுக்குடியும் கொண்ட ஜீ.ஜீ. குடும்பத்தினருக்கேயாகும். கொள்கை அடிப்படையும் தமிழின் பெயரால் நிலவுடமை முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பும் அரவணைப்பும் தான். தொழிலாளர் விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் பெண்கள் மற்றும் பின்தங்கிய உழைக்கும் மக்கள் அவர்கள் தமிழர்களயினும் தமிழ்க் காங்கிரசின் கொள்கையில் கைவிடப் பட்டவர்களேயாவர். அவர்களது மொழியில் அத்தமிழர்கள் "அது களேயாவர்".

இத்தகைய ஒரு தமிழர் பழைமைவாதக் கட்சி இருபது வருடகால தேசிய இன விடுதலைப் போராட்டம் என்பதற்குப் பின்பு தனது அறுபதாவது ஆண்டுக் கூட்டத்தை நடாத்தி புதிய இரத்தம் பாச்சி நிற்கின்றது என்றால் அரசியல் ஆர்வம் மிக்க அனைவருமே ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது. அது மட்டுமன்றி இதே கட்சி ஏனைய மூன்று தமிழ்க் கட்சிகளுடன் கூட்டமைத்து புலிகள் இயக்கத்தின் ஆதரவுடன் மூன்று பாராளுமன்ற ஆசனங்களை வென் றெடுத்த புதுமையும் தமிழர் அரசியல் களத்திலே தான் இடம் பெற்றது. குமார் பொன்னம்பலம் இருக்கும் வரை எவ்வளோ முயன்றும் பாராளுமன்ற உறுப்பினராக வரமுடியவில்லை. காரணம் தமிழரசு, தமிழர் கூட்டணி அவரைத் தமிழர்களின் ஒருவகைத்து ரோகியாகவே காட்டி வந்தது. குமாரும் கூட்டணியை விட்டு வைக்காது வாங்கு வாங்கு என்று வாங்கியே வந்தார். புலிகள் இயக்கத்தைக் கூட குமார் பொன்னம்பலம் கடுமையாக விமர்சனம் செய்து வந்தவர். என்றாலும் இறுதி ஆண்டுகளில் அவரது நிலைப்பாடும் துணிவான கருத்து வெளியீடும் செயல்பாடும் அரசியல் படுகொலையும் அவருக்குமா மனிதர் பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தது. அதனையே தமிழக் காங்கிரசும் பொன்னம்பலம் குடும்பமும் பல மாக்கி அரசியலாக்கி கொண்டது. அ.விநாயகமூர்த்தியும் ந.குமரகுருபரனும் மேடையில் தோன்ற முடிந்தது. கஜேந்திர குமார் சிம்மாசனத் திற்குரிய இளவரசராக்கப்பட்டார்.

நமக்கு முன்னால் எழும் கேள்வி யாதெனில் இருபது வருட விடுதலைப் போராட்டத்திற்குப்பின் எவ்வாறு ஒரு பழமைவாதப் பிற்போக்கு ஆண்ட பரம்பரைத் தமிழ் கட்சி ஒன்றினால் அரசியல் அரங்கில் செல்வாக்குச் செலுத்த முடிகின்றது என்பதேயாகும், இதுதான் நிலைமை என்றால் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கெனத் தமது உயிர் உதிரம் தந்து விடுதலை வேள்வியில் ஆகுதியாகிக் கொண்ட சாதாரண உழைக்கும் வர்க்க ஒடுக்கப் பட்டவர்க்க தமிழ் இளைஞர்கள் யுவதிகளின் தியாகத்தில் எந்தப் பரம்பரை வளர்ந்து நிற்கிறது என்ற கேள்வியே எழுகின்றது. இத்தகைய நிலை தமிழர் அரசியல் தளத்திலே ஆழ்ந்து சிந்திப்பற்கு புதிய சூழலைத் திறந்துள்ளது என்றே கூறுதல் வேண்டும். எனவே புதிய சிந்தனை புதிய செயற்பாடு புதிய திசைமார்க்கம் தேடப்படல் வேண்டும். அதற்கு கடந்த காலமும் நிகழ் காலமும் உரியவாறு கண்டு கொள்ளப்படல் வேண்டும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# பிரஜா உரிமைப் பிரச்சினைக்கான தீர்வுகளும் மறைக்கப்பட்ட உண்மைகளும்

● 1948ம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு மலையகத் தமிழ் மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்ட போது அச்சட்டத்திற்கு இடது சாரி கட்சிகளும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும் எதிர்த்து வாக்களித்தது.

● இச்சட்டத்திற்கு எதிராக சத்தியாக்கிரகப் போராட்டம் செய்த இலங்கை இந்தியன் காங்கிரஸ் எம்பிக்களுக்கு இடது சாரிகளே ஆதரவளித்தனர்.

● அச்சட்டத்திற்கு பிறகு வாக்களிப்பதற்கு தகுதி உள்ளவர் பற்றிய திருத்தச் சட்டத்திற்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆதரவளித்துள்ளார். இதனால் மலையகத்தமிழ் மக்களின் வாக்குரிமை பறிபோனது.

● இலங்கை - இந்திய காங்கிரசிற்கு கொடுத்த வாக்குறுதியையும் மீறி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி முடிவையும் மீறி 1949ம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டத்திற்கு ஆதரவாக ஜீ.ஜீ. பொன்னம்பலம் வாக்களித்தார். எஸ். ஜே. வி. செல்வநாயகம் எதிர்த்து வாக்களித்தார். இடது சாரிகள் எதிர்த்து வாக்களித்தார்கள். அச்சட்டத்தின்படி பிரஜா உரிமை பெறுவற்கு ஒருவருக்கு இருக்க வேண்டும் என கேட்கப்பட்ட தகுதிகள் எல்லா மலையகத் தமிழ் மக்களுக்கும் இருக்கவில்லை. அதனால் அச்சட்டத்தின் கீழ் விண்ணப்பித்த சிலர் பின்னர் பிரஜா உரிமை பெற்றுக் கொண்டாலும் அச்சட்டம் அனைத்து மலையகத் தமிழ் மக்களுக்கும் மீண்டும் பிரஜா உரிமை வழங்குவதற்கு ஏற்பாடு செய்த சட்டமாகாது. எனவே ஜீ.ஜீ. பொன்னம்பலம் அச்சட்டத்தை ஆதரித்து வாக்களித்தமைக்கு எந்த நியாயமும் இருக்க முடியாது. அச்சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஐக்கிய தேசிய கட்சியின் டி.எஸ்.சேனநாயக்க அரசாங்கத்தில் கைத்தொழில், மீன்பிடி அமைச்சராக நியமிக்கப்பட்டார் என்பதிலிருந்து உள் நோக்கம் தெளிவாகிறதல்லவா? விநாயகமூர்த்தியும் குமரகுருபரனும் எவ்வளவுதான் சொன்னாலும் உண்மையை மறைக்க முடியாது.

● 1949ம் ஆண்டு பிரஜா உரிமையை எதிர்த்த சௌ. தொண்டமான் போன்றவர்கள் அச்சட்டத்தின் கீழ் பிரஜா உரிமைக்காக எவரும் விண்ணப்பிக்கக் கூடாது என்று பிரசாரம் செய்தனர். அச்சட்டத்தின் ஏற்பாடுகளில் எவ்வித திருத்தமும் செய்யப்படாத நிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌ. தொண்டமான் உட்பட சில தலைவர்களும், இந்தியவம்சாவளி மேட்டுக்குடியினரும் மலையகத்தமிழ் மக்களுக்கு தெரியாமலே அச்சட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்து இலங்கைப் பிரஜா உரிமையை பெற்றுக் கொண்டனர். இதனால் அச்சட்டத்தை பகிஷ்தரித்த மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதனால் அன்றைய மலையகத்தலைவர்கள் மலையகத்தமிழ் மக்களை சரியாக வழிநடத்தாதது மட்டுமல்ல காட்டிக் கொடுத்தனர் என்றே கூற வேண்டும்.

● சிங்கள மக்கள் மத்தியில் இடது சாரிகள் செல்வாக்கை பெற்றிருந்த அக்காலத்தில் மலையகத் தமிழ் மக்கள் தலைமைகள் பிரஜா உரிமையை பெறுவதற்கான போராட்டங்களை திட்டமிட்டு முன்னெடுக்கவில்லை.



● 1964ம் ஆண்டு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி 3 லட்சத்துக்கு 75 ஆயிரம் பேருக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்கப்படும் என்றும் 5 லட்சத்து 25 ஆயிரம் பேர் இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்) மலையகத் தலைமைகள் கூறினாலும் சரியான எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. இதனால் விருப்பமில்லாமலே லட்சக் கணக்கானோர் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர். பல பெற்றோர்கள் பிள்ளைகளை பிரிந்தும் பலர் உடன் பிறப்புக்களை பிரிந்தும், சிலர் காதலர்களை பிரிந்தும், தம்பதிகள் பிரிந்தும் இந்தியாவுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

● பதுளையிலிருந்து தலை மன்னாருக்கு எவ்வித வசதியுமில்லாத புகையிரதத்தில் ஏற்றி தலைமன்னாருக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து ராமேஸ்வரத்திற்கு கப்பலில் ஏற்றி அனுப்பப்பட்டனர்.

● அவ்வாறு இந்தியாவுக்கு அனுப்பப்பட்டவர்களும் அவர்களின் வழித் தோன்றல்களும் இன்னும் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். அவர்கள் அங்கு இன்னும் சிலோன்காரர்கள் என்ற அடையாளத்துடனேயே இருக்கின்றனர்.

● சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தினால் தீர்மானிக்கப்படாத 94 ஆயிரம் பேருக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் இலங்கைப் பிரஜா உரிமை வழங்கும் - அதாவது நாடற்றவர்களுக்கு பிரஜா உரிமை வழங்கும் சட்டத்தை ஜே.ஆர். ஜயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் 1986ம் ஆண்டு நிறைவேற்றியது.

● அச்சட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பிரஜா உரிமை சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதில் இருந்த நிர்வாகத் தடைகளை அகற்றும் வகையில் 1989ம் ஆண்டு பிரஜா உரிமை திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின் படி 1986ம் ஆண்டு சட்டத்தின் கீழ் பிரஜா உரிமை பெறத்தகுதி பெற்ற 'நாடற்றவர்கள்' சத்தியக்கடதாசி மூலம் பிரகடனமொன்றை செய்து பிரஜா உரிமையை உறுதி செய்து கொள்ள வழி ஏற்பட்டது.

● பிரஜா உரிமை பிரச்சினை தீர்க்கப்பட்டதற்கு சௌ. தொண்டமானும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுமே காரணம் என்று கூறுபவர்கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சமசமாஜக் கட்சி பின்பு 1960களிலும் 1970களிலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சண்முகதாசன் தலைமை) யின் செங்கொடிச் சங்கம், புதிய செங்கொடிச் சங்கம் என்பவற்றால் தோட்டங்கள் தோறும் விழிப்புணர்வு நடவடிக்கை களும், போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன என்பதை திட்டமிட்டு மறைக்கின்றனர்.

● சௌ. தொண்டமான் 1948, 1949, 1964 ஆகிய பிரஜா உரிமை சட்டங்களை மட்டுமன்றி 1986 சட்டத்தையும் எதிர்த்தார். நாடற்றவர்களுக்கு பிரஜா



உரிமை வழங்க ஏற்பாடு செய்த 1986ம் ஆண்டு சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போது இலங்கையிலேயே இல்லை. தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாவிற்கு சென்றிருந்தார். அங்கு இருந்து கொண்டு 'இந்து' பத்திரிகைக்கு பிரஜா உரிமைச்சட்டம் பற்றி தான் திருப்தியடையவில்லை என்றும் தன்னுடன் இலங்கை அரசாங்கமோ, இந்தியா அரசாங்கமோ கலந்துரையாடமலேயே அச்சட்டம் கொண்டு வரப்பட்டது என்று விசனம் தெரிவித்திருந்தார். உண்மை இவ்வாறிருந்த போதும் அச்சட்டம் கொண்டுவரப் படுவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காரணம் என்று சௌ. தொண்டமான் பிரசாரம் செய்து வந்தார்.

● 1986ம் ஆண்டு சட்டத்தின் கீழ் பிரஜா உரிமை வழங்கும் முறை இலகுவானதாக இல்லை. அச்சட்டத்தை எதிர்ப்பதை விட ஒரு பிரகடனத்தின் மூலம் நாடற்றவர்களுக்கு பிரஜா உரிமையை வழங்க திருத்தத்தை செய்யும் படி கேட்டிருக்கலாமே என்று கேட்கப்பட்ட போது அதெல்லாம் தேவை இல்லை என்று கூறினார். பிரஜா உரிமையை உறுதி செய்யும் ஏற்பாட்டைக் கொண்டே 1989ம் ஆண்டு பிரஜா உரிமைச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.

● 1983ம் ஆண்டு இனவன்முறைக்குப் பிறகு தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்குமிடையிலான கப்பல் சேவை நிறுத்தப்பட்டது. அதனால் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய பாஸ்போர்ட் பெற்றவர்களும் இந்தியாவுக்கு செல்ல விண்ணப்பித்திருந்தவர்களும் இந்தியாவுக்கு அனுப்பப்படவில்லை. 1983ம் ஆண்டு இனவன்முறைக்குப் பிறகு அதிகமான மலையகத் தமிழர்கள் சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவு க்கு அனுப்பப்பட விருந்தவர்களை இந்திய அரசு ஏற்க மறுத்தது.

● இந்நிலையில் இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டியவர்களுக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. இக்கோரிக்கையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸோ அதில் அப்போது அங்கம்வகித்தவரும் தற்போது ம.ம.மு தலைவராகவும் இருக்கும் சந்திரசேகரனோ ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் மலையகத்



தமிழ் மக்களின் கோரிக்கை வலுவடையவே நாளடைவில் எல்லோரும் ஏற்றுக் கொண்டனர்.

● 1956ம் ஆண்டு பண்டா - செல்வா 1967ம் ஆண்டு டட்லி - செல்வா ஒப்பந்த ஏற்பாடுகளில் மலையகத்தமிழ் மக்களின் பிரஜா உரிமை பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும் என்பது உள்ளடக்கப்பட்டிருந்தது.

● 1986ம் ஆண்டு தமிழ் கட்சிகள் கூட்டாக முன்வைத்த திம்பு கோரிக்கை இலங்கையில் நாடற்ற வர்களாக இருக்கும் மலையகத்தமிழ் மக்களுக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

● இந்திய கடவுச்சீட்டு பெற்றவர்களை இந்தியாவுக்கு நாடுகடத்த வேண்டும் என்று 1991ம் ஆண்டு. அப்போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்ண பிரகடனமொன்றை செய்தார். அதற்கு எதிராக



புதிய ஜனநாயக கட்சி தனியாகவும், ஏனைய கட்சிகளுடன் சேர்ந்தும் எதிர்ப்பியக்கங்களை முன்னெடுத்தது. கூட்டங்கள் நடத்தியதுடன் துண்டுப்பிரசுர விநியோகம் போஸ்டர் இயக்கம் போன்றவற்றை முன்னெடுத்தது. அதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பங்கெடுக்கவில்லை. அது தனியாக எதிர்ப்பு இயக்கத்தையும் முன்னெடுக்கவில்லை. 1978ம் லிருந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்று இயங்கிய காலம் தொட்டு புதிய ஜனநாயக கட்சி



நாடற்றவர்களுக்கும் இந்திய கடவுச் சீட்டு பெற்றவர்களுக்கும் இலங்கை பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டும் என்று இயக்கங்களை நடத்தி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

● 2000ம் ஆண்டு நவம்பர் மாதம் பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தில் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டியவர்களாக இருந்தவர்களுக்கு (இந்திய பாஸ்போர்ட் பெற்றவர்கள்) இலங்கை பிரஜா உரிமை வழங்கும் ஏற்பாடு உள்ளடக்கப்பட்டிருந்தது (சில தெளிவீனங்களும் இருந்தன).

● 2003ம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய கடவுச்சீட்டுப் பெற்றவர்களுக்கும், இந்தியாவுக்கு போவதற்கென விண்ணப்பித்தவர்களுக்கும் பிரஜா உரிமை வழங்க ஏற்பாடு செய்யும் பிரஜா உரிமைச் திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டத்தை ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ் கட்சிகள் என்பவற்றுடன் பொது ஜன ஐக்கிய முன்னணி. ஜே.வி.பி என்பவனவும் ஆதரித்தன.

● ஆனால் அச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் போது கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணி எம்.பி மனோகணேசன் பாராளுமன்றத்தில் இருக்க வில்லை. அப்போது பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக அவர் வெளிநாட்டிற்கு சென்றிருந்ததாக கூறப்பட்டது. எனினும் பிரஜா உரிமை போன்ற முக்கிய சட்டமொன்று நிறைவேற்றப்படும் போது பாராளுமன்றத்தில் சமூகமளிக்காதிருப்பது எவ்வகையில் நியாயமானது? அவரது ஒரு வாக்கினால் அச்சட்ட மூலம் தோல்வியடைந்திருந்தால் வரலாற்று தவறொன்றை செய்ததாகாதா?.

● 2000ம் ஆண்டு நவம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டதுடன் பிரஜா உரிமைச் சட்டத்துடன் சட்டப்படி பிரஜா உரிமை பிரச்சினை முற்றாக தீர்க்கப் படுகிறது. அதற்கான விண்ணப்பப் படிவங்களை நிரப்பி அனுப்பும் வேலைகளை U.N.H.R.C (ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணைக்குழு) வின் நிதியுதவியுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செய்து வருகிறது.

● எனினும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தானே அதனை செய்வதாக காட்டிக் கொண்டு அவ்விண்ணப்பப் படிவங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்று பொறித்துள்ளது. இது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்வின் தான் தோன்றித்தனமான செயற்பாடு ஆகும்.

● விண்ணப்ப படிவங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்று பொறிக்கப்பட்டுள்ளதாலும் விண்ணப்ப படிவங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் ரீதியாக நன்மை அடைவதாகவும் நுவரெலியா மாவட்ட பொது ஜனஐக்கிய முன்னணி எம்.பியும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளருமான எஸ். சதாசிவம் ஜனாதிபதி சந்திரிகாவிடம் எடுத்துக்காட்டினார். அத்துடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்வினால் அனுப்பப்பட்ட அவ்விண்ணப்ப படிவங்களை இரத்துச் செய்யும்படி கோரிக்கை விடுத்தார். அக்கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அவ்விண்ணப்பப் படிவங்களை இரத்துச் செய்யும்படி ஜனாதிபதி குடிவரவு குடியகல்வு ஆணையாளருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். இது தொழிற் சங்க அரசியல் போட்டியின் விளைவு. இதனால் பாதிக்கப்படுபவர்கள் மக்கள்.

● இனிமேல் எவ்வாறு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்? அதற்கான மாற்றுத் திட்டமென்ன? குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் வீடுவீடாகச் சென்று விண்ணப்ப படிவங்களை விநியோகித்து, நிரப்பி அவற்றை சேகரித்துச் செல்வார்களா?

● தோட்டத் தொழிலாளர்களின் பின்தங்கிய நிலை காரணமாகவும், அரசாங்க அதிகாரிகளின் பேரினவாத அதிகாரத்துவம் காரணமாகவும் தோட்டத் தொழிலாளர்கள் தனித்தனியாக விண்ணப்பித்து விரைவாக பிரஜா உரிமையை உறுதி செய்து கொள்ள முடியாது. அதற்கென நிறுவனங்கள் தலையிட்டு திட்டமிட்டவகையில் செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் பிரஜா உரிமை கிடைக்காது..

---

**கல்வி.....** 2ம் பக்க தொடர்ச்சி..

உரிமை அரசாங்கத்திற்கு சொந்தமாயிருந்தது.

வருடந்தோறும் பாடநூல்களில் பெரும் பகுதி தனியார் அச்சகங்களிலேயே அச்சிடப் படுகின்றன. கேள்விப் பத்திரத்தின் அடிப்படையில் அச்சகங்கள் தேர் தெடுக்கப்படுகின்றன என்பதில் ஓரளவுதான் உண்மை. ஒரு குறிப்பிட்ட அச்சகத்தால் குறிப்பிட்ட தொகைப் புத்தகங்களை குறித்தகாலத்தில் அச்சிட்டு ஒப்படைக்க முடியுமா என்பதை மதிப்பீடு செய்யும் அதிகாரம் வெளியீட்டுத் திணைக்களத்திற்கே உரியது அங்குதான் ஊழல் விரிகிறது.

புத்தகங்களை அச்சிடும் கட்டளையைப் பெறுவதற்கும் இலஞ்சம், பின்பு அச்சிட்ட புத்தகங்களுக்கான கொடுப்பனவுகளைப் பெறுவதிற்கும் லஞ்சம் செலுத்தப்படுகிறது.

வெளியீட்டுத் திணைக்களத்திற்குப் போனால் இலஞ்சம் என்பது எவ்வாறு தலைவிரித்தாடுகிறது என்பது விளங்கும் எந்தக் கலாநிதிகளாலும் இந்த இலஞ்ச ஊழல்களை இல்லாதொழிக்க முடிவதில்லை. முதலாளித்துவத்தின் கீழ் லஞ்சம் ஊழல் ஒழிக்கப்பட முடியாதவையாகும். இது கல்வித்துறையில் இன்று சர்வசாதரணமாகி நிற்கின்றது.

அதேவேளை நேர்மையான அதிகாரிகளும் அதிபர்களும், ஆசிரியர்களும், நிர்வாகிகளும் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் வாய்திறந்து பேச முடியாது. இத்தகைய லஞ்ச ஊழல் சீர்கேட்டை அம்பலமாக்கி எதிர்க்க நேர்மையான கல்வியாளர்கள் முன்வரவேண்டும்.

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 11 பெப்ரவரி 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 66

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.:2435117, 2335844 பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## ஜே.வி.பி- சுதந்திரக்கட்சி கூட்டு. சுயம் தோலுரிக்கப்படுகிறது

"கிணற்றிலிருந்து இறைத்த நீர் எவ்வளவு சூடாக இருந்தாலும் அதில் அரிசியை வேகவைக்க முடியாது" என்பது ஆபிரிக்க பழமொழி ஒரு நிகழ்வுப் போக்கின் புறத்தோற்றம் எப்படியிருந்தபோதும் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்வுப் போக்கின் வளர்ச்சியானது அதன் உள்ளார்ந்த பண்புகளையே பெரிதும் சார்ந்திருக்கிறது என்பதே அதன் பொருளாகும் இன்றைய இலங்கை அரசியல் தளத்தில் ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சி புரிந்துணர்வு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பன மிகவும் சுவாரஸ்யமானதாகத் தென்படுகிறது. அதன் மீது பாராட்டுகளும் அதேபோன்று வசைமொழிகளும் குவிந்து கொண்டிருக்கின்றன.

ஜே.வி.பி. தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய விடயத்தில் மிகவும் இறுக்கமான நிலையில் இருக்கிறது. அது தமிழ் தேசிய இனத்தின் தேசிய அபிலாசைகள், சுயநிர்ணய உரிமை என்பவற்றை நிராகரிக்கிறது. அது இலங்கையில் மாறி மாறி அரசாங்கம் அமைத்துவரும் பிரதான கட்சிகளில் ஒன்றான சுதந்திரக்கட்சியுடன் கூட்டுசேர்வதால் தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியல் தீர்வு காணப்படுவதை கேள்விக்குறியாக்கியுள்ளது. இதனால் சமாதானத்தை உண்மையாக நேசிப்பவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருக்கும் இடதுசாரி கட்சிகளும் அதற்கு வெளியில் இருக்கும் இடதுசாரி கட்சிகளும் ஜே.வி.பி இடதுசாரி கட்சியாக இல்லை என்று தொடாந்து சுட்டிக்காட்டிவந்த போதும் ஊடகங்கள் குறிப்பாக தமிழ் ஊடகங்கள் ஜே.வி.பியை இடதுசாரி கட்சியாக காட்டி வருகின்றன. அதற்கு உள்நோக்கம் இல்லாமல் இல்லை. சில இடதுசாரிகளின் தவறுகளை விமர்சித்து பொதுவாக இடதுசாரி எதிர்ப்பை வளர்க்கும் திட்டம் கொண்டுள்ளவர்களுக்கு அது அவசியமாகிறது. அதாவது ஜே.வி.பி யின் தவறுகளை எல்லாம் பொதுவாக இடதுசாரி கொள்கையின் தவறுகளாக காட்டுவதற்கு அவ்வூடகங்களுக்கும் பல தமிழ் தேசியவாதிகளுக்கும் மேலும் சாதகமாக சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

சோஷலிஸம், மாக்சிசம்- லெனினிசம் பற்றி பேசிய ஜே.வி.பி சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்தது மட்டுமல்ல மாக்சியத்தின் எஞ்சியுள்ள விடயங்களை பௌத்த பண்பாட்டுடன் கலந்து ஒரு புதிய ஆட்சிமுறையை ஏற்படுத்தப் போவதாக தற்போது கூறுகிறது. இடது சாரிகள் மாறிவிடுவார்கள் பௌத்த சிங்கள பேரினவாதத்துடன் சரணடைந்து விடுவார்கள் என்று விமர்சிப்பவர்களுக்கு ஜே.வி.பின் தற்போதைய நடைமுறைகளும் பிதற்றல்களும் நல்ல தீனியாகிவிடும்.

ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும் அவசரத்தினால் பௌத்த சிங்கள வாக்குகளை திரட்டிக் கொள்ளுவதன் அவசியத்தை ஜே.வி.பி தெரிந்து கொண்டு அதனுடைய போலியான சிவப்பு உருவத்திலிருந்து விடுபட்டு அதன் பௌத்த சிங்கள மேலாதிக்க நிலைப்பாட்டை தோலுரித்து காட்டுவதாகவே ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டும் ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்ஹவின் கூற்றுக்களும் அமைந்துள்ளன.

ரோஹன விஜேவீர முதல் இன்றைய தலைமைகள் வரை ஜே.வி.பி பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை அதன் நிலைப்பாடாக கொண்டிருக்கிறது. சண்முகதாசன் தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து ரோஹனவிஜேவீர வெளியேற்றப்படுவதற்கு அவரின் பௌத்த சிங்கள மேலாதிக்க நிலைப்பாடு ஒரு காரணமாக அமைந்ததது. அவர் அக் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தினராக இருந்து கொண்டு கட்சியின் அனுமதியின்றி டட்லி-செல்வா ஒப்பந்தத்திற்கு எதிரான ஊர்வலத்தில் கலந்து கொண்டு தோசை மசாலவடை வேண்டாம் என்ற கோஷம் போட்டார். ஜே.வி.பி யின் 1971 ஆயுத நடவடிக்கைக்கு அடிப்படையான அரசியல் வகுப்புகளில் ஒன்று தோட்டத் தொழிலாளர்களை இந்நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று கூறப்பட்டது. ஜே.வி.பி தோட்டத் தொழிலாளர்களை இந்திய விஸ்தரிப்புவாதத்தின் கைக்கூலிகளென கூறியது.

இலங்கை- இந்திய சமாதான உடன்படிக்கையில் இருந்த பல ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்களை எதிர்ப்பதை விட அதன் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட மாகாணசபையையே ஜே.வி.பி எதிர்த்தது. 1987 இற்கு பிறகு மீண்டும் இன்னொரு ஆயுத நடவடிக்கையில் இறங்கியது. மாகாணசபை முறைமையை ஏற்றுக் கொண்டார்கள் என்பதற்காக ஐக்கிய சோஷலிஸ முன்னணியின் தலைவர் விஜேகுமாரதுங்க உட்பட ஏனைய இடதுசாரி கட்சித் தலைவர்களையும் ஜே.வி.பி கொலை செய்தது அவ்வாறு கொல்லப்பட்ட இடதுசாரிகளின் எண்ணிக்கை ஆறாயிரமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் இடதுசாரி சக்தியை ஜே.வி.பி . பலவீனப்படுத்தியது. 1990 களுக்கு பிறகு மீண்டும் வெளிப்படையாக இயங்கத் தொடங்கி தேர்தல் அரசியலில் ஈடுபடத் தொடங்கியதும் இடதுசாரி கட்சிகள் பலமாக வளர்வதை ஜே.வி.பி விரும்பவில்லை. பொதுஜனஐக்கிய முன்னணிக்குள் இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி , சமசமாஜக்கட்சிக்கு எதிராக செயற்பட்டது மட்டுமல்ல அதற்கு வெளியில் இயங்கிய இடதுசாரி கட்சிகளின் கூட்டமைப்பான புதிய இடதுசாரி முன்னணியை சிதைப்பதில் ஜே.வி.பி யின் சதி முக்கிய மானதாக இருந்தது. நவசமசமாஜக்கட்சியின் தலைவர் விக்கிரமபாகுவை பயன்படுத்தி புதிய இடதுசாரி முன்னணி என்ற கூட்டணியை சிதைத்தனர். இதனால் பெரும் சக்தியாக வளர்ந்த பொதுஜன ஐக்கிய முன்னணக்கு வெளியில் இருந்த இடதுசாரி கட்சிகளின் ஐக்கியம் சிதைக்கப்பட்டது.

சுதந்திரக்கட்சியுடன் ஜே.வி.பி கூட்டமைத்தது கூட ஒருவகையில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருக்கும் இடதுசாரி கட்சிகளை ஓரம் கட்டும் நடவடிக்கையே ஆகும் அதிகாரப்பங்கீட்டை ஏற்கும் இடதுசாரி கட்சிகளை தேசத்துரோக கட்சிகள் என்று பிரசாரம் செய்து சிங்கள மக்கள் மத்தியில் அவற்றுக்கு செல்வாக்கு இல்லாத நிலையையும் ஏற்படுத்துவதில் ஜே.வி.பி அக்கறை காட்டி வருகிறது.

இவ்வாறு ஜே.வி.பி அதன் தோற்றத்திலிருந்து அது பகிரங்க அரசியலில் இருந்த காலத்திலும் சரி ஆயுதநடவடிக்கையில் ஈடுபட்ட காலத்திலும் சரி இடது சாரி கட்சிகளை சிதைப்பதிலும் பலவினப்படுத்துவதிலும் திட்டமிட்டு செயற்பட்டுள்ளது. இடதுசாரி கட்சிகளினதும் தனித்துவங்களையும் தன்னடையாளங்களையும் சிதைப்பதிலும் திட்டமிட்டு செயற்பட்டுள்ளது. தற்போது ஜே.வி.பி அதற்கு இருந்ததாக கூறிக்கொண்ட இடதுசாரி அடையாளத்தை முற்றாக இல்லாமலாக்கி விட்டதாக பிரகடனப்படுத்தியுள்ளது. இலங்கையில் தூய்மையான முதலாளித்துவ ஜனநாயக அரசை அமைக்கப் போவதாக தெரிவித்துள்ளது.

ஏகாதிபத்திய உலகமயமாதல் சூழலில் தாக்குப்பிடிக்க முடியாது போயுள்ள தேசிய முதலாளித்துவத்தை நிமிர்த்த தேசிய பொருளாதாரத்தை கட்டப்போவதாக ஜே.வி.பி கூறுகிறது ஏனைய இடதுசாரி கட்சிகள் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டபோது தேசிய முதலாளிவர்க்கம் பலமாக இருந்தது தேசிய பொருளாதாரம் ஓரளவு பலமாக கட்டிவளர்க்கப்பட்டது தேசிய முதலாளித்துவம் தனித்து நிற்க முடியாத சூழல் இது அதற்கு பின்னால் விவசாயிகளும் தொழிலாளர்களும் போவதால் பிரயோசனம் எதுவும் ஏற்படப்போவதில்லை இது அந்த ஆபிரிக்க பழமொழியை நினைவூட்டுகிறது.

தொழிலாளர்கள் விவசாயிகளுக்கு பின்னால் தேசிய முதலாளிவர்க்கம் அணிதிரட்டப் பட வேண்டியதே தற்போது செய்யப்பட வேண்டியதாகும் தேசிய ஜனநாயக வேலைத் திட்டத்தை நிறை வேற்றி தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் புதிய - ஜனநாயக புரட்சியை நிறைவேற்றி சோஷலிச புரட்சிக்கு அணிவகுப்பதே செய்யப்பட வேண்டியதாகும் இதுவே ஏகாதிபத்திய உலகமயமாக்கலினால் சிதைக்கப்பட்ட தேசிய பொருளாதாரத்தை மீண்டும் கட்டுவதற்கான சிறந்த வழியாகும். அதற்கு தயாராக வேண்டிய சக்திகள் தமது சொந்த நிலமைகளைப்பற்றிய விரிவான அறிவை அடிப்படையாகக் கொண்ட தமது சொந்த முயற்சிகளையும் தியாகங் களையும் வைத்துத்தான் தமது சொந்த யதார்த்தத்தை தம்மால் மாற்றமுடியும் என்பதை புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

ஜே.வி.பி யின் தற்போதைய நடவடிக்கைகளால் அது சுயமிழக்கப்படவில்லை மாறாக அதன் சுயம் தோலுரித்துக் காட்டப்படுகிறது.

- ஆசிரியர் குழு -

# சமூகச் சீரழிவுகளின் பெருக்கமும் சமூகக் கட்டமைப்பின் அடிப்படையும்

**வெகுஜனன்**

நமது சமூகப் பரப்பிலே சமூகச் சீரழிவுகள் என வகைப்படுத்தக் கூடிய பல்வேறு அம்சங்கள் நாளாந்தம் பற்றிப் பரவி வளர்ச்சி பெற்று வருகின்றன. அவற்றின் பாரிய தாக்கத்தை ஒட்டுமொத்த சமூகமும் எதிர்கொண்டு அதன் விளைவுகளைச் சமூகக் கேடுகளாக அனுபவிக்க வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டு வருகின்றது.

மது, போதைவஸ்து, புகைத்தல் என்பன என்று மில்லாதவாறு பரவி வருவதுடன் இளந்தலை முறையினர் மத்தியில் ஒரு நாகரீக நடைமுறையாகவும் பின்பற்றப் படுகின்றது. அதனால் பொருளாதார நலிவு மட்டுமன்றி உடல் நலக் கேடும் கொடிய உயிர்க் கொல்லி நோய்களுக் கும் ஆளாக்கப்படுகின்றனர். இன்று மதுபானங்களின் பாவனையும் சிகரெட் வகைகளும் பாரிய விளம் பரங்களுடன் சமூகத்தில் விற்பனையாகின்றான. உங்களது சுக அனுபவிப்புக்கு உடல் ஆரோக்கியத்திற்கு புத்துணர்ச்சியுடன் இருப்பதற்கு என்ற கவர்ச்சிகர விளம்பரங்களால் மதுபான வகைகளும் புகைத்தல் சிகெரட்டுகளும் தாராள விற்பனையைப் பெற்று விளங்குகின்றன இதில் உள்நாட்டு வெளிநாட்டுப் பெரும் கம்பனிகள் போட்டி போட்டு வியாபாரம் செய்து வருகின்றன. இதற்கு ஆளும் தரப்பினர் தங்கு தடையற்ற ஆதரவையும் அனுசரணையையும் வழங்குகின்றனர். இதனால் நகரங்களில் தொடங்கி குக்கிராமங்கள் வரை இவை விற்பனையாகின்றன. இவை சட்டரீதியானவை என்றால் சட்டத்திற்கு அப்பால் என்ற பெயரில் போதை வஸ்துப்பாவனை நாளாந்தம் ஊக்குவிக் கப்படுகின்றன. இப்போதைவஸ்துப் பாவனையானது பாடசாலை மாணவர் முதற் கொண்டு இளைஞர் வளர்ந்தவர்களிடையே நுகர்வுக் குரிய முக்கிய பொருளாகி உள்ளது. இதன் பெரும் மொத்த வியாபாரிகள் பெரும் பெரும் புள்ளிகலாகவும் அரசியல் வாதிகலாக்வும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாகவும் இருந்து வருவதாக அறிய முடிகின்றது.

அடுத்து பாலியல் வல்லுறவு வன்முறை யானது பெண்கள் மீது கொடூரமாக மேற்கொள்ளப்படுகின்றன. இவை சில சமயங்களில் பெண்கள் கொல்லப்படு வதிலும் சென்று முடிவடைகின்றது. நாளாந்தம் இந்து பாலியல் வல்லுறவு களும் அவை சார்ந்த கொலைகளும் சிறுமிகள் தொட்டு வயதான மூதாட்டிகள் வரை மிருகத்தனத்தோடு மேற்கொள்ளப்படுகின்றன. நாளாந்தம் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் வல்லுறவுச் செயல்கள் இடம் பெறுவதை ஊடகங்கள் மூலம் அறிய முடிகின்றது. இவற்றுக்கு எதிரான சட்டநடவடிக்கை என்பது வெறும் கண்துடைப்பாகவே இருந்துவருகின்றன.

தற்கொலை என்பது இலங்கையில் நாளாந்தம் நடைபெறும் நிகழ்வாகும். உலகிலே யேதற்கொலை புரிவதில் இலங்கை முதல் இடத்தைப் பெற்றுள்ள தைப் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. பல் வேறுபட்ட சமூகக் காரணிகளே இத்தற்கொலைகளின் பின்புலமாகும் வறுமை வேலையின்மை வாழ்க்கைச் செலவைத் தாங்க முடியாமை எதிர்காலம் பற்றிய விரக்தி போன்றன தற்கொலைகளின் காரணிக ளாகின்றன. சட்டம் ஒருவர் தற்கொலை செய்வதை அனுமதிப்பதில்லை. தற்கொலை செய்ய முற்பட்டு ஒருவர் தவறிக் கொண்டால் அவரை சட்டம் நீதி மன்றம் தண்டிக்கிறது. ஆனால் ஒருவர் தற்கொலைக்கு ஏன் முயன்றார் என்பதையோ அவரது முடிக்கான பொருளாதார சமூகக் காரணங்களை யோ அதே சட்டமும் நீதி செலுத்து வோரும் கவனிப்பதில்லை.

இவ்வாறே பாலியல் தொழில் எனப்படும் விபச்சாரம் சிறுவர் துஷ் பிரயோகம் பாலியல் நடத்தைகள் தாராளமாகப் பெருகிவருகின்றன. உல்லாசப் பயணத்துறையின் விடுத்தி என்று கூறப்படுவன வற்றின் பின்னால் சிறுவர் முதல் வாளர்ந்தோர் வரையான பாலியல் நடத்தைகள் வியாபாரமாகவும் நுகர்காவும் முன்னெடுத்துச் செல்லப்படு கின்றன. வேலை பெற முடியாத உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்கப் படாத பல ஆயிரக்கணக்கான இளம்யுவதிகள் இன்று பெரு நகரங்கள் சிறுநகரங்களில் மட்டுமன்றி கிராமங் களிலும் பாலியல் வக்கிரத்திற்குப் பலியாக்கப்பட்டு வருகின்றனர்.

இவற்றுடன் போதைவஸ்து கடத்தல் வியாபாரம் ஆகியவற்றையும் ஆட் கடத்தல், கொள்ளை, பாலியல்வன் முறை என்பனவற்றை முன்னெடுப்பதில் பாதாள உலகம் என்பது முக்கிய பங்கற்றி வருகின்றது. இப்பாதாள உலகக் கோஷ்டியில் பலதரப்பட்டவர்கள் இருந்து வருகின்றனர். மிகப்பெரும் பணக்கார, அரசியல், வர்த்தகப் புள்ளிகளே இப் பாதாள உலகக் கோஷ்டியின் தலைமைகளாக இயங்கி வருகின்றனர். இவர்களிடம் நவீன ரக ஆயுதம் முதல் வாகனங்கள் வரை உள்ளன. நினைத்ததை முடிக்கும் ஆற்றல் பெற்ற இவர்களுக்கு பொலீஸ் முதல் அமைச்சர்கள் வரை உற்ற நட்பு சக்திகளாவர். இத்தகையோர் சட்டத்தின் சகல ஒட்டைகளுக்குள்ளும் புகுந்து தமது பாதாள உலக ராச்சியத்தை நடாத்திவருகிறார்கள். இன்று அவதானித்தால் பெரும் பாராளுமன்ற ஆளும் வர்க்க கட்சிகள் ஒவ்வொன்றின் பின்னாலும் பல பாதாள உலகக் கோஷ்டிகள் இயங்கி வருவதைக் காணலாம். இவர்களிடமே ஒப்பந்தக் கொலைகள் ஒப்பந்த ஆட்கடத்தல் கொள்ளைகள் அரசியல் விரோதிகளை வேட்டையாடுதல் என்பன ஒப்படைக்கப் படுகின்றன. இப் பாதாள உலகக் கோஷ்டிகளில் படைகளில் இருந்து தப்பியோடியோர் தாராளமாக இருந்து வருகின்றனர். சமூகக்கேடுகள் எனப்படுவன வற்றின் பின்னால் இந்தப் பாதாள உலகக் கோஷ்டிகளே இருந்தும் வருகின்றன.

இவற்றுக்கும் அப்பால் சினிமா ஆபாச சஞ்சிகைகள் நூல்கள் மற்றும் நிழற்படங்கள் என்பனவற்றின் மூலமான பண்பாட்டுச் சீரழிவுகள் முற்றிலும் வணிக நோக்கில் பரப்பப்படுகின்றன. இதற்கு இளந்தலைமுறையினர் பலியாகி வருகின்றனர். அவ்வாறே மேனாட்டு நடை உடை பாவனை மூலம் தங்களை அந்தஸ்து உள்ள வர்களாகவும் நாகரீகம் படைத்தவர்களாகவும் காட்டும் போக்கு இளைஞர் யுவதிகள் மாணவர்களிடையே அந்நிய மோகமாக வளர்ந்தும் வருகின்றன இதனால் அழகு சாதனப் பொருட்களும் அவற்றுக் கேற்ற உடைகளும் விற்பனையாக்க படுகின்றன. நகரங்களில் சூதாட்ட நிலையங்கள் மஜாஜ் நிலையங்கள் பகிரங்கமாகவே செயல்படுகின்றன. கருக்கலைப்பு நிலையங்கள் பகிரங்கமாகவே இயங்கி வருகின்றன. நாளாந்தம் இந்த நிலையங்களில் இளம் யுவதிகள் சென்றுவருவது இயல்பாகி வருகிறது.


இவ்வாறான சமூகச் சீரழிவுகள் என்பன தற்செயலபனவை அல்ல. கடந்த இருபது வருடகாலத்தை எடுத்து நோக்கின் அக்கால கட்டத்தில் அறிமுகமாகி வளர்ச்சி பெற்ற தாராள பொருளாதாரம் தனியார் மயம் என்பனவற்றைச் சாத்தியமாக்கிய உலக மயமாதலின் ஊடுருவல்களுடனேயே இச் சமூகச் சீரழிவுகளும் வளர்ச்சி கண்டன என்பதைக் காணுதல் வேண்டும்.

சிலர் மேலெழுந்தவாரியாகக் கூறுவது போன்று சமயபோதனைகளை இளந்தலை முறையினர் கைக்கொள் லாமை யால் வந்த கேடுதான் இச் சமூகச் சீரழிவுகள் அல்ல. அல்லது பாடசாலைகளில் நல்ல கருத்துக்களும் வழிகாட்டல்களும் வழங்காமையால் வந்த விளைவுகள் அல்ல அவை. உண்மையில் சமூகச் சீரழிவுகளின் ஒவ்வொன்றின் பின்னாலும் இச் சமூகக் கட்டமைப்பின் தீய விளைவுகள் உறைந்திருப்பதையே நாம் காணுதல் வேண்டும். பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுத்துறைகளில் பின்பற்றப் படும் கொள்கைகளும் நடைமுறை களும் தான் சமூகச் சீரழிவின் ஊற்று மூலங்களாகும்.

எப்படியும் பணம் சொத்து சுகம் தேட லாம் என்ற தனிநபர் வாதப் போக்கும் அதற்காக மனித நேயம் மனித உறவுகள் மற்றையோரைப்பற்றிய அக்கறையின்மை போன்ற வற்றின் விளைவுகளையும் சமூகச் சீரழிவுகள் தன்மைகளையும் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும். சமூக அக்கறை அற்ற விதத்தில் தனிநபர் முன்னேற்றத் தை வற்புறுத்தும் முதலாளித்துவச் சிந்தனையும் செயலும் முழுச் சமூகக் கட்டமைப்பை நாசகாரப்பாதையில் இட்டுச் செல்கிறது. தனிநபர் லாபமும் சொத்து சுகம் தேடலும் பொருளாதார சுரண்டல் ஏற்றத்தாழ் வையும் இல்லாமைகளையும் ஏற்படுத்துகின்றன. இவற்றை மறைக்கவும் உண்மையன பிரச்சினைகள் மீது மக்களின் கவனம் திரும்பாமல் இருக்கவும் திட்டமிட்டே சமூகச் சீரழிவுகள் திணிக்கப்படுவதும் இடம் பெறுகின்றன.

எனவே சமூகச் சீரழிவுகள் என்று அடையாளப்படுத்தப்படுகின்ற ஒவ் வொன்றின் பின்னால் இருக்கக் கூடிய பொருளாதார அரசியல் சமூக பண் பாட்டுக் காரணிகளும் அவற்றின் வேர்களும் கண்டு கொள்ளப்படல் வேண்டும். அவற்றை வெறும் போதனைகளாலோ அன்றி நல்வழிப் படுத்தல்களாலோ இல்லாதொழிக்க முடியாது மக்களுக்கு உணர்த்தப் படல் வேண்டும் இன்றைய ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் ஒடுக்கு முறைகளும் கொண்ட சமூகக் கட்டமைப்பைச் சகல வழிகளாலும் கேள்விக்கு உட்படுத்தி எதிர்த்துப்போராடுதல் வேண்டும். அது நிச்சயம் சமூக மாற்றத்திற்கான போராட்டமாகவே இருக்கும். அப்போராட்டத்துடன் சமூகச் சீரழிவுகளுக்கு எதிரான போராட்டம் இணைக்கப்படுவது அவசியமானதாகும். அப்பொழுதுதான் இன்றைய சமூகச் சீரழிவுகளை இல்லாதொழிக்க முடியும்.

# இடைக்காலத் தீர்வும் முஸ்லீம்களின் மூன்றாம் தரப்பு பங்குபற்றலும்



போர் நிறுத்தத்தை அடுத்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் மூலம் போதியளவு முன்னேற்றங் காணப்படாத தாலும் ஏற்கப்பட்ட பல முக்கியமான முடிவுகள் நடைமுறைப்படுத்தப்படாத தாலுமே விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைகளிலிருந்து விலகிக் கொண்டனர். அதை அடுத்து, அரசாங்கம் தனது இடைக்காலத் தீர்வு ஆலோசனைகளாக முன்வைத்த கருத்துக்களை விடுதலைப் புலிகள் ஏற்க மறுத்துத், தமது மாற்று யோசனைகளை முன்வைத்தனர். தொடர்ந்து நிகழ்ந்த பல அதிரடி நடவடிக்கைகளும் அரசியல் அதிகாரப் போட்டியுங் காரணமாக, இன்று அமைதிப் பேச்சுவார்த்தைகள் பெரும் நிச்சயமின்மையை எதிர் நோக்கு கின்றன. இந்த நிச்சயமின்மையை மேலுங் குழப்பத்திற் குட்படுத்தி நாட்டின் அமைதியைக் குலைத்துத் தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்து வதற்கான அயல் மேலாதிக்க முயற்சிகளும் மும்முரமாகின்றன.

இந்தச் சூழலில் விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தீர்வுக்கான ஆலோசனைகளை விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் முன்னெ டுக்கும் போது, அதில் மூன்றாவது தனித்தரப்பாகப் பங்குபற்றும் யோசனை கிழக்கு மாகாண முஸ்லிம் தலைமை களால்

**முஸ்லீம் தேசிய இனத்தின் நியாயமான அபிலாஷைகளும் அச்சங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.**

முன்வைக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதையோ வட கிழக்கில், குறிப்பாக கிழக்கில், இன்று திட்டமிட்டே இன உறவுகள் மோசமாக்கப் படும் சூழ்நிலையில், அவர்களது நியாயமான அச்சங்கள் கணிப்பில் எடுக்கப்பட வேண்டும் என்பதையோ . பற்றி எவரும் எவ்வித மான தயக்கத்தையுங் காட்ட நியாய மில்லை. ஆயினும் எந்த அடிப்படையில் மூன்றாவது முஸ்லிம் தரப்புப் பங்குபற்றுவது என்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் உள்ளன. அதே வேளை, முஸ்லிம் தரப்புப் பங்குபற்றல் என்பதை முன்வைத்துத் தமக்குள் மோதும் கிழக்கு மாகாண முஸ்லிம் தலைமை களின் அதிகாரப் போட்டியின் விளைவாகப் பேச்சுவார்த்தைகளை இழுத்தடிக்கும் பணிகளும் நடவாமற் குழப்பும் பணிகளும் தீவிரப் படுத்தப்கின்றன. எனவே தான், நீண்ட காலத் தீர்வு தொடர்பாகவும் இடைக்காலத் தீர்வு தொடர்பாகவும் சில அடிப்படைகளைத் தெளிவுபடுத்துவது முக்கியமானது. அனைத்திலும் முக்கியமாக, இன்றைய அமைதிப் பேச்சுவார்தைகள் யாருக் கிடையிலானவை எந்த முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை, அவற்றின் நடைமுறைப்படுத்தலின் பொறுப்பு யாருடையது என்பவற்றையும் நாம் மறக்கக் கூடாது அவ்வாறே, இடைக்காலத் தீர்வு ஆலோசனைகள் எதைப் பற்றியன என்பதையும் அவை அவசியமாகிய சூழல் என்ன என்பதையும் நினைவிலிருத்துவதும் அவசியம்.

முதலாவதாக, இன்றைய அமைதிப் பேச்சுவார்த்தைகளும் போர் நிறுத்தமும் இரண்டு போரிடும் தரப்புக்களிடையி லானது. ஒரு புறம், பேரினவாத ஆட்சியும் அரச யந்திரமும், மறுபுறம் தமிழ் தேசியவாத விடுதலைப்புலிகள் இயக்கமும் அதன் ஆயுதப் படையும் உள்ளன. இவர்களிடையிலேயே போர் நிறுத்தமும் புரிந்துணர்வு உடன்படிக்கை யும் ஏற்படுத்தப்பட்டன. இவற்றின் முதன்மையான நோக்கங்களில் மக்களைத் தமது இயல்பு வாழ்க்கைக்கு மீட்பதும், புனரமைப்பும், மீளக்கட்டியெழுப் பலும் உள்ளடங்குவன. இவற்றைச் செயற்படுத்து வதற்கான அடிப்படை யான பொறுப்பு, உடன்படிக்கையில் புகுத்தும் போது, புதிய சிக்கல்கள் உருவாகின்றன.

வடகிழக்கில் விடுதலைப்புலிகள் குறித்து அச்சமும் ஐயமும் உடையவர்கள் என்பது அங்குவாழும் முஸ்லிம்களின் அளவுக்கோ அதை விடக் கூடுதலாக வோ அவர்களது அயலில் உள்ள சிங்களவர்கட்கும் உண்டு. அவர்களுக் காக பேசும் உரிமையை பொதுசன முன்னணி அல்லது ஜே.வி.பி அல்லது சிஹல உறுமய கோர இடமில்லையா? அவ்வாறே விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்க மறுக்கிறதாகக் கூறும் அரசியல் அமைப்புக்கள், அரச கட்டுப்பாட்டில் உள்ளவர்களும் நாளை விடுதலைப் புலிகளால் நெருக்குவாரங்கட்கு உட்படக் கூடியவர்களுமாகத் தாங்கள் கருதும் தமிழ் மக்களது சார்பாகப் பங்குபற்றும் உரிமைமையக் கோர இடமில்லையா?

இவற்றை விட முக்கியமாக, இன்றைய மூன்றாந்தரப்புக் கோரிக்கை, வடகிழக்கில் உள்ள முக்கிய முரண்பாடு தமிழருக்கும் முஸ்லிம்கட்குமிடையி லானது என்ற கருத்தை வலியுறுத்து கிற நோக்கிலேயே வளர்த்தெடுக்கப் பட்டு வருகிறது. அண்மைக்காலங் களில், கிழக்கிலங்கை முஸ்லிம் தலைமைகள் (முஸ்லிம் காங்கிரஸி ணின்று பிளவுபட்ட மூன்று தலைமை களும் புதிதாகக் கிளம்பியுள்ள தமிழர் விரோத தீவிரக் குழுக்களும் உட்படத்) தமிழ் - முஸ்லிம் முரண்பாட்டை ஒரு பகை முரண்பாடாக்குகிற விதமாகவே பேசியும் செயற்பட்டும் வருகின்றன. இதன் விளைவாகவும் தமிழ்த் தேசிய வாதத்துக்குள் வேரூன்றியுள்ளதான முஸ்லிம்கள் பற்றிய ஐயங்களின் விளைவாகவும் தமிழ் வாக்காளர்களைக் கவரும் தேவை கருதியும், தமிழ்த் தலைமைகளும் தமிழ் - முஸ்லிம் மனக்கசப்பை வளர்ப்பதற்குத் தான் உதவி வருகிறார்கள்.

சில வன் சம்பவங்களின் எதிர்வினை யாக முஸ்லிம்கள் தமிழ் வணிகர்களைப் பகிஷ்கரிப்பது எனவும் தமிழர்கள் முஸ்லிம் வணிகர்களைப் பகிஷ்கரிப்பது எனவும் தூண்டிவிடப்படும் குரோதம் உண்மையில் யாருக்கு வசதியாகிறது? பேரினவாத அரச படைகளும் சிங்கள இனவாதிகளும் இதனால் நன்மை அடைவது பற்றித் தமிழ், முஸ்லிம் தலைவர்கட்கோ தீவிரவாதிகட்கோ அற்ப அக்கறையும் இல்லை. சிஹல உறுமய கிழக்கு முஸ்லிம்கட்காக இரங்கும் விநோதத்தை நாம் அண்மையிற் கண்டோம். கிழக்கிலங்கை யில் திட்டமிட்ட குடியேற்றங்களால் தமது விவசாயப்பகுதிகளை இழந்தவர்கள் தமிழர்கள் மட்டுமல்ல, முஸ்லிம்களும் தான். இந்தப் போக்கு இன்னும் ஓயவில்லை. அம்பாறை, திருகோண மலை மாவட்டங்களைச் சிங்களமயமாக்கும் திட்டத்தைப் பேரின வாதிகள் இன்னமுங் கைவிடவில்லை.

சோம தேரோவின் சாவின் பின்பான நிகழ்வுகள், பௌத்த சிங்கள வெறி இன்னமும் உயிரோட்டத்துடனேயே உள்ளது என்பதையும் அதை ஊட்டி வளர்க்கும் பேரினவாதத்தின் வர்க்க அடிப்படை சிங்கள முதலாளியமே என்பதையும் அதை நேருக்கு நேர் நின்று எதிர்க்கும் திராணி பெரிய அரசியற் கட்சிகட்கு இல்லை என்பதையும் அவர்களும் சிங்கள பௌத்த தீவிரவாதத்தைப் பயன்படுத்தத் தயங்கமாட்டார்கள் என்பதையுமே உறுதி செய்தன. அதை விடவும் மீண்டும் புத்தளத்தில்



சென்ற வருட இறுதியில் நடந்த வன்முறை. முஸ்லீம் களுக்கெதிரான பிரதான அச்சுறுத்தல் எது என்பதையே நினை வூட்டியது. இதைத் தென்னிலங்கை முஸ்லிம் அரசியல் வாதிகள் அறிந்தாலும், தமது பாராளுமன்றப் பதவிகட்குப் பேரின வாதிகளுடன் கூட்டுச் சேரும் தேவை யால், இவ்விடயம் பற்றி வெளியில் அதிகம் பேசுவதில்லை. ஆனால் கிழக்கிலங்கை முஸ்லிம் தலைமைகளோ பேரினவாதிகளுடன் தமது அரசியல் பேரத்தை நியாயப்படுத்த இந்த முரண் பாட்டை மறைத்துத் தமிழருடனான முரண்பாடே முக்கியமானது என்ற விதமாகப் பிரசாரம் செய்கிறார்கள்.

இந்து என்ற அடையாளத்தை வற்புறுத்து கிற சில தமிழ்த் தலைவர்களும் பிரமுகர்களும், சிங்கள பௌத்தத்துடன் தம்மை நெருக்கமாக்கி முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் ஓரங்கட்டும் நோக்கில் செயற்படுவதும் கவனத்துக்குரியது. இந்தியாவின் இந்துத்து

**தமிழருக்கும் முஸ்லீம்களுக்கும் இடையிலான முரண்பாட்டைப் பிரதானப்படுத்தும் குறுகிய தேசியவாதப் போக்குத் தடுத்து நிறுத்தப்பட வேண்டியதாகும்.**

வாதிகளது ஊக்குவிப்பு இந்தப் போக்கிற்கு வலுவூட்டுகிறது. அதே வேளை, இந்துத்துவ ஆட்சியும் இந்திய அரச நிறுவனமும் அதிகார வர்க்கமும், தமது விஷமத்தனமான செயற்பாடு களில் ஒரு பகுதியாகத், தமிழ் முஸ்லிம் பகைமையை வளர்க்கும் முஸ்லிம் அரசியல் தலைவர்கட்கும் உதவி வருகிறார்கள்.

இந்தப் பின்னணியிலேயே, வடகிழக்கில் வழமையான வாழ் நிலையை மீட்டெடுக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக நோக்க வேண்டிய இடைக்கால . நிருவாக ஆலோசனை களையும் அதுபற்றிய பேச்சுவார்த்தை களையும் கையாள வேண்டியுள்ளது. அதற்கு முரணாகத், தமிழ் முஸ்லிம் முரண்பாட்டை பேரினவாத அரசுக்கும் அரசால் ஒடுக்கப்பட்டுப் போராட நிர்ப்பந்திக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டுக்குச் சமனாக்கி சிங்கள பேரினவாத - முஸ்லிம் முரண்பாட்டை மழுப்பும் முயற்சியாகவே இன்று மூன்றாவது முஸ்லிம் தரப்பு என்ற ஆலோசனை பயன்படுகிறது. அண்மைக்கால அரசியற் பின்னணியில் நோக்குகையில், இவ்விதமான முயற்சிகள் முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதை விட இடைக்காலத் தீர்வைக் குழப்புவதற்கே உதவும், என்று தோன்றுகிறது.

அதற்காக எவரும் முஸ்லிம்களது தரப்பிற்கு இடமே தேவையில்லை என்பது மிகவும் தவறானது. முஸ்லிம் தலைமைகளிற் பெரும் பகுதி அரசாங்கத்தைச் சார்ந்தே செயற்படு கின்றது. அதை விடவும் வடகிழக்கு முஸ்லிம்களது குறிப்பான கவ்லைகளைப் பற்றியும் வடகிழக்கின் சிங்கள மக்களது குறிப்பான கவலைகளைப் பற்றியும் பேச வேண்டிய பொறுப்பு அவர்கள் வாழும் பகுதிக்குப் பொறுப்பாயுள்ள அரசாங்கத்தினதாகும். எனவே, அந்த அக்கறைகளை அரசாங்கம் கவனித்துக் கொள்ள வேண்டியுள்ளது. அரச தரப்புடன் இணைந்து அதில் ஒரு பங்காளியாகவோ அவதானிகளாகவோ முஸ்லிம் பிரதிநிதிகள் பங்குபற்றுவது, இடைக்காலத் தீர்வைப் பொறுத்தவரை இயலுமானதும் பயன் தரக் கூடியதுமாகும். நீண்ட காலத்தீர்வு, மேலும் விரிவான நாடளாவிய பங்குபற்றலை வேண்டி நிற்கலாம்.

அதே வேளை, முஸ்லிம் தலைமைகள் தமது கருத்துக்களை விடுதலைப் புலிகளிடமும் நேரடியாகத் தெளிவு படுத்துவதும் மிகவும் பயனுள்ளது. இவ்விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோர் ஆற்றக் கூடிய ஆரோக்கியமான பணிகள் உள்ளன. தமிழ், முஸ்லிம் தலைவர்கள் தமக்குள் இவ்விடயங்கள் பற்றிய கலந்தா லோசனைகளைச் செய்வதற்குத் தடையாகப் பாராளுமன்ற ஆசனக் கணக்குகள் இருக்கலாம். ஆயினும் தமிழ் - முஸ்லிம் நல்லுறவு நாம் இழக்கக் கூடாத ஒன்று. இது சிங்கள மக்களுடனான நல்லுறவு என்ற நீண்டகால நோக்குக்கு உடந்தையான முறையிற் பேணப்பட வேண்டியதாகும்.

விடுதலைப்புலிகளின் இடைக்கால தீர்வு ஆலோசனைகள் அவர்களது அதிகபட்ச வேண்டுகோள்களைக் குறிக்கும். அதில் முஸ்லிம்கட்குரிய கவனிப்பும் போதாது என்பதோ அறவே இல்லை என்பதோ அதை நிராகரிக்கப் போதிய நியாயமாகாது. அதில் எவ்வாறு முஸ்லீம்களது பல் வேறு நலன்களையும் அச்சங்கட்கெதிரான உத்தரவாதங் களையும் உள்ளடக்கலாம் என்பது தான் அரசியற் பொறுப்பான செயல். வடக்குக் கிழக்கைப் பிரிப்பதற்கான மிரட்டல்களும் இடைக்கால நிருவாக ஆலோசனை யை விரிவுபடுத்துகிற பேரில் மேலும் இழுத்தடிப்பை இயலுமாக்குவதும் இன்றைக்கு மக்கள்

**இடைக்காலத் தீர்வு நீண்ட காலத் தீர்வு ஆகியவற்றின் தேவைகளும் நடைமுறைகளும் வெவ்வேறு பட்டவைகளாகும். ஒன்றுடன் மற்றயதைக் குழப்பக் கூடாது.**

எதிர்நோக்குகிற அவல நிலையை மேலும் மோசமாக்கிப் போருக்கான வாய்ப்பையே அதிகப் படுத்தும். இவை பற்றி அறியாமல் யாரும் இவற்றைச் செய்வதாகவோ செய்யத் தூண்டுவதாகவோ நாம் எண்ண இடமில்லை.

இன்றைய பிரச்சினை விடுதலைப் புலிகளை நம்ப முடியுமா என்பதல்ல. அவர்களை நம்பக் கூடிய அதே அளவுக்கு அல்லது அதிலுங் குறை வாகவே யூஎன்.பி அரசாங்கத்தையோ சனாதிபதியையோ நம்ப இயலுமா யுள்ளது. ஆனாலும் அவர்களுடனும் தான் பேச வேண்டியுள்ளது. சில வகைகளில் விடுதலைப் புலிகள் கேட்பது என்னவென்று விளங்கும் அளவுக்கு, அரசாங்கம் சொல்வது என்ன என்று விளங்க இயலாமலும் உள்ளது. தேசியவாத பாராளுமன்ற அரசியற் கட்சிகள் யாவுமே, விலக்கில்லாமல், தேசிய இனப்பிரச்சினையைத் தாயக்கட்டையை உருட்டுவது மாதிரி உருட்டுகின்றன.

எனவே தமிழ் - முஸ்லிம் மக்கள் முதலில் தமது பொதுவான தேவைகளை எவ்வாறு இணைந்த வட கிழக்கின் இடைக்கால நிருவாகத்தின் கீழ் நிறைவு செய்வது என்று முதலில் யோசிக்க வேண்டும். அடுத்த படியாக வரலாற்றுக் காரணங்களாலும் திட்டமிட்ட அண்மைக்காலச் சதிகளாலும் ஏற்பட்டுள்ள ஐயங்கட்டும் அச்சங்கட்கும் எதிராக உரிய கவனமெடுத்து, முஸ்லிம்களதும் சிங்கள மக்களதும் பாதுகாப்பு மட்டுமன்றி ஒவ்வொரு அடிப்படை உரிமையும் பேணப்படும் விதமாக இடைக்கால நிருவாகம் அமைவதற்கு ஆக்க பூர்வமான வழிகளைத் தேடவேண்டும்.

பாராளுமன்ற அரசியல்வாதிகளை விட, ஏமாற்றுக்கார என்.ஜி.ஓக்களை விட, வெகுசன அமைப்புக்களும் மக்கள் பங்குபற்றும் திறந்த விவாதங்களும் இதற்கு உதவும். மக்கள் தமது நலன்கட்காகப் பேசுவதற்குத் துணியும் போது, அவர்களைப் பிளவுபடுத்துகிற சக்திகள் பலவீனமடைகின்றன. நாம் என்றென்றைக்கும் மறக்கக் கூடாதவற்றுள் ஒன்று தேசிய இன முரண்பாடு ஒரு சினேக முரண்பாடு என்பதாகும். எவ்வளவு தூரத்துக்கு ஒவ்வொரு தேசிய இனமும் மற்ற ஒவ்வொன்றினதும் தனித்துவத்தையும் இருப்பையும் மதிக்கிறதோ, அவ்வளவு தூரத்துக்கு அவை நெருக்கமாக முடிகிறது. தமிழ்த் தேசியவாதமும் முஸ்லிம் தேசியவாதமும் அதற்கு எதிராகச் செயற்படுகின்றன. அந்த அரசியலை நிராகரிக்காமல் அமைதிக்கான முயற்சிகள் ஒரு நியாயமான தீர்வை நோக்கி நகர இடமில்லை. அந்த நோக்கில் தமிழ் முஸ்லிம் உரையாடல்களை நாம் முன்னெடுக்க வேண்டும்.

- அவதானி -

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# கல்வியும் சமூகமும்

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

இலங்கையில் இருந்த மூன்று கொலனிய நிருவாகங்களுள் மேலைத்தேயக் கல்வியின் பரவலாக்கம் பிரித்தானிய நிருவாகத்தின் கீழேயே பெரிதும் நடைபெற்றது. இதற்குப் பிரித்தானிய நிருவாகம் மற்றைய கொலனிய நிருவாகங்களை விட முற்போக்கான பார்வையுடையதாக இருந்தது காரணமாகாது. ஒவ்வொரு கொலனிய ஆட்சியும் ஏற்பட்ட காலமும் அக்காலத்திற் கொலனித்துவத்தின் நோக்கமும் கொலனித்துவ முறை செயற்பட்ட விதத்தைத் தீர்மானித்தது. போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கத் திருச்சபை மதமாற்றத்திற்கு மிகுந்த முக்கியம் வழங்கியது. தமது கொலனிய விஸ்த்தரிப்பை நியாயப்படுத்த அஞ்ஞானிகளை விசுவாசிக்கும் புனித நோக்கம் கொலனிய அதிகாரத்தின் தாயகத்திற்குத் தேவைப்பட்டது. எனினும் போர்த்துக்கேயரின் கீழ் விரிவான ஒரு கொலனிய உற்பத்திப் பொருளாதார முறை ஏற்படுத்தப்படவில்லை. வணிக ஆதிக்கமே முதன்மையான நோக்கமாக இருந்தது. கட்டாயத்தின் பேரிற் கரையோரப் பகுதிகளிற் குறிப்பாக இலங்கையின் மேற்கிற் பெருமளவிலான மதமாற்றம் நடந்தது. எனினும் கத்தோலிக்கத்துக்கு மதம் மாறினோரின் நிலை பொருளாதார வசதியோ சமூக மேம்பாடோ கருதிப் பின்னாளில் மதம் மாறியவர்கள் போன்றதல்ல.

**கொலனிய ஆட்சியினர் தமது பொருளாதாரச் சுரண்டலுக்கு ஏற்ற விதமான நிர்வாக அமைப்புக்கு உரிய நடுத்தர வர்க்கத்தினரையே கொலனியக் கல்வி மூலம் உருவாக்கினர்.**

டச்சுக்காரரிடம் இலங்கை கைமாறிய காலம் கிறிஸ்துவத்தில் ஏற்பட்ட பிளவின் விளைவாக புரட்டஸ்தாந்து -கத்தோலிக்க மோதல் ஐரோப்பாவில் வலுப் பெற்றிருந்த காலமாகும். எனவே டச்சு நிருவாகம் கத்தோலிக்க மதத்தவரை இன்னல்கட்குட்படுத்தியது. டச்சுக் கொலனிய நிருவாகம் ஏற்பட்ட காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட சமூகச் சீர்திருத்தங்கள் இலங்கையிலிருந்த கொலனிய நிருவாகத்திலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியது. சட்டத்தின் அடிப்படையில் கொலனிய நிருவாகம் வலுப்பெற்ற காலமாக அது அமைந்தது. டச்சுக் காலத்திலே பாடசாலைகள் பல நிறுவப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனினும் இன்றைய கல்விமுறையின் வேர்கள் பிரித்தானிய நிருவாகத்தின் கீழே உருவாகி விருத்தி பெற்ற ஒரு கல்வி முறையைச் சார்ந்தது.

பிரித்தானியரது ஆட்சியின் கீழ் முதலிற் கரையோரப்பகுதியும் குறுகிய காலத்தினுள் கண்டி இராச்சியமும் வந்த பின்பு இலங்கையில் வணிகப் பயிர்ச்செய்கை மூலம் பெரும் லாபத்தைத் தரவல்ல தோட்டப் பொருளாதாரம் உருவானது. இதனை மையமாகக் கொண்டு தான் பிரித்தானிய ஆட்சியின் கீழ் இலங்கையின் பொருளாதாரமும் அரசியலும் பாரிய மாற்றங்கட்குள்ளாயின. உணவுப் பயிர்ச் செய்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு விவசாயப் பொருளாதாரத்தில் வரிகள் மூலம் பெறப்பட்டதை விட அதிகமாக வணிகப் பயிர்களான தேயிலை இரப்பர் தென்னை என்பன மூலம் பெருமளவு பொருளைப் பிரித்தானியக் கொலனியாட்சியாற் பறித்தெடுக்க முடிந்தது.

எந்தக் கொலனிய நிருவாகமும் தனது பொருளாதாரச் சுரண்டலின் அளவுக்கேற்ப அயலிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் பகைமையைச் சம்பாதித்துக் கொள்ளுவது தவிர்க்க இயலாதது. எனவே தனக்கு விசுவாசமான ஒரு அதிகார வர்க்கத்தை உருவாக்குவதும் தனது நிருவாகத்தை அவர்கள் மூலமாக நடைமுறைப்படுத்துவதும் கொலனிய நிருவாகத்துக்குப் பல வழிகளிலும் பயனுள்ளதாக இருந்தது. இந்த நிருவாகிகளைக் கொண்ட நடுத்தட்டு வர்க்கம் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ளுரிலேயே உற்பத்தியானது. ஆபிரிக்கக் கொலனிகளில் அவ்விதமாக அமையவில்லை.

ஏற்கெனவே கொலனியவாதிகளுடன் சமரசம் செய்து பழக்கப்பட்ட ஒரு அதிகாரவர்க்கமும் சாதி அடிப்படையிலான சமூக பொருளாதாரா ஏற்றத் தாழ்வுகளும் இந்தப் புதிய அதிகார வர்க்கத்தின் உருவாக்கத்திலும் கொலனிய ஆட்சிக்குக் கீழ்ப்படிவான ஒரு அதிகார அடுக்கை நிறுவுவதிலும் மிகவும் பயன்பட்டன. எனவே டச்சுக்காரரது ஆட்சியின் கீழ் இறுக்கமடைந்த சாதியச் சமூகம், பிரித்தானிய ஆட்சியாளரால் தமக்கு வசதியானபடி பயன்படுத்தப்பட்டது.

யாரை நம்பலாம் என்ற விடையத்தில் கொலனித்துவம் இன அடிப்படையிலும் மத அடிப்படையிலும் சில வழிகாட்டல்களைப் பின்பற்றியமை அதன் மேலாதிக்கச் சிந்தனைக்கு இயல்பானது தான். பிரித்தானியரது ஆட்சியின் கீழ் அதற்கு முன்பிருந்ததை விடப் பெரிய நிருவாக அமைப்பை உருவாக்க வேண்டிய தேவையைச் சார்ந்து ஆங்கிலக்கல்விக்கான பாடசாலைகள் நிறுவப்பட்டன. இதிற் கணிசமான பகுதி மதச்சார்பான நிறுவனங்களால் பொறுப்பேற்கப்பட்டது. இவ்வசதிகளைப் பெறுவதில் டச்சுக்காரரது பரம்ரையில் வந்த பறங்கியர் மதம் மாறிக் கல்வி பெற முன்வந்த உள்ளுர் மேட்டுக் குடிகள் போன்றோர் முன்னின்றனர். பிரித்தானிய புரட்டஸ் தாந்து மத நிறுவனங்களைத் தொடர்ந்து கத்தோலிக்கத் திருச்சபையும் கல்வித் துறையில் மிகுந்த கவனங் காட்டியது. பின்னர் அமெரிக்க புரட்டஸ்தாந்து மத நிறுவனங்கள் வந்த போது கொழும்பில் இருந்த ஆங்கிலேயத் திருச்சபையினர் அவர்கள் கொழும்பிற் செயற்படுவதை விரும்பாததால் கொலனிய நிருவாகத்தின் உடன்பாட்டுடன் அவர்கள் யாழ்ப்பாணத்திற் பாடசாலைகளை நிறுவினர். புரட்டஸ்தாந்து மதங்கட்கான மத மாற்றம் மிகுந்த முனைப்புடன் நடைபெற்றது. மத மாற்றம் என்பது கல்வி உத்தியோகம் என்பன மூலம் சமூக மேம்பாட்டைப் பெறும் வழியாகவே காணப் பட்டது. கத்தோலிக்கத் திருச்சபைகளும் கல்வியை மத மாற்றத்துக்கான கருவியாக்குவதிற் பின்னிற்கவில்லை. எனினும் தமிழ் சிங்கள மேட்டுக்குடிகள் புரட்டஸ்தாந்து மதத்தையே கூடுதலாக நாடினர்.

கொழும்புக்கு அடுத்தபடியாக யாழ்ப்பாணமும் பிற நகரப் பகுதிகளும் கிறிஸ்துவ சமயப்பரப்பாளர்களது கல்வி முயற்சியின் மையங்களாகின. ஆங்கிலக்கல்வி இலவசமாக வழங்கப்படவில்லை. எனவே கல்வியைப் பெற ஒருவர் பணம் உள்ளவராக அல்லது மதம்மாறிக் கல்வியைச் சலுகையாகப் பெறுபவராக அமைவது தேவையாயிற்று. இலங்கையின்

### பேராசிரியர் சி. சிவசேகரம் (6)

பல் வேறு பகுதிகளிற் கல்வியின் வளர்ச்சியும் பாடசாலைகளின் பரவலும் வேறுபட்ட அளவுகளில் அமைந்ததும் ஒவ்வொரு சமூகப் பிரிவுக்கும் வேறுபட்ட விகிதங்களிலேயே எட்டக்கூடியதாக அமைந்ததும் கொலனிய நிருவாகத்தினது தெரிவுகளை மட்டுமல்லாமல் உள்ளுரில் இருந்த சமூக ஏற்றத் தாழ்வுகளுடனும் நெருங்கிய தொடர்புடையது. இதிற் சாதியும் வர்க்கமும் வகித்த பங்கு முக்கியமானது.

ஆங்கிலக்கல்வியின் மூலம் கிடைத்த சமூக நன்மைகளுள் அக்கல்வியின் பரவலாக்கத்துக்கு ஒரு தூண்டுகோலாயின. கிறிஸ்துவத்துக்கான மத மாற்றத்தை விரும்பாமல் ஆங்கிலக்கல்வியை நாடாமலிருந்த பௌத்த, சைவ மேட்டுக்குடியினர் தமது மதச்சார்பான பாடசாலைகளை நிறுவுவதில் அக்கறை காட்டுவதற்குக் கொலனிய முறைக்கு எதிரான சிந்தனையை விடக் கொலனியத்தின் கீழ் தமது வர்க்க நலன்களை மேம்படுத்துகிற நோக்கமே தூண்டுகோலாக இருந்தது.

சுருங்கச் சொல்வதானால் பிரித்தானியக் கொலனி ஆட்சி இலங்கையில் தனது பொருளாதரத் தளமொன்றை நிறுவி அதை நிருவகிப்பதற்குத் தனது மண்ணிலிருந்து ஆட்களைக் கொண்டுவருவதை விடப் பல வகையிலும் இலாபமான முறையில் உள்ளுரிலேயே அந்த நிருவாகி வர்க்கத்தை உருவாக்கும் தேவையையொட்டி உருவான கல்விமுறை, அந்தப் பொருளாதார வளர்ச்சியையோட்டி மேலும் விரிவடைந்தது. எனினும் அந்த விரிவடைதல் பல வேறு சமூக வரையறைகட்கு உட்பட்டுக் கல்வியின் பரம்பலை மிகவும் ஏற்றத் தாழ்வானதாகவே அமைத்தது.

எனவே நாட்டை நிருவகித்த கொலனி ஆட்சி பொதுவான ஒரு கல்விக் கொள்கை ஒன்றை வகுத்தாலும் அது எல்லாருக்குமுரிய ஒன்றாக அமைவது அவர்களுக்குத் தேவைப்படவில்லை. அதை விட முக்கியமாக அவர்களை அண்டிப்பிழைத்த உள்ளுர் அதிகாரவர்க்கத்துக்கு இது உடன் பாடாக அமையவுமில்லை.

# ஏகாதிபத்தியமும் பெண்களும்

நைரோபியில் நடந்த மாதர் மாநாட்டிற்கான ஒரு அறிக்கையின்படி, மூன்றாம் உலகின் சுதந்திர வர்த்தக வலயங்கள் தாம், முழு உலகிலும் மிகத் துரிதமான வளர்ச்சியைக் காட்டும் வேலைவாய்ப்புத் துறையாகும். இங்கே வேலை பார்ப்போரில் ஏகப் பெரும் பாண்மை யானோர் இளம் பெண்கள்.

உலகின் செல்வமிக்க பகுதிகளிலிருந்து வறுமைப்பட்ட பகுதிகளுக்குப் பெயருகிற தொழிலின் தன்மை எப்படியானது? அது ஏன் பெயருகிறது? அது ஏன் பெண் தொழிலாளரை விரும்புகிறது? எல்ஸனும் பியர்ஸனும் "திருமணமும் சந்தையும்" என்ற தமது நூலிற் பின்வரும் நிலைமைகளைச் சுட்டிக் காட்டுகின்றனர்:

மூன்றாமுலகத்துக்கு இடம் பெயர்வது நவீன தொழில்நுட்பத்தின் அதிகபட்சச் செல்வாக்குக்கு உட்பட்ட தொழில்கள் அல்ல. மிக அண்மைக்காலத்துக்குரிய அறிவு தேவையற்றதும் உழைப்பு அம்சம் அதிகமானதுமாக உள்ளவாறு தரப் படுத்தப் பட்டதும் திரும்பத் திரும்பச் செய்கிற தன்மையுடையதுமானதாகவே உற்பத்தி முறை பெரும்பாலும் அமைந்துள்ளது. மேலும் இயந்திரமயப் படுத்துவது கடினமானது என்பதாலோ செலவு மிகுந்தது என்பதாலோதான் அது உழைப்பு அம்சம் மிகுந்ததாக அமைகிறது.

உழைப்பு அம்சம் மிகுதியான தொழிலில் மலிவான உழைப்புக்குக் குறிப்பான முக்கியத்துவம் உண்டு. மூன்றாம் உலகில் உழைப்பு மிக மலிவானது. உலகச் சந்தைத் தொழிற்சாலைகளில் வழங்கப்படும் ஊதியம் பெரும்பாலும் செல்வந்த நாடுகளில் வழங்கப்படுவதில் பத்திலொரு பங்காகும். அதேவேளை வேலை நேரம் 50 சதவீதம் வரையில்



அதிகமானது.

பெண்களுக்கு வேலை வழங்கப்படுவதற்கு ஒரு நல்ல காரணமாகக் குறைந்த ஊதியம் அமைந்துள்ளது. இந்தத் தொழிற்சாலை களில் ஒப்பிடத்தக்க பணிக்கு ஆண்களது ஊதியத்தைவிட பெண்களுடைய ஊதியம் 20-50 சதவீத அளவில் குறைவானது.

இத்தொழிற்சாலைகளில் உற்பத்தி ஆற்றல் அதிகம்: பெருமளவும் அமெரிக்கத் தொழிற்சாலைகளில் செய்யப்படும் வேலைகளை விட அதிகம். இது உயர்ந்த தொழில் நுட்பத்தின் விளைவானதல்ல. மாறாக, அதிகம் செறிவான உழைப்பாலும் அதிகளவு தொடர்ச்சியான உழைப்பினாலுமானது.

சுருங்கச் சொன்னால் உழைப்புச் சக்தியின் மீதான அதிக ஆளுமையின் விளைவானது. நாம் முன்னர் கண்டதுபோல, மிகுந்த கட்டுப்பாடான உழைப்பு வேண்டிய பணிகட்குப் பெண்கள் கூடப் பொருத்தமானவர்கள். ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான சக்திச் சமநிலையைப் பாவித்துப் பெண்களிடமிருந்து கூடுதலான உழைப்பை உறுஞ்ச முடிகிறது. இது பல விதங்களிற் செய்யப் படலாம்: மேற்கு ஜாவாவிலிருந்து ஸீலியா மேதர் விவரித்திருப்பது போல, உற்பத்தித் துறைக்கு வெளியே உள்ள மரபு சார்ந்த அதிகார உறவுகளை உற்பத்தித் துறைக்குள் பயன் படுத்துவது. மலேசியாவின் பன்னாட்டுக் கம்பனிகள் பற்றிய தமது உதாரணத்தை எல்ஸனும் பியர்ஸனும் தந்துள்ளனர். மரபுசார்ந்த ஆணாதிக்க அதிகாரத்தை அவர்கள் வேண்டுமென்றே பாதுகாக்க முயலுகிறார்கள். "நவீன மேலைத்தேய" நடத்தையை ஊக்குவித்து மகள் மீதான தகப்பனின் அதிகாரத்துக்குக் குழிபறிப்பதற்கு மாறாக, அவை மரபு சார்ந்த நடத்தையை ஊக்குவிக்கின்றன. தொழிற்சாலைக்குள்ளேயே கம்பனி தொழுகை அறைகளைக் கட்டிக் கொடுக் கிறது. பெண்களுக்கு நவீன சீருடைகள் இல்லை. மாறாகக் கம்பனி அவர்கள் பாரம்பரிய உடைகளை அணிய அனுமதித்து, வேலைத்தளத்தில் கண்டிப்பான, இறுக்கமான கட்டுப் பாட்டைப் பேணுகிறது. ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான சக்திச் சமநிலையைப் பயன்படுத்தும் இன்னுமொரு உபாயமேதெனில், அதை உணர்வுபூர்வமாக வேலையிற் பயன்படுத்துவதாகும்: பெண்களின் வேலையைக் கண்காணிக்க ஆண் மேற்பார்வையாளர்களைப் பாவிப்பது போன்ற நடைமுறைகள் இதில் அடங்கும். அமெரிக்காவின் மெக்ஸிகோ எல்லையை அண்டிய பகுதியில் உள்ள ஒரு எலக்ற்றோனிக்ஸ் கம்பனியில் பாவிக்கப்படும் ஒருமுறை பற்றி எல்ஸனும் பியர்ஸனும் குறிப்பிடுகிறார்கள்: முன்னர் பெண்கள் மட்டுமே வேலை செய்த உற்பத்தி நிரையில் சில ஆண்களையும் அமர்த்து வதன் மூலம் பெண்களின் கட்டுப் பாட்டையும் உற்பத்தித் திறனையும் அதிகப்படுத்த எண்ணுகின்றனர்.

"அவர்கள் திருமணத்துக்குக் காத்திருக்கும் பெண்பிள்ளைகள்" என்ற பேரிற் பெண்களை மேலும் இறுக்கமான முறையிற் சுரண்டி அவர்களை நலிவடையச் செய்ய முடிகிறது. எனவே தமது இளமைப் பருவத்தின் முற்பகுதியிலேயே பெண்கள் வேலையிலிருந்து ஒதுங்குவது "இயல்பாகவே" நடைபெறுகிறது.

மேலும், தொழிலாளர் உரிமைகளிற் பல சுதந்திர வர்த்தக வலயங்கட்குட் செல்லுபடியாகாதவை. உதாரணமாகக் குறைந்த பட்ச ஊதியம், சமூக நலன்கட்கான உரிமை, வேலை நேரம், வேலை நீக்கத்திற்கெதிரான பாதுகாப்பு, வேலையில்லாத காலத்திற்கான உரிமைகள், வேலை நிறுத்தத்திற்கான உரிமை என்பன இவற்றுள் அடங்கும். தொழிலாளி இளம் பெண்ணாகவும் தொழிலாளி வர்க்க மரபில் பலவீனமானவராகவும் இருக்கும் போது இது மிகவும் இலேசாகிறது.

இவையாவும் குறிப்பாகப் பெண் உழைப்பாளர்களைக் கடுமையாகச் சுரண்டுவதை இயலுமாக்குகின்றன. "பெண்மையை" எப்படித் தனது நன்மைக்கும் உலகச் சந்தையின் தொழிற்சாலைகளிலும் பாவிப்பது என்று ஏகாதிபத்தியம் அறியும்.

# சட்டவிரோத ஆயுதங்கள்

இலங்கையில் என்றுமில்லாதவாறு கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. 2 லட்சத்துக்கு மேற்பட்ட சட்டவிரோத ஆயுதங்களை குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் வைத்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவற்றை பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்தால் பொதுமன்னிப்பு வழங்கப்படுமென்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. அவற்றை ஒப்படைப்பதற்குரிய காலக்கெடு கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் சட்டவிரோத ஆயுதங்கள் ஒப்படைக்கப்படுவதாக இல்லை.

அனுமதிப்பத்திரமின்றி துவக்குகள், ரிவோல்வர், பிஸ்டல்கள் போன்றன வைத்திருப்பது சட்டப்படி குற்றமாகும். இவற்றைவிட தன்னியக்க துவக்குகள் போன்றவற்றை வைத்திருக்க அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவதும் இல்லை.

குற்றச்செயல்களில் ஈடுபடும் பாதாள உலக கோஷ்டிகளிடம் எல்லாவித பயங்கரமான நவீன ஆயுதங்களும் இருக்கின்றன். அவற்றை பறித்தெடுக்கவோ அக்கோஷ்டியினரின் குற்றச்செயல்களை நிறுத்தவோ அரசாங்கத்தால் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. ஏனெனில் அதிகமான அரசியல்வாதிகளின் உத்தியோகப் பற்றற்ற பாதுகாப்பு படையாக பாதாள உலக கோஷ்டிகள் இருந்து வருகின்றன. சில அரசியல்வாதிகளும் பெரும் பணம் படைத்தவர்களும் சட்டவிரோத விடயங்களை பாதாள உலக கோஷ்டிகளுடன் சேர்ந்தே செய்கின்றனர்.

அதனால் சட்டமும் ஒழுங்கும் மௌனமாக இருக்கின்றன.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்காவின் அச்சமும் ஆதிக்கத்திமிரும்

அமெரிக்க ஆளும் வர்க்கம் அச்சத்தால் நானாந்தம் நடுங்கி வருகின்றது. எந்த நேரத்திலும் நாட்டின் எந்த இடத்திலும் தாக்குதல் இடம் பெறலாம் என்பதை யிட்டு பாதுகாப்பு நிர்வாகம் ஏத்தனை யோ வழிகளில் செயல் பட்டு வருகிறது. மீண்டும் ஒரு செப்டம்பர் 11 தாக்குதல் போன்று இடம் பெற்றுவிடக் கூடாது என்பதில் வெள்ளை மாளிகையும் பெண்டகனும் இரவு பகலாக விழித்திருந்து அச்சத்துடன் பாதுகாப்பை கவனித்து வருகின்றன. அதேவேளை உலக ஆதிக்க திமிர்த்தனத்தையும் கைவிடத் தயாரில்லாத நிலையிலேயே புஷ் நிர்வாகம் இருந்து வருகின்றது.

இவ்வாறு புஷ் நிர்வாகம் அஞ்சி நடுங்குவதாலேயே ஜனவரி 5ம் திகதியில் இருந்து தமது விமான நிலையங்கள் துறைமுகங்கள் ஊடாக அமெரிக்காவிற் குள் விசா பெற்றுப் பிரவேசிப்பவர்களின் கைவிரல் அடையாளங்களையும் புகைப்படங்களையும் பதிவு செய்யும் நடைமுறையைக் கொண்டுவந்துள்ளது. இந்த நடைமுறையினை அமெரிக்க சார்பு ஐரோப்பிய நாடுகளோ கண்டித்து வருகின்றன. இது தான் அமெரிக்கா வின் ஜனநாயகம் சுதந்திரம் என உலக மக்கள் கேலி செய்கின்றனர். உலகை ஆதிக்கம் பண்ணி கட்டி ஆள திட்ட மிட்டுள்ள அமெரிக்காவால் தன்னையே சொந்த மண்ணில் பாதுகாக்க முடியாது புதிப்புதுப் பாதுகாப்பு அரண்களை அமைத்து வருகின்ற அவலத்தை அங்கே காணமுடிகின்றது.



அமெரிக்காவின் விரல் அடையாளம் பெறுதல் புகைப்படமெடுத்தல் நடை முறையால் பல நாடுகள் தமது சீற்றத்தை வெளிப்படுத்தி வருகின்றன. லத்தின் அமெரிக்க நாடான பிரேசில் இதற்குப் பதிலடியாக தனது நாட்டிற் குள் விசாபெற்று வரும் அனைத்து அமெரிக்கர்களினதும் விரல் அடை யாளம் புகைப்படம் எடுத்தலை நடை முறைப்படுத்தி வருகின்றது. இது அமெரிக்க திமிருக்கு வீழ்ந்துள்ள பெரும் அடியாகும்.

அமெரிக்க ஆளும் வெள்ளைத்திமிர் கொண்ட உயர் வர்க்கம் சாதாரண அமெரிக்க மக்கள் அனைவரையும் அடக்கி ஒடுக்கியே வருகிறது. குறிப்பாக கறுப்பு ஆபிரிக்க வழிவந்தவர்களான நீக்ரோ மக்களை மிக மோசமான வாழ் நிலையிலும் அடக்கு முறையிலும் வைத்து வருகிறார்கள் இவர்களது சட்டம் நீதி நிர்வாகம் கூட இரட்டைத் தன்மை கொண்டதாகவே நடை முறைப்படுத்தப்படுகிறது. உயர்வர்க்க வெள்ளையனுக்கு ஒரு நீதி நீக்கிறோ விற்கு மாற்றொரு நீதியாகவே இருந்து வருகிறது. அண்மையில் மதுபோதையில் இருந்த ஜேம்ஸ் என்ற கறுப்பர் ரோந்துப் வெள்ளையினப் பொலிசாரால் அடித்தே கொல்லப்பட்டார். வேலைநீக்கம் மட்டுமே அவர்கள் பெற்ற தண்டனை யாகும். பிரபல கறுப்பினப் பாடகாரான மைக்கல் ஜக்சன் இப்போது பொய்க் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளார். சிறுவர்களுடன் பாலியல் தொடர்பு என்பதே குற்றச் சாட்டு. முன்னாள் ஜனாதிபதி பதவியில் இருந்தவாறே அப்பட்டமான பாலியல் விவகாரத்தில் சம்மந்தப்பட்டிருந்த போதிலும் பல வழிகளிலாலும் அவர் விடுவிக்கப்பட்டு புனிதராக்கப்பட்டார். அதே அமெரிக்க நீதி தான் இப்போது மைக்கல் ஜக்சனுக்கு இருபத்திரண்டு வருடசிறைத் தண்டனைக்குள் தள்ள மும்மரமாகி நிற்கிறது. அமெரிக்க நீதி ஜனநாயகம்- மனித உரிமை பற்றி பீற்றிக் கொள்வோர் இவை பற்றி என்ன கூறுவார்கள்.

# விக்கிரமபாகுவின் விகடம்

நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன பிரதமர் ரணில்விக்கிரம சிங்ஹவை சந்திப்பதற்கு முன்பு பத்திரிகைகளில் பெட்டி கட்டி செய்திகள் வெளிவந்தன. சந்தித்த பிறகும் செய்திகள் வெளிவந்தன. பிரதமருடனான சந்திப்பு பற்றி அவர் பத்திரிகையாளர் மாநொடான்றை நடத்தினார். புதிய இடதுசாரி முன்னணியை பிரதமர் சந்திக்கிறார் என்பதும் சந்தித்தார் என்பதும் விக்கிரமபாகுவினாலும், திருநாவுக்கரசினாலும் பெரும் பரபரப்பாக்கப்பட்டது. அவர்கள் ரொஸ்கியை சந்தித்தது போன்று பூரிப்புடன் காணப்பட்டார்கள்.

முதலில் அச்சந்திப்பில் விக்கிரமபாகு மட்டுமல்ல ஜனநாயக இடதுசாரி முன்னணியின் வாசுதேவ நாணயக்கார இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் இந்திக்க குணவர்த்தன லங்கா சமசமாஜக்கட்சியின் லால்விஜேநாயக்க ஆகியோரும் இருந்துள்ளனர். 'புதிய இடதுசாரி முன்னணியை' மட்டும் பிரதமர் சந்திக்கவில்லை.

அச்சந்திப்பு பற்றி பத்திரிகையாளர் மாநாடு நடத்தி சொல்லும் அளவிற்கு பிரதமர் இந்நாட்டு தொழிலாளர்கள், விவசாயிகள், அடக்கப்பட்ட தேசிய இனங்களுக்கு தெரிவித்திருந்த செய்தி தான் என்ன? நாட்டில் தலைவிரித் தாடும் பேரினவாதத்திற்கு எதிராகவும், சமாதான நடவடிக்கைகளை எதிர்ப்பவர் களுக்கு எதிராகவும் இடது சாரிகள் இயக்கங்களை நடத்த வேண்டும். சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவாக மக்களை அணிதிரட்ட வேண்டும். இன்றைய நிலைமையில் தொழிலாளர்கள் சம்பள உயர்விற் காகவும், ஏனைய உரிமைகளுக் காகவும் போராட்டங்களை செய்யக் கூடாது. இதுதான் பிரதமரின் பிரதான வேண்டுதலாகும்.

டிசம்பர் மாதம் 30ம் திகதி நடத்தப்பட்ட நவ சமசமாஜக்கட்சியின் ஆண்டு விழாவில் மிகவும் குறைவானவர்களே கலந்து கொண்டனர். என்பது பற்றி கவலைப்படுவதை விட்டுவிட்டு பிரதமரை சந்தித்தை பற்றியே பெருமைபட்டுக் கொண்டிருக்கிறார் விக்கிரமபாகு.

செய்வது ஒன்றுமில்லை. ஆனால் தன்னைப்பற்றி ஆரவாரமான பிரசாரம் செய்து கொள்வது விக்கிரமபாகுவின் பலவீனம். பப்ளிசிட்டிக்கு காரணமில்லா மல் இல்லை. அவருக்கு தேர்தல் ஜுரம் தான். பாராளுமன்ற எம்.பியாகிவிட வேண்டும் என்ற அவரது குறிக்கோள் அவரை ஆட்டிப்படைக்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்ஹவை இடதுசாரிகள் சந்தித்தது இதுதான் முதற் தடவை அல்ல. பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் இல்லாத இடதுசாரி கட்சிகள், தொழிற் சங்கங்களை பிரதமர் கடந்த வருடம் மார்ச் 27ம் திகதி சந்தித்தார். அப்போது விக்கிரமபாகு அவரது உதவியாளர்களை அனுப்பி வைத்திருந்தார்.

செப்டம்பர் 22ம் திகதி அமைச்சர்கள் ஜீ.எல்.பீரிஸ் ராஜித்த சேனாரட்ன, எஸ்.பி. திசாநாயக்க, பந்துல குணவர்த்தன ஆகியோர் இடது சாரி கட்சி தலைவர்களை சந்தித்த போதும் விக்கிரமபாகுவோ, திருநாவுக்கரசோ அச்சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. அவர்களின் கட்சியைச் சேர்ந்த சில இளைஞர்களே கலந்து கொண்டனர்.

அச்சந்திப்புகளில் கலந்து கொண்ட இடதுசாரி கட்சிகள் பற்றியும் அவை பிரதமரிடமும் அமைச்சர்களிடமும் கதைத்த விடயங்கள் பற்றியும் ஏற்கனவே ஊடகங்களில் வெளியாகி யிருந்தன. புதிய – ஜனநாயக கட்சியின் தலைவர்கள் எடுத்துக் கூறிய விடயங்கள் பற்றி தேசிய ஊடகங்களிலும்,

புதிய பூமி, New - Democracy



ஆகியவற்றிலும் வெளியாகியிருந்தன.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி பெரிதாக பேசித்திரியும் விக்கிரமபாகு மேல் மாகாணசபையின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட பிறகு அவரின் வெற்றிக்கு காரணமான புதிய இடதுசாரி முன்னணியின் ஏனைய கட்சிகளை ஒதுக்கி விட்டு புதிய இடதுசாரி முன்னணியை அவரது உடமையாக்கிக் கொண்டார். பெயரைத் திருடியும் கொண்டார்.

தற்போது ஜே.வி.பியை கடுமையாக சாடும், ஜே.வி.பி – சுதந்திரக்கட்சி பற்றி விமர்சிக்கும் விக்கிரமபாகு ஆகக்குறைந்த அதிகாரபரலாக்கலுக்கு கூட ஆதரவில்லாத ஜே.வி.பியின் ஜனாதிபதியின் வேட்பாளரான நந்தன குணதிலக்கவை 1999 ஜனாதிபதி தேர்தலில் ஆதரித்ததுடன் ஜே.வி.பி மேடைகளில் பேசித்திரிந்தார். காரணம் ஜே.வி.பியின் தயவால் பாராளுமன்றத் திற்கு சென்று விடலாம் என்ற நப்பாசை தான்.

2000ம் ஆண்டு சந்திரிகா சமர்ப்பித்த அரைகுறை அரசியல் தீர்வை சந்திரிகா சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு விடப்போவதாக தெரிவித்ததை விக்கிரமபாகு ஆதரித்தார். அவரின் 'சுயநிர்ணய உரிமை' கோரிக்கைக்கு எதிரானது என்று தெரிந்து கொண்டும் சந்திரிகாவின் நிலைப்பாட்டை ஆதரித்ததன் காரணம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தயவில் பாராளுமன்றத்துக்கு போய்விடலாம் என்று அவர் நம்பிக் கொண்டிருந் தமையே ஆகும்.

மீண்டும் இடது சாரி கட்சிகளை ஒன்றிணைத்து அவருக்கு நன்மை அளிக்கக் கூடிய தேர்தல் கூட்டணியை அமைக்க பல முயற்சிகளை எடுத்தார். அவை கைகூடவில்லை.

சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராக பேரினவாதிகள் மேற்கொண்டு வரும் பிரசாரங்களை முறியடிக்கவும். சமாதான நடவடிக்கைகளை வலியுறுத் தியும் "இடது சாரிகளின் கூட்டமைப்பு" பிரசாரங்களை செய்தது அந்நடவடிக் கைகளில் விக்கிரமபாகு சிரத்தை காட்டவில்லை.

போரா சமாதானமா என்ற தலைப்பில் "இடது சாரி கூட்டமைப்பு" தெஹி வளையில் கடந்த ஒக்டோபர் 18ம் திகதி நடத்திய கருத்தரங்கில் அவர் உரையாற்றுவதற்கு ஒத்துக் கொண்டிருந்த போதும் அங்கு சமூகம் தந்திருக்கவில்லை. ஏனெனில் அக்கருத்தரங்கு அவரது தேர்தல் வித்தைகளுக்கு கைகொடுக்காது என்று நினைத்துவிட்டார்.

விக்கிரமபாகு உண்மையான இடதுசாரி கூட்டிற்கு மட்டுமன்றி அவரது கட்சியான நவசமசமாஜக் கட்சியின் வளர்ச்சிக்கும் தடையாகவே இருந் திருக்கிறார். என்ற விமர்சனம் அவரது கட்சியின் அங்கத்தவர்களாலேயே முன்வைக்கப்படுகிறது. அவரின் தன்முனைப்பு குழப்பம், சரணாகதி வாதம் எல்லாம் அவர் பின்பற்றும் ரொஸ்கி வாதத்தின் குறைபாடாகும். அதனால் அவர் நாட்டின் நிலைமையை பற்றி சீரியாக சிந்தித்து செயற்படுபவராக இல்லை.

சிங்கள பேரினவாதத்துக்கு எதிராகவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய

தொடர்ச்சி 11ம் பக்கம்.

# செப்டம்பர் 11ம் திகதிய தாக்குதலுக்கு முன்பே சதாம் ஹுசைனை அப்புறப்படுத்த திட்டமிருந்தார் முன்னாள் அமெரிக்கதிறைசேரி செயலாளர் ஓ நீல்

கொலம்பியா ஒளிபரப்புச் சேவையில் 60நிமிடங்கள் என்ற நிகழ்ச்சியில் தோன்றிப் பேட்டியளித்த அமெரிக்க முன்னாள் திறை சேரிச் செயலாளர் ஓ நீல் ஆரம்பத்திலிருந்தே ஜனாதிபதி புஷ் சதாம் குசேன் ஒரு கெட்ட மனிதர் எனவும் அவரை அகற்றியாக வேண்டும் எனவும் அசைக்கமுடியாத நம்பிக்கை யுடன் இருந்தார் எனத் தெரிவித் துள்ளார்.

டிசம்பர் 2002ல் வெளிப்படையாகவே ஜனாதிபதியின் வரிக்குறைப்பை எதிர்த்தமைக்காக ஓ நீல் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார். புஷ் நிர்வாகத்தின் உள்வீட்டு இரகசியங்களை அம்பலப் படுத்தும் "விசுவாசத்தின் விலை" என்ற நூலுக்கு முக்கியு பங்களிப்பாளராக விளங்கும் ஓ நீல் இந்தப்பேட்டியைக் கொடுத்தது இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. ரைம் சஞ்சிகைக்கு ஓ நீல் பேட்டி கொடுத்தசமயம் 23 மாதங்கள் நான் அங்கு இருந்த போது அழிவுதரும் ஆயுதங்கள் இருப்பதற்கான சாட்சியங் களைக் காணவில்லை என்றும் கூறியுள்ளார்.

2001 ஜனவரியில் புஷ் ஆட்சிபிட மேறினார். அவர் பதவியேற்றது முதல் மூன்று மாதங்களிலேயே சதாமை அப்புறப்படுத்து வதற்கான ஏற்பாடு களைச் செய்யும் படி அதிகாரிகள் பணிக்கப்பட்டனர் என்பதற்கான ஆவனங்களை ஓ நீலும் ஏனைய வெள்ளைமாளிகை பிரமுகர்களும் நூலின் ஆசிரியரான றொன் சுஸ்கின்ட்டிடம் கொடுத்துள்ளனர்.

ஈராக்கினுள் புகுந்து சதாமை வீழ்த்தியது உலக சமாதானத்திற்கோ அன்றி ஒரு சர்வாதிகாரியை அகற்றுவதற்கோ அல்ல. அமெரிக்கப் பெரும் முதலாளிகளின் பொருளாதார சுரண்டல் உறுஞ்சல்களுக்கு பாதுகாப்பு வழங்கி அவற்றின் இருப்பை உறுதி செய்வதற்கேயாகும். ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஷ்டபிள்யூ புஷ் அதையே செய்தார் அவரது தகப்பன் புஷ்ஷசும் அதையே செய்து கொண்டார். அடிப்படையில் இவர்கள் அனைவரும் அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் பிரதி நிதிகளேயாவர்.

# வீழ்க அமெரிக்கா! வாழ்க கியூபா!

உலகதனை
உனது குப்பைகளின்
சந்தையாக்கி
உலகமக்களின் வளங்களை
வாரிச் சுருட்டிக் கொள்ள
ஆயுத பலத்தை காட்டி
இவ்வுலகையே அதிரவைக்க.
ஆப்கானையும் ஈராக்கையும்
அடிபணிய வைத்துவிட்டதாய்
ஆணவத்துடன் ஆடித்திரியும்
இரத்தக் காட்டேரியே!
புஷ்ஷே! அமெரிக்க
ஏகாதிபத்தியமே!
சதாமை பிடித்த நீ
ஓஸாமாவையும் பிடித்து விடலாம்
ஓ................. அமெரிக்க
ஏகாதிபத்தியமே!
ஏ................. புஷ்ஷே!
எத்தனை நாள் இப்படியே
ஆடித்திரிவாய்?
நீயா? நாங்களா?
உன்பலமா? எம்பலமா?

எம்மோடு கியூபாவும்
கியூபாவோடு நாமும்
இருப்பதை அறிவதற்கு
உனக்கேது நேரம்?
சின்னஞ் சிறியதென்றாலும்
உனது கோடியில்
ஒரு சோஷலிச கியூபா!
அறிவு முதிர்ந்த வராய்
வழிகாட்டியாய்
ஒரு கஸ்ட்ரோ
உன்னால் கொல்லப்பட்ட
உன்னத மானுடன்
சே குவேராவின் நினைவுகள்
எம்மனங்களில்
மங்காதிருக்கும் வரை
மானுட எதிரி நீ !
பிரபஞ்சத்தின் எதிரி நீ !
ஜெயிப்பாயோ இப்புவியில்?
வீரமிக்க கியூப மக்களை
வீழ்த்தவா நினைக்கிறாய் ?

இன்னும் நூறு முறை
கொலை செய்ய
கொலை செய்ய முயற்சி செய்
முடிந்தால் ஒரு முறை
எங்கள் தோழர் காஸ்ட்ரோவை
கொன்றுபார்!
விளைவுகளுக்காப் காத்திரு
ஓ................. அமெரிக்காவே !
ஏ................. புஷ்ஷே!
நீ வீழும் நேரத்தை
குறித்துக் கொள்
வீணான கனவுகளுக்கு
முடிவு கட்டு.
வீரமிக்க கியூப மக்களை
வீழ்த்தவா நினைக்கிறாய்
விடுதலை ஒன்றுக்காயே
வீரமுடன் வாழும்
கியூப மக்களுடன்
கைகோர்ப்போம்
எம்முடன் அவர்களும்
அவர்களுடன் நாமும்
கைகோர்க்க
கஸ்ட்ரோ, சே, நடைமுறைகள்
ஒளியூட்ட
ஒன்றினைவோம் இப்பாரினிலே
ஓ................. அமெரிக்க
ஏகாதிபத்தியமே!
உனை ஒழிக்க
நித்தம் போராடுவோம்.

நீடுழி வாழ்க கஸ்ட்ரோ!
வெல்க கியூப மக்கள்!
வாழ்க சர்வதேச ஒத்துழைப்பு!

**த. மிருதுளா**
ஆண்டு 10

இக்கவிதை 01.1.2004 அன்று கொழும்பில் இடம் பெற்ற கியூபா தேசிய தின ஒன்று கூடலில் செல்வி த.மிருதுளாவினால் படிக்கப்பட்டதாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மும்பாய்ப் பிரகடனம்

ஜனவரி 17.10.2004ல் இந்தியாவின் மும்பாய் மாநகரில் நடைபெற்ற ஒரு முக்கிய சர்வதேச நிகழ்வில் 300க்கும் மேற்பட்ட அமைப்புக்களும் பல்லாயிரக் கணக்கான தனிப்பட்டோரும் பங்கு பற்றினார்கள் 'மும்பாய் எதிர்ப்பு 2004' மிகப்பரவலான அளவில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் குழுக்கள் பங்குபற்றிய ஒரு நிகழ்வாகும். இதில் ஏற்றுக் கொள்ளப் பட்ட தீர்மானங்கள் முக்கியமானவை. அவற்றின் சாராம்சம் கீழுள்ளது.

- ❖ ஏகாதிபத்திய உலகமயமாக் கலையும் போரையும் எதிர்த்துப் போரிடுவதாக உறுதியளிக்கிறோம்.
- ❖ ஏகாதிபத்திய உலகமயமாக்கலால் மோசமாகப் பாதிப்புற்ற வறுமைப் பட்ட மக்களின் சார்பாகத் தளராது நிற்பதாக உறுதியளிக்கிறோம்.
- ❖ மக்களுடைய மனிதப்பண்பைச் சீரழிக்கும் வறுமை, சீவனோபாயத் தின்தும் சுற்றுச்சூழலும் சிதைவு, மூர்க்கத்தனமான நுகர்வுப் பெருக்கம், அந்நியமாதல், மக்களின் பண்பாட்டுச் சீரழிவு ஆகியனவற்றை வன்மையாக எதிர்ப்பதாக உறுதியளிக்கிறோம்.
- ❖ பன்நாட்டுக் கம்பனிகள், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக நிறுவனம் போன்ற வற்றின் பெருந் தாக்குதலுக் குள்ளாகியிருக்கும் சகல ஒடுக்கப் பட்ட நாடுகளதும் சுயாதிபத்தி யத்தின் மீதான தாக்குதல்களை எதிர்த்துப் போராடுவதாக உறுதியளிக் கிறோம்.
- ❖ உலகின் பல்வேறு பகுதிகளில் ஃபாஸிஸ் சித்தாந்தத்தின் வெளிப் பாடாக அமைந்துள்ள இனவாதம், ஸியோனிசம் என்பன போன்று சமுதாயங்கள் சமுதாயங்களைப் பகைத்துப்போரிடச் செய்யும் அதிகார வர்க்க ஃபாஸிஸத் தாக்கு தல்கட்கு எதிரடி கொடுத்துப் போராடுவதாக உறுதியளிக் கிறோம்.
- ❖ ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பினதும் முக்கியமாக அமெரிக்க ஏகாதிபத் தியத்தினதும் கனத்த காலணி களின் கீழ் வந்துள்ள பல்வேறு நாடுகளின் மக்களுடன் தோளோடு தோள்நின்று போராடுவதாக உறுதியளிக்கிறோம்.
- ❖ சர்வதேச நாணயநிதி, உலக வங்கி போன்ற ஏகாதிபத்திய முகவர்களும் ஏகாதிபத்திய வாதிகளும் மூன்றா முலக நாடுகட்கு வழங்கிய கடன் களை இரத்துச் செய்யுமாறு போரா டுவதாக உறுதியளிக் கிறோம்.
- ❖ அமெரிக்கப்படைகள் ஈராக்கி லிருந்து வெளியேறும் வரை ஈராக்கிய மக்களுடன் அருகருகாகப் போராடுவதாகத் தீர்மானிக்கின்றோம்.
- ❖ யூதர்களும் பலஸ்தீனியரும் சம உரிமையுடன் அருகருகாக வாழுமாறு பலஸ்தீன மக்கள் தமது மண்ணையும் சுயாதிபந்தியத்தையும் மீள வென்றெடுக்க அவர்களோடும் பிற அரபு மக்களோடும் தோள் சேர்ந்து போராடுவதாகத் தீர்மானிக்கிறோம்.
- ❖ ஆஃப்கானிஸ்தானிலிருந்தும் பிற உலக நாடுகளிலிருந்தும் சகல அயற்படைகளும் வெளியேறவும் உலகெங்குமுள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் அகற்றப்படவும் போராடத் தீர்மானிக்கிறோம்.
- ❖ பிற்போக்கு ஆட்சியாளர்களால் சிறைவைக்கப்பட்டுள்ள சகல அரசியற் கைதிகளையும், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் எடுபிடிகட்கும் எதிராகப் போராடினோரை, நிபந்தனையின்றி விடுவிக்குமாறு போராடுவதாகத் தீர்மானிக்கிறோம்.
- ❖ சர்வதேச நாணய நிதி, உலக வங்கி, உலக வர்த்தக நிறுவனம் போன்ற பன்முக நிறுவனங்களைக் கலைக்குமாறும் மூன்றாமுலகில் பன்நாட்டுக் கம்பனிகளின் செயற்பாட்டை நீக்குமாறும் போரிடத் தீர்மானிக்கிறோம்.
- ❖ ஏகாதிபத்தியவாதிகட்கும் உலகின் ஒடுக்கப்பட்ட நாடுகட்கும் இடை யிலான சமனற்ற ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் உடனடியாக இரத்துச் செய்யுமாறு போராடத் தீர்மானிக்கிறோம்.
- ❖ உலகின் பல்வேறு தேச அரசு களதும் முழுமையான பொருளா தார, அரசியல், இராணுவச் சுயாதிபத்தியத்தையும் வென்றெடுக் கவும் தேசிய இனங்களது அடிப்படை உரிமைகளை தேசிய சுயநிர்ணய உரிமை எவ்வகையிலும் மீறப்பட்ட இடத்து அதை வென்றெடுக்கவும் நாம் உறுதி பூண்டுள்ளோம்.



மேலும் இந்தியா தொடர்பாகவும் பல குறிப்பான தீர்மானங்கள் முன்மொழியப் பட்டு ஏற்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஏகாதிபத்திலக் சார்பான பொருளா தாரக் கொள்கை, புதிய அபிவிருத்திக் கொள்கை, அரச பயங்கரவாதம், பொடா உட்பட்ட அடக்குமுறைச் சட்டங்கள், அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளும், சட்டவிரோதமான கொலைகள், வதைகள், ஆட்கடத்தல் போன்ற செயல்களும், அரச உதவி யுடனான இந்துத்துவ ஃபாஸிஸத்தின் வன்செயல்கள் பாபர் மசூதி, குஜராத் வன்முறைகட்குப் பொறுப்பானோரைத் தண்டிப்பது போன்ற பல்வேறு விடயங்களும் கவனிப்பிற்குள்ளாகி யுள்ளன. பார்ப்பனியமும் தலித்துக்கள் மீதும் ஆதிவாசிகள் மீதும் நடத்தப்படும் அத்துமீறல்களும் கிராமியச் சமூகத்தின் மீது உலக மயமாக்கலின் பாதிப்பும் கவனிப்புக்குள்ளாகின்றன.

இவை தொடர்பாகவும் பொதுப்படவும் உலக மக்களைப் பல்வேறு வகைகளிலும் போராடுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும் சில முக்கிய குறைபாடுகள் அல்லது தவறுதல்கள் கவனிப்புக்குரியன.

காஷ்மீர்பற்றி எதுவுமே சொல்லப்பட வில்லை. பூட்டான் மீதான இந்திய அழுத்தமும் இந்தியப்படைகள் அங்கு சென்றுள்ளமை கண்டிக்கப்பட்ட போதும் பிற அயல்நாடுகளில் இந்தியாவின் குறுக்கீடு பற்றி எதுவுமே பேசப்படவில்லை. நேபாளமும் இலங்கையும் இந்திய மேலாதிக்க பாதிப்பிற்குள்ளாவது பற்றிய மௌனம் தவறுதலான விடுபாடா அல்லது தர்ம சங்கடத்தாலான விடுபாடா என்பது நிச்சயமில்லை.

இவ்வாறான நிகழ்ச்சிகளில் தேசிய முதலாளியத்துடன் சமரசம் செய்கிற தன்மை கொண்ட முன்னாள் மாக்ஸிய வாதிகளும் போலி மாக்ஸியவாதிகளும் பங்குபற்றுவது காரணமாகச் சில சில விட்டுக்கொடுப்புக்கள் நிகழுகின்றன. இவ்வாறான விட்டுக்கொடுப்புக்கள் ஒரு புறம் இத்தகைய பரவலான போராட்ட அமைப்புகட்கு வலுச் சேர்க்க உதவு கின்றன. அதேவேளை, கொள்கை அடிப்படையிலான ஒரு விட்டுக் கொடுப்பு இன்னொன்றிலிருந்து இன்னொன்றுக்காக மாறிமாறிச் சென்று முடிவில் தேசியவாத, மேலாதிக்க சக்திகளுடன் சமரசத் துக்கே வழிவகுக்கவும் இடமுண்டு. இது பற்றிய எச்சரிக்கை உணர்வு அவசியமானது. அது மட்டுமில்லாமல் இவ்வாறான இடங்களிற் தவறுகள் உடனுக்குடன் சுட்டிக்காட்டப்படுவதும் திருத்தப்படுவதும் அவசியமானது. இந்த அறிக்கையில் என்.ஜி.ஓக்கள் பற்றியும் சமூக ஜனநாயகவாதிகள் பற்றியும் சில எச்சரிக்கை வார்த்தைகள் இருந்த போதும் பம்பாய்ச் சந்திப்பிற்கான நிதி றொக்கஃபெல்லர் நிறுவனம் போன்ற அமைப்புக்கள் மூலமும் பெறப்பட்டுள்ள தாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டுள்ளது. இது பாரதூரமான ஒரு விடயமாகும்..

எப்போது வெகுசன இயக்கங்கள் முதலாளியத்தின் முகவர்களது தயவை நாடுகின்றனவோ அப்போதே வர்க்க சமரசத்துக்கான விதைகள் முளைவிடுகின்றன.

இம் மாநாடும் அதன் தீர்மானங்களும் வரவேற்கத் தக்கன. ஆனால் அவை செயலாவதற்கு வழி என்ன என்பதும் முக்கியமானது. இது போன்ற ஒன்றுகூடல்கள் மூலம் உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கட்குள் தொடர்புகள் ஏற்படுவதும் ஒரு பயனுள்ள அம்சம். அதே வேளை குழிபறிப்புக்கும் ஊடுருவலுக்குமான சக்திகளும் இவற்றைப் பயன்படுத்து வதைப் பற்றி விழிப்புடன் இருப்பது அவசியம்.

இறுதியில் விடுதலைப் போராட்டம் எதுவும் மக்கள் தத்தமது சொந்த மண்ணில் நடத்துகிற ஒன்றாகவே அமையும். அயல் உறவுகளும் ஆதரவும் மிகவும் பயனுள்ளவை ஆனால் நாட்டு மண்ணில் வாழும் மக்களது போராட்டமே அடிப்படையானது.

## ஏகாதிபத்தியமும் என்.ஜீ.ஓக்களும்

இந்தியாவில் ஏறத்தாழ 20,000 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் 1998-99 ஆம் ஆண்டில் 3,403 கோடி ரூபாயும், அதற்கு அடுத்த ஆண்டில் 3,925 கோடி ரூபாயும், 2000- 01 ஆம் ஆண்டில் 4,535 கோடி ரூபாயும் ஏகாதிபத்திய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுள்ளன. ஃபோர்டு பவுண்டேஷன் இந்தியாவிலுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வருடாவருடம் தரும் நன்கொடையை 110 கோடி ரூபாயில் இருந்து 220 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. ஏகாதிபத்திய நிறுவனங்கள் பிரதிபலனை எதிர்பாராமல் தர்மத்துக்காகவா இத்தனை ஆயிரம் கோடி ரூபாய்களை இந்தியாவில் கொட்டும்?

சனவரி மாதம் மும்பயில் நடைபெற்ற உலக சமூகக் கலந்தாய்வுக் கூடத்தின் நான்காவது மாநாடு 135 கோடி ரூபாய் செலவில் நடைபெற்றுள்ளது. நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஐ.சி.சி.ஓ, பிரெடரிக் எபெர்ட் பவுண்டேஷன், நோவிப், ஃபோர்டு பவுண்டேஷன், ஆக்ஸ்ஃபோம் ஆகிய ஏகாதிபத்திய நிறுவனங்கள்தான் இந்த நிகழ்ச்சியைத் தயாரித்து உள்ளூர் தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் மூலமாக வழங்கியுள்ளன.




## மரபையும் மதச் சடங்குகளையும் எதிர் கொள்வது எப்படி?

மாக்ஸியம் பொருள் முதல்வாத அடிப்படையிலானது. பௌதிக உலகை விளக்க அதற்கும் அப்பாலான ஒரு படைப்புச் சக்தியை அது ஏற்கவில்லை. அதைவிடவும், ஆன்மா,கர்மவினை போன்ற கருத்துக்களையும் அது மறுக்கிறது. மனிதரது இருப்புச் சார்ந்த பிரச்சனைகளின் பிறப்பிடம் பொருள் முதல் அடிப்படையானது. தீர்வுகளும் பொருள்முதல் அடிப்படையிலேயே இயலுமானவை. எனவே , மாக்ஸியத்தில் மூடநம்பிக்கைகட்கோ அற்புதங்கட்கோ மாய மந்திரங்கட்கோ இடம் இல்லை. மதங்கள் சார்ந்த சிந்தனைகளினின்று மிகவும் வேறுபட்டு நிற்கும் மாக்ஸியம் மதச் சார்பான சடங்குசம்பிரதாயங்களையும் ஏற்பதில்லை.

மேற் கூறிய வகையில் பகுத்தறிவு வாதிகளும் வரட்டு நாத்திகர்களும் மாக்ஸியவாதிகளுடன் உடன்பட இடமுண்டு. ஆயினும் அவர்களது சிந்தனையும் அணுகுமுறையும் வரலாற்றுப்பார்வையும் இயங்கியல் அணுகுமுறையுமில்லாததால் மிகவுங் குறுகலாக அமைகின்றன. மாக்ஸியம் மதங்களது தோற்றத்தை வரலாற்றில் வைத்து நோக்குகிறது. மதங்கள் மட்டுமன்றிச் சமுதாய மரபுகள் எனப்படுவனவும் காலத்துடன் மாறி வந்துள்ளன என்பதை மாக்ஸியம் விளக்கியுள்ளது. அம் மாற்றங்கட்கான காரணங்களை அது சமுதாயத்தின் வர்க்க அடிப்படையுடனும் சமுதாய மாற்றத்துடனும் தொடர்புபடுத்தி விளக்கியுள்ளது. எனவே ஒரு மாக்ஸியவாதியால் மதத்தையும் அதன் சமூகப்பங்கையும் கால இடச் சூழல்களின் அடிப்படையில் வைத்து அனுதாபத்துடன் நோக்க முடிகிறது. இன்று மதங்களின் பேராலும் மரபின் பேராலும் சமுதாயத்தைப் பழமையைநோக்கி நகர்த்துகிற ஒரு போக்கை நாம் காணலாம். இங்கே, சிந்தனையிற் பழமைவாதம் வற்புறுத்தப்பட்டுச், சடங்கு சம்பிரதாயங்கள் என்ற பேரிற் சமூகத்துக்குப் பயனற்ற விடயங்களும் தீங்கான விடயங்களுங் கூடமுன்னெடுக்கப்படுகின்றன. இதே பழமைவாதிகள் சமூதாயத்தின் இருப்பைப் பொருளாதாரப், பண்பாட்டு அடிப்படைகளில் மிரட்டலுக்கு உட்படுத்துகிற அயல் ஆதிக்கத் தாக்கங்களை அதிகம் பொருட்படுத்துவதில்லை. தமது பண்பாடும் மதமும் மொழியும் சீரழிவது பற்றி அவர்கள் பேசினாலும், அவர்களது அக்கறைகள் தங்களது நிலவுடைமைச் சமுதாய ஆதிக்கத்தின் சின்னங்களின் சிதைவு பற்றியதே ஒழியச் சமூகநலன் சார்ந்தல்ல.

எனவே, மாக்ஸியவாதிகளை எதிர்கொள்ளும் பிரச்சனைகள் இரு வகைப்பட்டன. ஒன்று மக்களின் சிந்தனையில் மதத்துக்கு உள்ள இடம் பற்றிய யதார்த்தமான கணிப்பும் மக்களுக்கு ஒரு மதத்தை ஏற்கவோ ஏற்காமல் விடவோ உள்ள உரிமையின் ஏற்புடைமையும் பற்றியது. மற்றது மரபினதும் மதத்தினதும் பேரால் திட்டமிட்டே மக்களுடைய சிந்தனையை மழுங்கடிக்கிற காரியங்களும் மக்களிடையே பகையை மூட்டுகிற காரியங்களும் அதிகார வர்க்கநலன் பேணுகிற காரியங்களும் பற்றியது.

ஒருவரது மத நம்பிக்கை தனிப்பட்ட நம்பிக்கையாகவும் மற்றவர்களுடைய சமூக உரிமைகளையும் நலன்களையும் மத வேறுபாடின்றி ஏற்பதுமாக உள்ள வரையில் அது சமூகக் கேடற்றதாகும். உண்மையில் இப்படிப்பட்ட மதநம்பிக்கையுடையவர்களிற் சிலர் மாக்ஸியத்துடன் பல விடயங்களில் உடன்பாடானவர்களாகவும் இருந்துள்ளார்கள். அப்படியான உடன்பாடு இல்லாத பலர் தமது மதநம்பிக்கைகளதும் சடங்கு சம்பிரதாயங்களதும் வரையகளை மீறிக் சமூகக் கொடுமைகட்கு எதிராகக் குரல் கொடுத்தவர்களாக இருந்துள்ளார்கள். எனவே மதநம்பிக்கை என்பது முற்போக்கான சமூகச் செயற்பாட்டுக்கு ஒரு தடையல்ல. அந்த வகையில் மக்களின் மதநம்பிக்கைக்கான உரிமையை ஏற்பதன் மூலம் முற்போக்கான சமூகச் செயற்பாடுகட்கு நாம் உதவுகிறோம்.

மறுபுறம் தனிப்பட்ட முறையிலும் சமூகமட்டத்திலும் மதத்தைப் பிற்போக்கின் கருவியாகப் பயன்படுத்துவோருடன் எவ்விடத்தும் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை. இப்படிப்பட்டவர்களுடனான சமரசம் பெருமளவும் சந்தர்ப்பவாதப் பண்புடையதாகவே அமையும். அதன்மூலம், ஒரு மாக்ஸியவாதி தன் கொள்கை உறுதியை இழந்தவராகிறார். இதற்கான பல உதாரணங்களை இலங்கையின் இடதுசாரி அரசியலிலும் நாம் காணலாம்.

மரபும் மதம் சடங்கு சம்பிரதாயங்களும் ஒரு குறிப்பிட்ட வரலாற்று காலத்தில் இறுகிப்போனசில நடைமுறைகளை அல்லது அவற்றின் அடிப்படையிலான நடைமுறைகளைக் கொண்டவை என்பதால் அவற்றோடு இணைந்து நிலவுடைமைச் சிந்தனையும் வற்புறுத்தப்படுகிறது. மறுபுறம், முதலாளியவர்க்கமும் நிலவுடைமையுடனும் பழமைவாதத்துடனும் சில சமரசங்களைச் செய்து கொள்கிறது. மத பீடங்களும் பிற்போக்குச் சக்திகளும் சமூக மாற்றத்துக்கு எதிராகக் கூட்டுச் சேருவது வழமையாகிவிட்டது. இன்றைய உலகமயமாக்கற் பின்னணியில் மதங்களின் வணிகமாதலும் மரபு வழிவந்த கலைகள் முதல் மதச்சடங்குகளின் வணிகமாதலும் பெருகி வருகின்றன. மரபு என்பது சமூக நடைமுறை சார்ந்த ஒன்றாக அல்லாமல் காட்சிப் பொருளாகவும் நுகர்வுப் பொருளாகவும் முன்வைக்கப்படும் போது அது சமூகத்துடனான தனது உறவை இழந்த முறையில் இடமாற்றத்துக்குள்ளாகிறது.

இன்று மூன்றாமுலகச் சூழலில், மதமும் மதச்சடங்குகளும் மரபு சார்ந்த பலவேறு செயற்பாடுகளும், ஒருபுறம் வணிக நோக்கிலும் மதவாத இனவாத நோக்கங்கள் சார்ந்தும் மூடநம்பிக்கைகளையும் நிலவுடைமைச் சிந்தனையையும் முன்னிறுத்துகின்றன. இது பற்றி ஒரு மாக்சியவாதி மிகவும் விழிப்புடனும் சமரசத்துக்கு இடமின்றியும் நடந்து கொள்ளவேண்டும்.

இன்னொரு புறம் அவை மனிதரது அகத் தேவைகள் சார்ந்தும் சமூக அடையாளத் தையும் சமூக ஒருங்கிணைவையும் சார்ந்து செயற்படுகின்றன. அறஞ்சார்ந்த சமூகப்பார்வையையும் சமூகப்பாங்கான நன்நடத்தையும் மனித மேம்பாட்டு விழுமியங்களையும் வலியுறுத்துமளவுக்கு அவை நன்மையும் செய்கின்றன. அறஞ்சார்ந்த சமூகப்பார்வையும் சமூகப்பாங்கான நன்நடத்தையும் மனித மேம்பாட்டு விழுமியங்களையும் வலியுறுத்துமளவுக்கு அவை நன்மையும் செய்கின்றன. இவ்வாறான செயற்பாடுகளை நட்புணர்வுடன் நோக்க வேண்டியுள்ளது.

அதே வேளை ஒரு மாக்சியவாதி மதமும் மரபும் தொடர்பான விடயங்களில் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். சமூகம் பல வேறு நெருக்கடிகட்கு உட்பட்டும் மனிதரது அன்றாட வாழ்வும் மனித இருப்பும் நிச்சயமற்றும் உள்ள போது மனிதர் மதங்கள் கூறும் விளக்கங்களையும் ஆறுதல் மொழிகளையும் நாடுகின்றனர். இந்தப் பலவீனங்களைப் பயன்படுத்திச் சோதிடம் மாந்திரிகம் பல வாறான நேர்த்திக் கடன்கள், வேண்டுதற் பூசைகள் என்பன மூலம் மக்களுக்குப் போலியான நம்பிக்கை ஊட்டப்படுகிறது. இவற்றில் உள்ள வணிக நோக்கம் முக்கியமானது. அதே வேளை மக்களை மேலும் மேலும் மூடநம்பிக்கைகளுள் ஆழ்த்துகிற நோக்கமும் உள்ளடங்கி யிருக்கிறது.

இன்று ஒரு புறம் நவீன விஞ்ஞான தொழில் நுட்ப அறிவின் தேவையையும் புதிய நவ நாகரிக நடத்தையையும் ஊக்குவித்தும் வரும் அதே முதலாளிய ஊடகங்கள் மூடநம்பிக்கைகளை ஊக்குவிக்கும் முறையிலும் செயற்படுகின்றன. அரசியற் தலைவர்கள் மதபீடங்களினதும் கோவிற் பூசகர்களதும்

தொடர்ச்சி 11ம் பக்கம்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு மதஅடிப்படைவாதியின் மறைவு!

## பௌத்த மதமேலாண்மையிலிருந்து பௌத்த மத அடிப்படை வாதத்திற்கு

அண்மையில் ஹோமகம கிறிஸ்தவ நிலைய மொன்றை தாக்கியதுடன் அங்கிருந்த இரண்டு கையடக்க தொலை பேசிகளையும், பணத்தையும் எடுத்துக் சென்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஹோமகமை பௌத்த விகாரதிபதிக்கும் வேறு சிலருக்கும் எதிராக ஹோமகம நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அவ்வழக்கை வாபஸ்பெற வேண்டும் என்று விகாராதிபதி தலைமையில் நூற்றுக் கணக்கானோர் ஊர்வலமாக சென்று ஹோமகம பொலிஸ் நிலையத்திற்கும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கும் அழுத்தம் கொடுத்துள்ளனர். அப்பொறுப்பதிகாரி கிறிஸ்தவர் என்றதால் அவருக்கு எதிராக மக்களை தூண்டியே ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

மறுநாள் நீதிமன்றத்தில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்கை வாபஸ் பெறப்போவதாக பொலிஸ் பொறுப்பதிகாரி கூறியபோதும் சட்டப்படி வாபஸ் பெற முடியாது என்று நீதவான் மறுத்துவிட்டார். அதனால் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அன்று மாலையும் விகாராதிபதியும் வேறு சிலரும் பொலிஸ் நிலையத்திற்கு சென்று பொறுப்பதிகாரிக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

இவ்வாறு கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களுக்கு எதிரான சம்பவங்களில் ஆங்காங்கு சிங்கள பௌத்தர்கள் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதெல்லாம் கங்கொடவில சோம தேரோவின் இறப்பிற்கு பிறகு மிகவும் வெளிப்படையாகவும் பரவலாகவும் நடைபெற்று வருகின்றன. சோமதேரோ பௌத்தமதப் பிரசாரம் என்ற பேரில் ஏனைய மதங்களுக்கு எதிரான மிகவும் அநாகரிகமான பிரசாரங்களையே மேற்கொண்டு வந்தார். அவர் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் போராட்டத்தினால் இலங்கையில் பௌத்த மதமில்லாமல் போகும் என்று பிரசாரம் செய்தும் வந்துள்ளார். அப்போராட்டத்தை பயங்கரவாதமென்றும் அதனை ஒழிக்க யுத்தமே செய்ய வேண்டும் என்றும் அழுத்திக் கூறிவந்தார்.

அவர் நாட்டின் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள விகாரைகளுடனும் மக்களுடனும் நெருக்கமான தொடர்பை வைத்திருந்தார். குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிங்கள குடும்பங்களுடன் தொடர்பை வைத்திருந்தார். அவர் வெளிநாடுகளிலிருந்து நிதியுதவியைப் பெற்று இங்கு அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக 'சமூக சேவை' என்ற நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

கிறிஸ்தவ மத எதிர்ப்பை பிரதானப் படுத்திய அவர் அமெரிக்க, பிரிட்டிஷ், அவுஸ்ரேலிய வெள்ளை இனத்தவர்களுடன் நெருங்கிய உறவை வைத்திருந்தார். இலங்கையில் சமாதானத்துக்காகவும், மத ஒற்றுமைக்கும் இயக்கங்களை நடத்த அரசசார்பற்ற நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வெளிநாட்டு நிறுவனங்களும் தனிநபர்களும் நிதியுதவிகளை செய்து வருவது வெளிப்படையானதாகும். ஆனால் சோம தேரர் போன்ற மதவாதிகளுக்கும் பல வெளிநாட்டு நிறுவனங்களும், நபர்களும் நிதியுதவி செய்துள்ளனர் என்பது அதிகம் வெளியே தெரிந்திருக்கவில்லை.

வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கை போன்ற நாடுகளில் வறுமையை ஒழிக்கவும், சூழலை பாதுகாக்கவும், சமூக ஆய்வுகளை மேற்கொள்ளவும், சமாதானத்தை நிலைநாட்டவும், கலைகளை வளர்க்கவும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்து வந்துள்ளன. என்றே அரச சார்பற்ற நிறுவனங்களை நடத்துவோர் கூறிவந்தார்கள். ஆனால் பௌத்த கிறிஸ்தவ, இஸ்லாமிய நிறுவனங்களை நடத்தவும் வெளிநாட்டு நிறுவனங்கள் நிதியுதவி செய்து வருகின்றன. அந்த வகையான நிதியுதவிகளைப் பெற்றே சோமதேரர் அவரது மதவெறி பிரசாரங்களை செய்து வந்தார். ஏழ்மையில் வாழ்ந்த பௌத்தர்களை விகாரைகளுடன் இணைக்கும் வேலைகளைச் செய்து வந்தார்.

அத்துடன் தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்திற்கு எதிரான அவரது பிரசாரங்கள், ஏனைய மதங்களுக்கு விரோதமான பிரசாரங்கள், சிங்கள பௌத்த பேரினவாத அடிப்படைகளை கொண்ட இரண்டு பெரிய கட்சிகளின் தமிழ் மக்கள் மீதான யுத்தத்தை நியாயப்படுத்தவும் பெரிதும் உதவின.


அவரது பிரசாரங்களும் நடவடிக்கைகளும் முதலாளித்துவ அதிகாரத்தை நிலைநாட்டும் நோக்குடைய இரண்டு பெரிய கட்சிகளினதும் பௌத்த மதசார்பு, சிங்கள பேரினவாத நிலைப் பாட்டிற்கு அப்பால் சென்று பௌத்த மத அடிப்படை வாதத்திற்கான அடிப்படைகளை சிங்கள பௌத்தர்களிடம் தோற்றுவித்து வந்துள்ளதை மறந்துவிட முடியாது. அவரது பிரசாரங்களால், நன்மையடைந்த இரண்டு கட்சிகளும் அவரது மத அடிப்படை வாதத்தை நிராகரிக்க முடியாத நிலையிலேயே சாதாரண ஒரு பிக்குவாக இருந்த அவரின் இறுதி நிகழ்வுகளை அரச இறுதி நிகழ்வாக நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அவரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த ஜனாதிபதி சந்திரிகா நேரடியாகச் சென்றமையும், இறுதி நிகழ்வில் ஜனாதிபதியினதும், பிரதமரினதும் செய்திகள் வாசிக்கப்பட்டமையும் தற்செயலான நிகழ்வுகளல்ல.

இந்நாட்டை ஆட்சி செய்த இரண்டு பெரிய கட்சிகளும் நிறுவனப்படுத்தி வளர்ந்த பௌத்த சிங்கள பேரினவாதம்

**நமது அரசியல் நிருபர்**

அடிப்படை வாதமாக வளர்வதை அக்கட்சிகள் தடுக்க முடியாத நிலையிலேயே இருக்கின்றன. அவரின் இறுதி நிகழ்வுகளை எல்லாக் கட்சிகளிலும் இருக்கின்ற பேரின வாதிகள் அவர்களின் பிரசாரத்திற்காக பயன்படுத்திக் கொண்டனர். ஐக்கிய தேசியக் கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி, மக்கள் ஐக்கிய முன்னணி என்பவற்றை விட சிஹலஉறுமய தேரரின் இறுதி நிகழ்வுகளை திட்டமிட்டு நடத்தியது எனலாம். சோமதேரோவின் பௌத்த மத அடிப்படை வாதத்தை சிஹல உறுமய அதன் தத்துவமாக காட்டிக் கொண்டது. சோமதேரோவின் கருத்துக்களை அதிகமாக ஏற்கும் அரசியல் கட்சி சிஹல உறுமயவாகும்.

நாட்டின் அதியுயர் சட்டமான அரசியல் யாப்பில் பௌத்த மதத்திற்கு அதியுயர் இடம் வழங்கப்பட்டது. இது 1972, 1978 யாப்புகளில் உறுதி செய்யப்பட் டுள்ளது. ஆட்சியை கொண்டு நடத்துவதற்காக இலங்கையின் பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களை தம்வசம் வைத்திருக்கவும், ஆட்சியின் மக்கள் விரோத அல்லது மக்கள் சார்பற்ற அடிப்படையை மூடிமறைக்கவும் இந்நாட்டின் இரண்டு பெரிய அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் சிங்கள பௌத்தத்தை நிறுவனப்படுத்தின. அதற்கு பௌத்த மதம் உறுதுணையாக இருந்தது. தமிழ் மக்களுக்கு ஆகக்குறைந்த அதிகாரப்



பரவலாக்கலை கொடுக்க முற்பட்ட பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட பௌத்த பிக்குகளின் எதிர்ப்பே பிரதான காரணமாக இருந்தது.

பௌத்த மத நிறுவனமயமாக்கலின் வளர்ச்சியாக பௌத்த மத அடிப்படை வாதத்தை முன்னெடுக்க புற, அக காரணிகளால் இரண்டு பெரிய கட்சிகளாலும் முடியவில்லை. இதனால் பௌத்த மத அடிப்படைவாதிகள் இரண்டு பெரிய கட்சிகளின் தலைமைகளுடன் முரண்பட்டனர். அவ்வாறு முரண்பட்ட ஒருவர் சோம தேரோ ஆவார். அவரின் பிரசாரங்கள் இரண்டு பெரிய கட்சிகளின் இருப்பிற்கு உதவியிருந்தபோதும் மத அடிப்படை வாதத்தை ஆட்சிமுறையாக கைக் கொள்வதற்கு இரண்டு பெரிய கட்சிகளுக்கும் இயலவில்லை. அதற்கு சர்வதேச, தேசிய ரீதியான காரணங்கள் பல இருக்கின்றன.

உயிருடன் இருக்கும் போது சோமதேரோ கூறிய விடயங்களை அவரின் இறப்பிற்கு பிறகு அவரை பின்பற்றுவோராலும், சிஹல உறுமய கட்சியினாலும் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. அவர் இயற்கையாக மரணிக்கவில்லை. கொலை செய்யப்பட்டார் என்ற வதந்தி நன்கு பரப்பப்பட்டு சிங்கள பௌத்த மக்களை தூண்டி மதக்குரோதத்தை வளர்க்க பலர் திட்டமிட்டு செயற்படுகின்றனர். அவரின் இறப்பிற்கு பிறகு, பல இஸ்லாமிய வீடுகள் தாக்கப் பட்டுள்ளன. கிறிஸ்தவ வழிபாட்டிடங்கள் தாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அடிப்படை வாதத்தின் அடிப்படையான ஃபாசிஸ தாக்குதல் முறைகள் தலைதூக்கியுள்ளன.

இனமுரண்பாட்டினால் ஏற்கனவே பெரும் அழிவை கண்டிருக்கும் இலங்கை மக்களும் நாடும் மத அடிப்படை வாதத்தில் மேலும் அழிவை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

மத வாதத்தை பயன்படுத்திய இலங்கையின் ஆளும் வர்க்கம் அதன் தற்போதைய சிங்கள பேரினவாத, பௌத்த மதசார்பு நிலையை மேலும் வளர்த்து பௌத்த மத அடிப்படை வாதத்தை கையேற்க மாட்டாது என்று நம்பத்தேவை இல்லை. ஆனால் அடிப்படை வாதம் மக்களில் ஒரு பகுதியையும் அரவணைத்துக் கொண்டு அதன் பசிஸ்ட் ஆளுகையை நிலை நிறுத்தும் போது ஏனைய மதமக்களும் எல்லா மதங்களையும் சார்ந்த சாதாரண உழைக்கும் தொழிலாளர் விவசாய அடக்கப்பட்ட மக்களும் மேலும் பாரதூரமாக அடக்கப்படுவர்..

சோம தேரோவின் வெளிநாட்டு தொடர்புகளை பார்க்கின்ற போது பௌத்த மத அடிப்படை வாதத்திற்கு பின்னால் வெளிநாட்டு சக்திகள் இருக்கின்றன என்பது தெளிவாகிறது. அவர் வெளிநாடுகளில் வாழும் சிங்களவர்களை இணைத்து செயற்பட்டுள்ளார். அவர் அவுஸ்ரேலியாவை மையமாகக் கொண்டு இயங்கியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை கூர்மையடைந்து யுத்தமாக மாற எவ்வாறு வெளிநாட்டு சக்திகளும் தென்னாசிய பிராந்திய மேலாதிக்க சக்திகளும் துணை புரிந்தனவோ அதேபோன்று பௌத்த அடிப்படை வாதத்திற்கும் துணை புரிகின்றன.

தேசிய இனங்களின் உரிமைகள் சமாதானம் என்பன பற்றியெல்லாம் பேசப்படுகின்ற வேளையில் அவற்றுக்கு எதிரான பௌத்த மத அடிப்படை வாதம் வேரூன்றியுள்ளதை கவனத்தில் எடுக்க தவறக்கூடாது. அது சோம தேரோவின் இறப்பை அடுத்து மிகவும் வெளிப்படையாகியுள்ளது. மதங்களின் மதமாற்ற நடவடிக்கைகளை ஏற்க முடியாவிட்டாலும் மதமாற்ற தடைச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்பது பௌத்த மதஅடிப்படை வாதத்தின் தேவையே ஆகும். பௌத்த மதத்தின் மேலாண்மையின் வளர்ச்சி இன்று மத அடிப்படைவாதமாக எழுந்துள்ளது. பௌத்த மத மேலாண்மை பௌத்தமத அடிப்படை வாதத்துடன் சமரசம் செய்து கொள்ளும் இலங்கையின் ஆட்சிமுறை பல்லின மக்கள், பலமொழிபேசும் மக்கள், பலமத மக்கள் வாழும் நாடு என்பதை நிராகரிப்பதாகவே மாற்றமடையும்.

எனவே பௌத்த மத அடிப்படை வாதத்தின் பாரதூரத்தை விளங்கிக் கொண்டு அதற்கு எதிராக அரசியல், பண்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

# வடக்கு கிழக்கின் வளங்கள் பறிபோகும் அபாயம்

பத்தொன்பது வருட யுத்தம் வடக்கு கிழக்கை சின்னா பின்னப்படுத்திக் கொண்டது. பொருளாதார சமூக பண்பாட்டுத் தளங்களில் பாரிய அழிவுகளும் சிதைவுகளும் இடம் பெற்றன. அரசியல் கூட வெறும் துப்பாக்கிக் கலாச்சாரத்திற்குள் தள்ளப் பட்டது. இருப்பினும் இவற்றையெல்லாம் மீட்டுப் புதிய நிலைக்கு கட்டியெழுப்புவோம் என்ற ஒரு வகை உள்ளார்ந்த உறுதிப்பாடு மக்கள் மத்தியில் காணப்பட்டே வந்துள்ளது.

கொடுமையான யுத்த சூழலிலும் பல விடயங்களை மக்கள் இழக்காது பாதுகாத்தனர். ஆனால் அவ்வாறு பாதுகாத்தவற்றை 'சமாதான சூழலில்' கையிழக்க வேண்டிய அபாய நிலைக்கு இன்று வடக்கு கிழக்கு மக்கள் தள்ளப்பட்டு வருகின்றனர். யுத்த காலத்தில் வடக்கு கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்கள் திறந்தபொருளாதாரத்திற்கும் தனியார் மயத்திற்கும் உள்ளாக்கப்பட்டது. ராட்சத பல்தேசியக் கம்பனிகள் கால்பதித்துக் கொண்டன. சமூக பண்பாட்டுச் சீரழிவுகள் தாராளமாக உட்புகுந்து கொண்டன.

யுத்த சூழலும் அதன் கீழான நிர்வாகக் கட்டமைப்பும் மேற் கூறியவை அங்கு செல்வதற்குத் தடையாக இருந்தன. ஆனால் இன்று சமாதான சூழலில் அவை யாவும் படிப்படியாக அங்கு சென்று கால்பதித்து வருகின்றன.

மேற்குலக யப்பானியக் கம்பனிகள் ஒரு புறத்தாலும் இந்தியக் கம்பனிகள் மறுபுறத்தாலும் வடக்கு கிழக்கை நோக்கிப் பாய்ந்த வண்ணம் உள்ளன. ஏ9 பாதையால் பயணிக்கும் எவரும் அவற்றுக்கான விளம்பர அடையாளங்களைக் காண இயலும். குடாநாட்டின் பிரதான வீதிகளிலும் யாழ்நகரம் உட்பட சிறு நகரங்களிலும் பல்தேசியக் கம்பனிகளின் பாரிய விளம்பரங்கள் மக்களை விழுங்குவது போன்று வாய் பிளந்து நிற்கின்றன.

யாழ்-நகரம் உட்பட ஏனைய நகரங்களின் வியாபார நிலையங்களை அந்நிய நாடுகளின் பொருட்கள் ஆக்கிரமித்து வர்ண அழகு காட்டுகின்றன. இவற்றால் நடுத்தர வர்க்கம் அதற்கு மேற்பட்டவர்களும் அவற்றை நுகர்ந்தும் வருகின்றனர். இத்தகை நுகர்வுப் பண்பாடு மேலிருந்து கீழ் நோக்கிப் பாய்கின்றது. உணவு உடை இருப்பிடம் சுகாதாரம் கல்வி என்பன பற்றிய தூர நோக்கோ அவற்றைப் பெற வேண்டும் என்ற நியாயமான சிந்தனையோ இன்றி இவ்




• யாழ் நூலகத்திற்கு முன்பாக இருக்கும் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் சிலைக்கு முன்பாக உயரே எழுந்து நிற்கும் பன்னாட்டு கம்பனியின் விளம்பரம்

அந்நிய ஆடம்பரப் பொருட்கள் மீதான நுகர்வுப் பண்பாடு நாளாந்தம் மக்கள் மனங்களில் ஏற்றப்பட்டே வருகின்றன. ஒரு 'ஹீரோ ஹோண்டா' மோட்டார் சைக்கிளில் முறுக்கி இறுமி வெட்டி ஓடுவதே இளமைக்கு மௌசு என்ற சிந்தனை நிலைக்கு இளைஞர்களை தாராள பொருளாதாரக் கொள்கை ஆக்கிரமித்து நிற்கின்றது. அதற்கு புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணம் லட்சம் லட்சமாக அள்ளி இறைக்கப்படுகிறது. தேவை என்பதற்கு அப்பால் நுகர்வுப் பண்பாட்டின் மூலம் இந்திய யப்பானியக் கம்பனிகள் சுளை சுளையாகக் கொள்ளையிட்டுச் செல்கின்றன.

அதே வேளை உள்ளூர் உற்பத்திகள் யாவும் பாழடைந்து அழிந்து காணப்படுகின்றன. மண்ணோடும் மரங்களோடும் போராடி சுய உற்பத்தி எனப் பெருமைப் பட்ட காலம் வடக்கில் பழம் கதையாகி விட்டது. புனரமைப்புக்கு வழங்கப்படும் பணம் கூட சீமெந்து இரும்பு மரம் இன்னும் பிற அந்நியப் பொருட்களின் கொள்ளை லாபத்தால் உறுஞ்சப்பட்டே வருகின்றது. அந்நியக் கம்பனிகளின் ஆசான்களான அமெரிக்க மேற்குலக யப்பானிய அரசாங்கங்கள் வடக்கு கிழக்கில் சாமாதானம் வேண்டி நிற்பதன் சூட்சுமம் இவற்றில்தான் தங்கி நிற்கின்றன.

இதே வேளை இந்தியா ஒருபுறத்தால் வர்த்தகத்திலும் மறுபுறத்தால் ராணுவ விடயத்திலும் கவனமாகவும் இருந்து வருகின்றது. வடபுலத்தின் அமைந்துள்ள வலி வடக்கு பிரதேசம் பொன் கொழிக்கும் பூமி எனப்படும் செம் மண் பிரதேசமாகும் அதன் பெரும் பகுதி இன்றும் ராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்து வருகின்றது. இப்பிரதேசம் தொடர்ந்து ராணுவப் பிடியில் இருப்பதை இந்திய முன்னாள் உயர் ராணுவத் தளபதி நம்பியார் இலங்கை அரசங்கத்திற்கு சிபார்சு செய்து கொண்டமை குறிப்பிடத் தக்கதாகும். இப்போது அந்த அறிக்கையின் உள்நோக்கம் வெளியாகியுள்ளது. அதாவது பலாலி ராணுவ முகாமினுள் உள்ளடங்கியுள்ள விமான நிலையம் மீளமைப்பு என்ற பெயரில் இந்தியாவின் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு

தொடர்ச்சி 11ம் பக்கம்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# உத்தேச இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி

~ சிறீ ~

உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தம் யாரின் நலனுக்கு என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் என்று கூறப்பட்டாலும் இது இந்திய ஆளும் வர்க்க நலனுக்காகவே என்பது புரிந்துகொள்ளப்படல் வேண்டும்.

ஒரு சுதந்திர நாடாக இருந்த சிக்கிம் இன்று இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றாகிவிட்டது. பூட்டானும் இன்று கிட்டத்தட்ட இந்திய மாநிலமாகிவிட்டது. நேபாளத்தில் கம்யூனிஸ்ட்டுக்களை ஆட்சிபீடம் ஏறவிடாது தடுப்பதற்காக பல்லேறு வகைகளில் இந்திய இராணுவ அச்சுறுத்தல் நேபாளத்தின் மீது திணிக்கப்பட்டுள்ளது. பங்களா தேஷுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையில் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பங்களாதேஷில் கம்யூனிஸ்ட் படையினர் தமது பலத்தை அதிகரித்துக் கொண்டிருந்த சமயம் இந்தியப்படைகளை அனுப்பி அப்போது இந்தியாவில் ஒழிந்து கொண்டிருந்த முஜீபூர் ரகுமானை வீரப்பட்டம் சூட்டி பங்களா தேஷில் ஒரு பொம்மை ஆட்சியை நிறுவியது.

காஷ்மீரில் இருந்த இந்து மகாராஜாவிடம் ஒப்பந்தம் செய்து காஷ்மீரை தம்வசமாக்கிய இந்தியா அங்கு ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பு எடுக்க வேண்டும் என்ற ஐ.நா. தீர்மானத்தை இன்றுவரை அமுல் நடத்தாமல் கஷ்மீர் போராளிகளை பாக்கிஸ்தானின் ஒற்றர்கள் என்று கூறிவருகிறது.

இந்தியா சீனாவுடன் இப்போது மோதல்களில் ஈடுபடுவதில்லை.

மேற்கூறிய சூழலை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டால் மட்டுமே நாம் இந்தியாவின் நோக்கம் என்ன என்பதை எடைபோடலாம். இருந்தும்



இலங்கை தமிழ்த்தலைவர்கள் இந்தியாவை இலங்கைத் தமிழர்களின் தாய்நாடு என்கிறார்கள்.

இந்தியாவைத் தாய்நாடு என்று நமது தமிழ்த் தலைவர்கள் கூறுவதனால் சிங்களப் பேரினவாதிகள் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா இருக்கிறது சிங்களவர்களுக்கு இலங்கை மட்டுமே இருக்கிறது எனக் கூறச் சந்தர்ப்பம் ஏற்படுத்துகிறார்கள். இதனால் இலங்கை தமிழ் மக்கள் ஒரு தனியான தேசியம் என்பதை நிராகரிக்க பேரினவாதிகளுக்கு வசதியாகிறது.

உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்தாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக மாறுபட்ட கருத்துக்களை கூறுகிறார்கள். இலங்கைத் தேசிய இனப் பிரச்சினை தீரும் வரை இந்த ஒப்பந்தத்தை ஒத்திவைக்க வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எப். சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்.

இவ்வாறான ஒப்பந்தம் ஏற்படுவதை ஜே.வி.பி., சிஹல உறுமய, பூமி புத்திர கட்சி உட்பட யூ. என்.பி. யும், ஸ்ரீ.ல.சு.க.வும் வரவேற்கின்றன. இன்று சந்திரிகா அம்மா ஒப்பந்தம் செய்வதா அல்லது ரணில் ஐயா ஒப்பந்தம் செய்வதா என்ற போட்டியே நிலவுகிறது.

இந்த ஒப்பந்தம் தமிழர்களுக்கு எதிரானது. ஒப்பந்தமானது என்ன வார்த்தை ஜாலங்களைக் கொண்டிருந்தாலும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை மழுங்கடிப்பதற்காக சமாதானச் சூழல் என்ற போர்வையில் விரைவாக கைச்சாத்திடப் படவுள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்குப் புறம்பாக பலாலி விமான நிலையப் புனரமைப்புக்கெனத் தனியான ஒரு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவுள்ளது. பாரிய இந்திய விமானங்கள் வந்திறங்கக்கூடிய வகையில் இந்திய விமானப்படையின் மேற்பார்வையில் பலாலி விமான நிலையம் புனரமைக்கப்படவுள்ளது.

இலங்கை இந்தியா மீது போர் தொடுக்கமாட்டாது. ஆனால் இலங்கையில் ஒரு இடதுசாரி, ஜனநாயக அமைப்பு அதிகாரத்திற்கு வருவதை இந்தியா விரும்பாது. இந்தியாவுக்கு ஆமாம் போடும் அரசாங்கம் எதுவாக இருந்தாலும் அதற்கு இராணுவ ரீதியில் இந்தியா உதவும். உத்தேச ஒப்பந்தம் இந்தியாவின் நலனுக்காகவே மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை அரசாங்கங்கள் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்வாக அனைத்துத் தேசிய இனங்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்கு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப் போவதுமில்லை. அவ்வாறான ஒரு தீர்வை இந்தியா விரும்பவும் மாட்டாது.

உத்தேச ஒப்பந்தம் இலங்கையின் ஆளும் வர்க்கத்தின் நலனுக்கும் இந்திய ஆளும் வர்க்கத்தின் நலனுக்கும் மட்டுமே.

இந்தியா ஆளும் வர்க்கத்தின் சுயரூபத்தை விளங்கியும் விளங்காதவர்கள் போல தமிழ்த் தலைவர்கள் நடந்து கொள்வது அவர்களின் உயர்வர்க்க நலன்களையே அம்பலப்படுத்துகிறது.

# எதிரியின் முறுவல்

எதிரி முறுவலுடன் வந்தான்
மக்கள் முறுவலுடன் வரவேற்றனர்
மண் அங்குலம் அங்குலமாகப் பறிபோனது
எதிரி புகழுரைகளுடன் வந்தான்
மக்கள் மகிழ்வுடன் வரவேற்றனர்
மண் ஏக்கர் ஏக்கராகப் பறிபோனது
எதிரி பரிசுகளோடு வந்தான்
மக்கள் நன்றியுடன் வரவேற்றனர்
மண் சதுரமைல்களாகப் பறிபோனது
மக்கள் விழிப்புற்றபோது எதிரி
முறைப்புடன் கையில் ஆயுதங்களுடன்
கவசவாகனமேறி வந்தான்.
மக்கள் ஆயுதந் தரித்த போது
மண்ணை அபகரித்தவனால் மண்ணை ஆளஇயலவில்லை
எதிரி போர்நிறுத்தம் பற்றிப் பேசினான்
அமைதி பற்றியும் ஆயுதக் களைவு பற்றியும் பேசினான்
மக்கள் போரை நிறுத்தி அமைதி பற்றிப்பேச
ஆயுதங்களைக் களைந்த பின்
மண் மீண்டு அங்குலம் அங்குலமாக
ஏக்கர் ஏக்கராகச்
சதுரமைல்களாகப் பறிபோனது
எதிரியின் இனிய சொற்கள்
வலிய ஆயுதங்களிலுங் கொடியன

~ ஸ்வப்னா ~

### விக்கிரமபாகவின்

8ம் பக்க தொடர்ச்சி..

போராட்டத்துக்கு ஆதரவாகவும் சிங்கள மக்கள் மத்தியில் பேசி வருவதை துணிவான விடயமாக கொள்ளலாம். தமிழ் மக்களுக்கு அவர் பேசுவது சரியானதாகவும் தெரியலாம். ஆனால் அவர் விளம்பரத்திற்காகவே பேசிவருகிறார் என்பதே உண்மை. சிங்கள இனவாதத்திற்கு எதிராக மக்கள் இயக்கத்தை கட்டி வளர்க்க அவரது வெறும் விளம்பர விருப்பமும் தன்முனைப்பும் ரொஸ்கிச குறைபாடுகளும் தொடர்ந்தும் தடையாகவே இருந்து வருகின்றன.

எனவே சிங்கள பேரினவாததத்திற்கு எதிராக உரிய மக்கள் இயக்கத்தை கட்டி வளர்க்க வேண்டுமெனின் விக்கிரமபாகு போன்ற சீர்குலைவாளர்களின் வரையறைகளுக்கு அப்பால் அரசியல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதனை நேர்மையான இடதுசாரிகளாலேயே மேற்கொள்ள முடியும். விக்கிரமபாகு போன்ற போலிகளால் அதனை செய்ய முடியாது.

### பேரினவாதத்திற்கு...

1ம் பக்க தொடர்ச்சி..

தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ம.ம.முயும், மே.மா.ம.முயும் வெளிப்படுத்தியுள்ளன. இ.தொ.கா.நிராகரித்துள்ளது.

நிலவுகின்ற பேரினவாத, ஏகாதிபத்திய உலகமயமாதல் சூழலில் வித்தியாசமான அரசியல் நோக்கங்களுடனும் செயற்படும் வடக்கு கிழக்கு மலையக தமிழ் கட்சிகள் எவ்வாறு பேரினவாதத்திற்கு எதிராக புரிந்துணர்வுடன் செயற்படுவது என்பது பற்றியும் விரிவாக கலந்துரையாடி பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இணங்கிக் கொள்வதே சரியானதாகும். ஏதாவது ஒரு நடவடிக்கையில் இணைய வேண்டும் என்ற முன்முடிவுடன் அல்லது குறிப்பாக தேர்தலில் ஐக்கியப்பட்டு போட்டியிடவேண்டும் என்ற முடிவுடன் அன்றி பேரினவாதத்திற்கு எதிராக ஐக்கியப்பட்டு செய்யப்படக் கூடிய நடவடிக்கைகளை தேர்ந் தெடுத்து அவற்றை எவ்வாறு செய்வது என்று முடிவு செய்து இணக்கப் பாட்டிற்கு வரவேண்டும். பாராளுமன்றம் போன்ற சபைகளிலும் அதற்கு வெளியிலும் ஐக்கியப்பட்டு செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பொது இணக்கப்பாடு அவசியம்.

குறைந்தளவான நடவடிக்கைகளிலிருந்து தொடங்கி கூடுதலான நடவடிக்கைகளை நோக்கி பேரினவாதத்திற்கு எதிராக ஐக்கியப்பட்டு செய்யக்கூடிய நடவடிக்கைகளை தேர்ந்தெடுத்து, அவற்றை எவ்வாறு செய்வது என்று முடிவு செய்து இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். பாராளுமன்றம் போன்ற சபைகளிலும் அதற்கு வெளியிலும் ஐக்கியப்பட்டு செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பொது இணக்கப்பாடு அவசியம். குறைந்தளவான நடவடிக்கைகளிலிருந்து தொடங்கி கூடுதலான நடவடிக்கைகளை நோக்கி பேரினவாதத்திற்கு எதிராக ஐக்கியப்பட்ட அரசியல் போராட்டம் வளர்ச்சியடைவதே ஆரோக்கியமானதாகும். ஐக்கியப்பட்ட போராட்டம் ஒரேயடியாக முழுமை பெறவேண்டும் என்ற அவாவில் செயற்பட்டு ஆகக் கூடுதலான சக்திகளின் பரந்துபட ஐக்கியத்தை நோக்கிய பயணத்தை கைவிட்டுவிடக் கூடாது. ஏனெனில் பேரினவதாதத்திற்கு எதிரான போராட்டம் அவ்வளவு இலகுவானதாக இருக்க முடியாது.

### சமாதான சூழ்நிலை..

1ம் பக்க தொடர்ச்சி..

கொள்ளும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டிருக்கும். சமாதான நடவடிக்கைகளில் ரணில் அரசாங்கத்தின் தாமதங்கள் தயக்கங் கள் அவரின் சமாதான நடவடிக்கை களுக்கு ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் தற்போதைய சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி கூட்டு என்பன அவ்வாறான நடவடிக்கைகளே.

இலங்கையின் அரச யுத்தம் தீவிரமடைந்த போதெல்லாம் தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்த்து முகம் கொடுத்தார்களோ அதே போன்று சமாதான சூழிநிலையில் தங்கள் மீது திணிக்கப்படும் பேரின மேலாதிக்கத்தை எதிர்த்து முறியடிக்க வேண்டும். சிங்கள மக்களும் ஏனைய அடக்கப்படுகின்ற தேசிய இனத்தவர்களும் எவ்வாறு யுத்தத்தை எதிர்த்தும் தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளை வலியுறுத்தியும் மக்கள் இயக்கங்களை முன்னெடுத்தார்களோ அதே போன்று சமாதான சூழ்நிலையில் உறுதியான சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் பேச்சுவார்த்தைகளை நடத்தவும் மக்கள் இயக்கங்களை முன்னெடுக்கும் கடப்பாட்டை கொண்டுள்ளனர்.

அவ்வாறான பரந்துபட்ட மக்கள் போராட்ட இயக்கங்களினூடாகவே சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான பேரினவாத நடவடிக்கைகளை முறியடிக்க முடியும். எந்தவொரு பேரினவாத சக்தியையும் சமாதான நடவடிக்கைகளுடன் இணங்கிப் போகச் செய்ய முடியும்.

### மாக்ஸியத்தின்....

9ம் பக்க தொடர்ச்சி...

குருமாரினதும் ஆசிகளைப் பெறுவதும் சோதிடர்களது ஆலோசனைப்படியே முக்கியமான கருமங்களைச் செய்ய நேரத்தையும் இடத்தையும் முடிவு செய்வதும் கூடுதலான அளவிற் காணக் கூடியதாகி விட்டது. ஊடகங்களும் இதற்கு ஊக்கமளிக்கின்றது. இன்னமும் தம்மை மாக்சியவாதிகளாகக் காட்டிக் கொள்ள விரும்புகிற ஜே.வி.பி., 2001 பொதுத் தேர்தலையோட்டித் தான் முன்வைத்த அறிக்கையை முதலில் பௌத்த மகா சங்க மகாநாயக்கர்களிடம் விழுந்து வணங்கிச் சமர்ப்பித்த காட்சி நமது சமூகத்தின் பகுத்தறிவுச் சிந்தனை எவ்வளவு அவல நிலையில் நிலையில் உள்ளதென்று உணர்த்துகிறது.

ஒரு மாக்சியவாதி மூடநம்பிக்கைகள் சாதி ஆசாரம் ஆணாதிக்கம் என்பனவற்றைப் பேணுகிற சடங்கு சம்பிரதாயங்கள், சமூக விடுதலைக்குத் தடையாக நிற்கும் மரபுகள் என்பன வற்றை மிகக் கண்டிப்பாக மறுத்து நிற்க வேண்டும். அரசியலில் மதம் ஊடுருவுதையும் மத அடிப்படையில் சமூகம் பிளவுபடுத்தப் படுவதையும் எதிர்ப்பது அவசியம்.

மக்களது மத நம்பிக்கைச் சுதந்திரம் வழிபாட்டுச் சுதந்திரம் என்பனவற்றை ஏற்று மதிக்கிற அதே வேளை, தமது நடத்தை மதவாதம், மூட நம்பிக்கைகள் பழமை வாதம் போன்றவற்றை ஊக்குவிக்காதபடி எச்சரிப்புடனும் இருக்க வேண்டும்.

ஏகாதிபத்தியம் இன்று பெரிய மதபீடங்களுடனும் தீவிர மதவாதிகளுடனும் மதப் பிரசாரகர்களுடனும் இணக்கப்பாட்டுடன் இருப்பது ஏன், அது எவ்விதமான மரபை ஊக்குவிக்கிறது என்பன நம் கவனத்துக்குரிய விடயங்கள்.

~ இமயவரம்பன் ~

### வடக்கு கிழக்கின்

10ம் பக்க தொடர்ச்சி

வரப்படமுடிவாகி உள்ளது. மேலும் இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்தானதும் இது முழுமை பெற்று விடும்.

அவ்வாறே திருகோணமலையின் எண்ணெய்க்குதங்கள் மூன்றை இந்தியா பெற்று விட்டது. விநியோகத்தையும் பொறுப் பேற்று வருகின்றது. விரைவில் திருகோணமலையின் கட்டுப்பாடு இந்தியாவின் கைகளுக்கு வந்து விடும். அப்போது அமெரிக்கா தனது உலக மேலாதிக்கக் கரங்களைச் சும்மா வைத்திருக்க மாட்டாது.

மேலும் வடக்கு கிழக்கு கடலில் யப்பான், இந்தியா, சீனா ஆகிய நாடுகளை மீன்பிடிப்பிற்கு தாராளமாக அனுமதிக்கப்பட்டுள்ளான. அவ்வாறே கனிவளங்கள் சிலவும் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. இவற்றுடன் வடக்கு கிழக்கில் வளங்கள் பற்றியும் அவற்றை ,விருத்தி செய்வது பற்றியும் அரச சார்பற்ற திருவனங்கள் கள ஆய்வுகளைச் செய்து வருகின்றன. நிலநீர் பயன்பாடு முதல் மக்களின் உழைப்புத்திறன் வரை ஆராயப்படுகின்றன. இவை அபிவிருத்திப் போர்வையில் அந்நிய பல்தேசிய கம்பனிகளின் உள்நுளைதல்களுக்கேயாகும்.

பொருளாதார ராணுவ ஊடுருவல் ஒருபுறத்தால் இடம் பெற மறுபுறத்தால் பண்பாட்டுச் சீரழிவுகள் வேகமடைந்து குச்சுக் கிராமம் வரை பரவி வருகின்றன. சின்னத்திரைகள் பெருகி வருகின்றன சினிமா மோகம் பரவி நிற்கிறது. ஒளி ஒலி பரப்புக்கள் வீட்டிற்கு வீடு நிரம்பி வழிகின்றன. மது பானக் கடைகள் சகல இடங்களிலும் காணப்படுகின்றன. யாழ் பல்கலைக்கழகத்தைச் சுற்றிய நாற்புற வீதிகளிலும் ஐம்பதுக்கு மேற்பட்ட மதுபானச்சாலைகள் வெளிப்படையாகவும் மறை முகமாகவும் செயல்பட்டு வருவதாக அறியமுடிகிறது. என்றால் நுகர்வுப் பண்பாடு எங்கே எதில் சென்று நிற்கின்றது என்பதை அளந்துகொள்ளலாம்.

இந்நிலையில் தான் குடாநாட்டில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் நிறுவும் முயற்சிகள் இடம் பெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதே வேளை மூன்று நட்சத்திர ஹோட்டல்கள் முதல் வெவ்வேறு வகைப்பட்ட கிளப்புகள் என்பன வற்றுக்கும் கழுகுக் கண்கள் காத்து நிற்கின்றன. சமூக சமத்துவ நீதிக்கும் நியாயத்திற்கும் அதன் பின் தேசிய இன விடுதலைக்கும் இரத்தம் சொரிந்து உயிர் துறந்து போராடி சிவப்பேறிய வடபுலத்து மண்ணிலே இது வரை இழக்காது பாதுகாத்து வந்த பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டு அம்சங்களின் சிறந்தவைகள் அனைத்தையும் சாதகமானவைகளயும் கையிழக்கும் அபாய நிலைக்கு இன்றைய சமாதான சூழல் கொண்டு வந்து விட்டுள்ளது. இத்தகைய அபாய அறிப்பையே தற்போது காண இயலுமாகின்றது. இதற்கு எதிராக விழிப்புறுவதும் எதிர்த்து நிற்பதும் மக்கள் முன் உள்ள பெரும் கடமையாகும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 11 பெப்ரவரி 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 66

## தீராத நிலக் கண்ணிவெடி அபாயம்

யாழ் குடாநாட்டில் 11,79,953 சதுர மீற்றர் பரப்பளவான இடத்தில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதில் இதுவரை 260168 மீற்றர் பரப்பளவான இடத்தில் மட்டுமே அகழ்வு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இது இவ்வாறிருக்க சில இடங்களில் கண்ணிவேடி அகற்றும் வேலைகளுக்கு இலங்கை இராணுவத்தினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

# மேல் கொத்மலைத்திட்டம் முற்றாக கைவிடப்பட வேண்டும்.

## மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம்

'மேல் கொத்மலைத்திட்டம் முற்றாக கைவிடப்பட வேண்டும். எந்தவொரு நீர்த்தேக்கத் திட்டமும் எமது நாட்டிற்கு இனிமேல் தேவை இல்லை. பாரிய நீர்மின் திட்டங்களுக்கு மாறாக அளவில் சிறிய நீர்மின்திட்டங்கள் மாற்றீடாகாது நீரைத் தேக்கி வைக்காமல் ஓடும் நீரில் நீர்மின்னை பெற்றுக் கொள்ளும் திட்டங்கள் அனல்மின்சாரம், சூரிய ஒளியிலிருந்தும் காற்றிலிருந்தும் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும் திட்டங்கள் போன்றனவே, அழிவு பூர்வமான நீர்த்தேக்கத்திட்டங்களுக்கு மாற்றாகும்' என்று மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

தற்போது மீண்டும் மேல் கொத்மலை திட்டத்தை முன்னெடுக்க மின்சாரசபை ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதனை தடுத்துநிறுத்தி அனைத்து மக்களும் அமைப்புகளும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றும் அவ்வியக்கம் அறைகூவல் விடுத்துள்ளது.

இதுவரையும் மேல் கொத்மலை திட்டத்தை முற்றாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று பகிரங்கமாக பேசிவந்தது இ.தொ.கா அத்திட்டத்திற்குப் பதிலாக இ.தொ.கா சமர்ப்பித்துள்ள 'டெவன் ஓயா நீர்மின்திட்டத்' தை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஆர். யோகராஜன் எம்.பி கேட்டுக் கொண்டுள்ளார்.

இது இ.தொ.கா வினது வழமையான நழுவல் போக்கில் ஒன்றாகும். எந்தவொரு போராட்டத்தையும் பெரிதாக பகிரங்கப்படுத்தி பின்பு அதே வேகத்தில் பின்வாங்குவதும் அவ்வாறு பின்வாங்கியதை போராட்டத்தின் வெற்றி என்று கூறுவதும் இ.தொ.கா வின் வரலாறாகும். இ.தொ.கா வின் இந்த விட்டுக்கொடுப்பை அதன் அங்கத்தவர்களில் அநேகர் ஏற்றுக் கொள்ளவில்லை. மேல் கொத்மலைத் திட்டம் முற்றாக கைவிடப்பட வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை ஆகும்.

நுரைச்சோலை அனல் மின்சாரத்திட்டம் உறுதியான மக்கள் போராட்டத்தினாலேயே கைவிடப்பட்டது. எப்பாவல கனியத்தை வெளிநாட்டு கம்பெனிக்கு விற்பனை செய்ய வேண்டாம் என்று தொடர்ச்சியாக மக்கள் போராட்டம் நடைபெறுகிறது இவற்றிலிருந்து பாடங்களை கற்றுக் கொண்டும் அனுபவங்களை பெற்றுக் கொண்டும் மலையக மக்களும், மேல் கொத்மலைத் திட்டத்தால் பாதிக்கப்படவுள்ள அனைத்து மக்களும் தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் போராடினாலன்றி மேல் கொத்மலைத் திட்டத்தை தடுத்து நிறுத்த முடியாது.

---

## பொது இணக்கப்பாட்டுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவும்

ஐக்கிய தேசிய முன்னணியின் சமாதான முயற்சிகள் கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றன. ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான அதிகாரப் போட்டியினால் அரசாங்கம் நிலையாக இல்லை. இந்த நிலை தொடருமாயின் சமாதான முயற்சிகள் முறிவடைவதுடன் நாட்டின் அமைதிக்கு பங்கமேற்படும். நாட்டின் பொருளாதார நிலை மேலும் பாதிப்படையும், நடைமுறையில் இருக்கின்ற விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ், யார் ஜனாதிபதியாக இருந்தாலும், பாராளுமன்றத்தில் எந்தவொரு தனிக்கட்சிக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கப் போவதில்லை. இந்நிலையில் இலங்கையை மாறிமாறி ஆண்டுவரும் இரண்டு பெரிய கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுடன் செயற்பட்டாலன்றி தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை கண்டு நாட்டில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட முடியாது.

இதை வலியுறுத்தி புதிய ஜனநாயக கட்சி ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தனித்தனியாக கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு ஐ.தே.முன்னணியிடம் இல்லை என்பதற்காகவும், பாதுகாப்பு அமைச்சை திரும்பவும் ஜனாதிபதி ஐ.தே.முயிடம் கொடுக்க மறுப்பு தெரிவித்து வருகிறார் என்பதற்காகவும் பிரதமர் சமாதான முயற்சிகளிலிருந்து விலகிக் கொள்ளக் கூடாது என்றும் ஐ.தே.மு புலிகள் இயக்கத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

### ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் புதிய ஜனநாயக கட்சி கடிதம்

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை திருப்பி கொடுக்காத பட்சத்தில் சமாதான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் சில விடயங்களை பிரதமர் பகிர்ந்து கொண்டு சமாதான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுக்க முன்வர வேண்டும் என்று பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி பிரதமரிடம் பாதுகாப்பு அமைச்சை ஒப்படைக்க வேண்டும் அல்லது அவர் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு தேவையான பாதுகாப்பு அமைச்சின் விடயங்களை அவரின் பொறுப்பில் கொடுக்க வேண்டும் என்று ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஜனாதிபதிக்கு இந்நாட்டு மக்கள் இரண்டு முறை ஆணை வழங்கியுள்ளனர். அதே போன்று ஐ.தே.முன்னணிக்கு ஒரு தடவை ஆணை வழங்கியுள்ளனர். அதனால் இந்நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியல் தீர்வு காணும் பொறுப்பிலிருந்து ஜனாதிபதியோ பிரதமரோ விலகிக் கொள்ள முடியாது என்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

---

## பெற்றோலியத்தின் மீதான கட்டுப்பாட்டை இலங்கை அரசு இழந்துவிட்டது

பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்யவும், களஞ்சியப் படுத்தவும் விநியோகிக்கவும் இலங்கை -இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கான (டுஐழுஊ) அனுமதிப்பத்திரத்தை அண்மையில் இலங்கை அரசாங்கம் வழங்கியது. இத்துடன் பெற்றோலியத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு இருந்த கட்டுப்பாடு முற்றாகவே இல்லாமல் போய்விட்டது எனலாம்.

இலங்கையில் சில்லறை பெற்றோலிய விநியோகத்தை செய்வதற்காக இந்திய கம்பெனிகள் இங்கு வந்ததாகவே கூறப்பட்டது. தற்போது இலங்கையின் முழுப் பெற்றோலிய வர்த்தகத்தையே இந்திய கம்பெனிகள் தீர்மானிப்பனவாக மாறியுள்ளன. ஏற்கனவே திருகோணமலையிலுள்ள எண்ணெய் சேகரிப்பு கிணறுகளை இந்தியா பெற்றுக் கொண்டது. இலங்கை மின்சார சபையிலும் இந்திய மின்சார கம்பெனி நியாயமான கட்டுப்பாட்டை செலுத்தி வருகிறது. இந்திய மின்சார தொழிநுட்பவியலாளர்கள் மட்டுமல்ல சாதாரண தொழிலாளர்களும் இலங்கைக்கு வந்து மின்சார துறையில் வேலை செய்வது அதிகரித்து வருகிறது.

ஒரு நாட்டின் எரிபொருள், நீர்மின், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, தகவல்துறை என்பவற்றில் அரச கட்டுப்பாடு இல்லாது போகும்போது சாதாரணமக்கள் பெரிதும் பாதிக்கப் படுவர். அவை வெளிநாட்டு கட்டுப் பாட்டிற்குள் போகும்போது இறைமை, சுயாதிபத்தியம் என்பன செயலிழக்கிறது.

இலங்கையின் வர்த்தகத்தில் குறிப்பாக எரிபொருள், மின்சாரம், சுகாதாரம் போன்றவற்றில் இந்திய மூலதனம் பிரதான இடத்தை வகிக்கிறது. இலங்கை புகையிரதசேவையையும் பகிரங்கப் போக்குவரத்து சேவையையும் கூட இந்திய மூலதனம் பொறுப்பேற்க விருக்கிறது.

இதனால் இலங்கையின் சுயபொருளாதாரம் வளர்ச்சியடைய முடியாததுடன் முக்கிய விடயங்களில் அரசக்கட்டுப்பாடு இல்லாது போக சாதாரண மக்கள் பாதிக்கப்படுவர்.

உலகமயமாகியுள்ள மூலதனத்தில் அமெரிக்க மூலதனம் என்றும் இந்திய மூலதனம் என்றும் வித்தியாசத்தைப் பார்க்க முடியாது. ஏகாதிபத்திய உலகமயமாதல் சூழ்நிலையில் இலங்கைக்குள் நுழையும் இந்திய மூலதனம் குறைந்தளவான சுரண்டலைச் செய்யப்போவதில்லை. பெருகிவரும் இந்திய மூலதனத்தால் இலங்கையில் இந்தியாவின் விஸ்தரிப்பும், மேலாதிக்கமும் நிலைகொள்வதற்கே வாய்ப்பு அதிகமாக இருக்கும்.

அத்துடன் இந்திய மூலதனம் உலகமயமாகி வருவதும் இப்பிராந்திய நாடுகளுக்கு மட்டுமல்ல ஏனைய மூன்றாம் உலகநாடுகளுக்கும் பாதகமாகவே இருக்கும்.



கடந்த வருடம் கொழும்பில் இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் (Indian Oil-Corp) முதலாவது சில்லறை விற்பனை நிலையத்தை மாளிகாவத்தையில் திறந்து வைத்த இந்திய பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சர் ராம் நாய்க் வாகனமொன்றுக்கு எரிபொருள் நிரப்புவதை காண்கிறீர்கள்.

---

## இலங்கை....

1ம் பக்க தொடர்ச்சி..

செலுத்தி வந்தது. அதனால் இந்தியாவுக்கு பாதிப்பு ஏற்படாது என்பதை உறுதி செய்து கொள்ளும் வகையில் பாதுகாப்பு உடன்படிக்கையை செய்து கொள்ளும் படி ஐ.தே.மு அரசாங்கத்தை இந்தியா நிர்ப்பந்தித்து வந்தது. அதற்கு ரணில் பச்சைக் கொடி காட்டி இருந்தார்.

தற்போது நடைமுறையில் இருக்கும் 1978 அரசியல் யாப்பின்படி பாதுகாப்பு உடன்படிக்கைகள் ஜனாதிபதி அல்லது அவரின் இணக்கத்துடனேயே செய்யப்பட வேண்டும். அதனால் இந்தியா தற்போது ஜனாதிபதி சந்திரிகாவை நிர்ப்பந்தித்து வருகிறது. இதன் மூலம் இலங்கையை முற்றாக இந்தியாவின் பிடிக்குள் கொண்டு செல்லுவதிலேயே இந்திய ஆளும்வர்க்கம் அக்கறையாக இருக்கிறது.

இலங்கையின் இறைமை, சுயாதிபத்தியம் என்பனபற்றி அதிகமாக பேசும் இலங்கையின் தலைவர்கள் அவற்றை பாதிக்கும் வகையில் இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கையை செய்து கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளனர். இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கையை செய்து கொண்டு அதனை மையமாக வைத்து இலங்கையின் வெளிவிவகார கொள்கை வகுக்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பி கூறுவதும் வேடிக்கையானது. இந்தியாவுடனான ஐக்கியம் என்பது இலங்கையை இரண்டாம் நிலைக்கு தள்ளும் சமத்துவமற்ற ஐக்கியமாக இருக்கக் கூடாது. இலங்கையை இந்தியாவின் காலனியாக்கும் முயற்சிகள் முறியடிக்கப்பட வேண்டும்.

வெளிநாடுகளுடனான பாதுகாப்பு உடன்படிக்கைகள் குறிப்பாக இந்தியாவுடனான பாதுகாப்பு உடன்படிக்கை என்பது இலங்கையின் இறைமை சுயாதிபத்தியம் என்பவற்றுக்கு எதிராகவும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும், பொதுவாக இலங்கை மக்களின் உரிமைப் போராட்டங்களுக்கும் எதிராகவுமே அமையும். இதன் மூலம் இலங்கையின் பாதுகாப்பு விடயங்களில் தலையிட வெளிநாடுகளுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்க வழி ஏற்படும். அதனால் இவ்வாறான உடன்படிக்கைகள் கைவிடப்பட வேண்டும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.